Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 14 ஞாயிற்றுக்கிழமை (29.07.2012) பக்கங்கள் 20 ஓசை – 302


முதுமை என்பது சாபமா? (10)


சிறுவர்களுக்கு தடை இல்லை (12)


டிமிக்கி கொடுத்தவருக்கு தண்டம் (13)


பிரான்ஸில் பொலிஸ்சுக்கு அடி (18)


அரசியலில் குதிக்கிறார் (17)

# ஆட்கடத்தல்களைத் தடுக்க ஆஸி-இலங்கை கூட்டு

(சிட்னி)

சட்டவிரோதப் படகுகள் மூலம் ஆட்கடத்தல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கை அரசும், அவுஸ்ரேலிய அரசும் ஒருங்கிணைந்து செயலாற்றுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது.

அவுஸ்ரேலியாவுக்குச் சட்ட விரோதமாக ஆட்களைக் கடத்தும் கேந்திர நிலையமாகத் தற்போது இலங்கை மாறியிருக்கிறது.

இவ்வாறான ஆட்கடத்தலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு இலங்கைக் கடற்படையினரால் முடியாமல் உள்ளது.

தற்போது இவ்விடயம் தொடர்பாக இரு நாடுகளும் இணைந்து செயற்படுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது.

புகலிடம் கோரி அவுஸ்ரேலியாவிற்குள் பிரவேசிப்போரை நாடு கடத்துவதன் மூலம் சட்ட விரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளைத் தடுக்க முடியும் என இலங்கைக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். இலங்கைக் கடற்படையினரினால் வரையறுக்கப்பட்ட அளவில் மட்டுமே புகலிடக் கோரிக்கையாளர் படகுகளை தடுக்க முடிவதாக உயர் கடற்படை அதிகாரி என். அட்டிகல தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்பரப்பிற்கு அப்பால் ரோந்துப் பணிகளில் ஈடுபடும் வல்லமை கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கைக் கடற்படையினர் ரோந்துப் பணிகளுக்காக இரண்டு கப்பல்களை மட்டுமே பயன்படுத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். மற்றுமொரு கப்பலை அவுஸ்ரேலியா வழங்கினால்

(19) ஆம் பக்கம் பார்க்க

## பிடியாணை நபர்கள் 61 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மற்றும் காங்கேசன் துறைப் பொலிஸ் பிரிவுகளில் பிடியாணை பிறப் பிக்கப்பட்ட 61 பேர் கடந்த வாரத்தில் பொலிஸாரினால் பிடிக்கப்பட்டுள்ளதாக யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே

(19) ஆம் பக்கம் பார்க்க

## முல்லையில் கைத்தொழில் அபிவிருத்தி மாவட்டக் காரியாலயம் திறப்பு


(முல்லைத்தீவு)

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் மாவட்டக் காரியாலயத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முல்லைத் தீவில் திறந்து வைத்தார்.

நேற்று முல்லைத்தீவிற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் மணற் குடியிருப்பு பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட மாவட்ட காரியாலயத்தை திறந்து வைத்தார். முன்பதாக பெயர்பலகை திரைநீக்கம் செய்து வைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாவட்ட காரியாலயத்தினை திறந்து வைத்தார். இதன் போது அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி முல்லைத்தீவு அரச அதிபர் வேதநாயகன்,

(19) ஆம் பக்கம் பார்க்க

## பாகிஸ்தான் அமைச்சரின் கொழும்பு விஜயம் இரத்து

(கொழும்பு)

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் திடீரென இரத்துச் செய்துள்ளார். எனினும் இதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஹினா ரப்பானிகாரின் கொழும்பு விஜயம் கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார

(19) ஆம் பக்கம் பார்க்க

## நல்லூரில் நகை திருடிய கும்பல் இயக்கச்சியில் கைது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கொடியேற்றத் திருவிழாவின் போது நகைகளைத் திருடிய கும்பல் ஏ-9 பிரதான வீதியில் இயக்கச்சிப் பகுதியில் உள்ள குளம் ஒன்றில் அந்த நகைகளை அணிந்தவாறு குளித்துக் கொண்டிருக்கையிலேயே பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருப்பதாக யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.


நேற்று யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் தாலிக்கொடி உட்பட திருடிய நகைகளுடன் ஹயேர்ஸ் வாகனமொன்றில் தப்பிச் சென்ற அந்தக் கும்பல் இயக்கச்சிப் பகுதியில் பிரதான வீதியோரம் இருக்கும் குளம் ஒன்றில் அன்றைய தினம் அந்த நகைகளை அணிந்து குளித்துக் கொண்டிருக்கையிலேயே யாழ். பொலிஸாரினால் இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். மேற்படி சம்பவத்துடன்

(19) ஆம் பக்கம் பார்க்க

## நீண்ட காலக் குறைபாடு ஒரே நாளில் நிவர்த்தி

### வலி.மேற்கு பிரதேசசபை எதிர்கட்சித் தலைவர் நடவடிக்கை



கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக வலிகாமம் மேற்கில் உள்ள மூளாய் பித்தனை இந்து மயான மண்டபமானது கூரை ஓடுகள் இல்லாமல் இருந்து வந்த நிலையில் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியிருந்தனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் எண்ணெய் அகழ்வாராய்ச்சி வெற்றியை நோக்கி நகர்வு

(மன்னார்)

மன்னார் கடற்பரப்பில் வெற்றிகரமாக எண்ணெய் அகழ்வாராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்ட கெய்ன் லங்கா நிறுவனம் அடுத்த வருடம் நடுப்பகுதியில் இரண்டாம் கட்ட அகழ்வாராய்ச்சிப் பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாக கெய்ன் இந்தியா தெரிவித்துள்ளது.

600 சதுரகிலோமீற்றர் பரப்பளவில் 3D தரவுகள் மூலம் அதிர்வுகள் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட் டுள்ளதுடன் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளை அடுத்தாண்டு நடுப்பகுதியில் மேற்கொள்ள முடியும் என கெய்ன் லங்காவின் தாய் நிறுவனமான இந்தியா வெளியிட்டுள்ள 2012/2013 காலாண்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மன்னார் கடற்பரப்பில் கெய்ன் லங்கா நிறுவனத்தால் கண்டெடுக்கப்பட்ட எரிவாயு கிணறுகளான Dorado Barracuda வின் வர்த்தகப் பெறுமதியை பெற்றோலிய வள

(19) ஆம் பக்கம் பார்க்க

## அரசின் பழிவாங்கல்

### சாடுகிறார் சம்பந்தன்

மனிதக் கடத்தல் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட திருமலை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் முந்தைய நாடாளுமன்றத் தேர்தல்களில் அரசங்கத்திற்கு ஆதரவு அளித்தவர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியுள்ளார்.

அவர், அரசாங்கத்திற்கான ஆதரவை விலக்கிக்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடுவதாலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் இரா. சம்பந்தன் எம்.பி. கூறினார். எனினும்,

(19) ஆம் பக்கம் பார்க்க

## கிழக்குத் தேர்தல் களம் வியூகம் வகுக்கிறது ஐ.தே.க.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசிங்க நேற்று மாலை மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார். கிழக்கு மாகாண சபை தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும், ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்களை சந்தித்து கலந்துரையாடினார். இக்கலந்துரையாடல் ஐக்கிய தேசியக் கட்சியின் கிழக்கு மாகாண

(19) ஆம் பக்கம் பார்க்க

# வளமடைகின்ற பாடசாலைகள் சிறந்த கல்வியை வழங்கவேண்டும்

## சில்வேஸ்திரி அலெலன்ரின் வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)


அபிவிருத்தியினூடாக வளமடைகின்ற பாடசாலைகள் சிறந்த கற்றல் செயற்பாட்டை மாணவர்களுக்கு வழங்க வேண்டுமென ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்தார்.

யாழ். வைத்தீஸ்வரா கல்லூரியின் தொழில்நுட்ப ஆய்வு கூடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று கல்லூரி அதிபர் மகேந்திரன் தலைமையில் நடைபெற்றபோது இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், கடந்த கால யுத்தத்தினால் சேதமடைந்த பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்வதுடன் வளப்பற்றாக்குறை நிலவுகின்ற பாடசாலைகளை இனங்கண்டு விசேட செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்து சிறந்த கற்றல் செயற்பாட்டில் ஈடுபடக்கூடியதான வழியினை ஏற்படுத்தித் தருவதே எம்முடையதும், அமைசசரதும் நோக்கமாகவுள்ளது.

எனவே அபிவிருத்தியினூடாக வளமடைகின்ற பாடசாலைகள் சிறந்த கற்றல் செயற்பாட்டை மாணவர்களுக்கு வழங்கி நற்பிரஜைகளை உருவாக்குவதற்கான முயற்சிகளை முனைப்புடன் செயற்படுத்த வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். மகிந்த சிந்தனை எதிர்கால நோக்கு மறுமலர்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1000 இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் விசேட செயற்திட்டத்தில் யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் முதலாவதாக இப்பாடசாலையிலேயே அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் கல்லூரிச் சமூகத்தினர் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

# நல்லூரில் நம்பி தாகம் தீர்க்கலாம்

(யாழ்ப்பாணம்)



நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தினை முன்னிட்டு இயங்கிவரும் தாக சாந்தி நிலையங்களின் சுகாதார நிலைமைகளை யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் கண்காணித்தும் பரிசோதனை நடாத்தியும் வருகின்றனர். நேற்று முன்தினம் தாகசாந்தி வழங்கும் போது சுகாதார செயற்பாடுகளை சுகாதார பரிசோதகர்கள் அவதானித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிகரம் நிறுவனத்தின் கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பிரித்தானியா, அவுஸ்ரேலியா, கனடா, அமெரிக்கா உள்ளிட்ட 29 நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவது தொடர்பான விளக்கக் கருத்தரங்கு இன்று காலை 10.00 மணிக்கு யாழ்.ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இதன்போதே மேற்படி பல்கலைக்கழகங்களுக்கான உடனடி அனுமதியும் வழங்கப்படவுள்ளது. 15 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் வடக்கு மாகாணத்திற்கான பிரதிநிதியான சிகரம் கல்வி தொழில் வழிகாட்டல் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கருத்தரங்கில், உலகம் முழுவதும் 29 நாடுகளின் 300 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக வலைப்பின்னலைக் கொண்டுள்ள Laureate International Universities Network ஐ ஆசியப் பிராந்தியத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் INTI Laureate International பல்கலைக்கழகப் பிரதிநிதி மோசஸ் (Moses) கலந்துகொண்டு பல்கலைக்கழங்கள் மற்றும் கற்கைநெறிகள் தொடர்பில் விளக்கமளிக்கவுள்ளார்.

# பெருங்குளம் அம்மனுக்கு பாற்காவடியும், தீ மிதிப்பும்

(வேலணை)

வேலணை பெருங்குளம் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் 8 ஆம் திருவிழாவான இன்றைய தினம் காலை 8.00 மணியளவில் வேலணை கிழக்கு தவிடுதின்ணிப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் பாற்குடம் ஏந்தி ஊர்வலமாக வந்து ஸ்ரீ முத்துமாரி அம்மனுக்குப் பால் அபிஷேகம் நடைபெறவிருக்கின்றது அன்றைய தினம் இரவு 10.00 மணியளவில் அம்பாள் ஆலயத்திற்கு முன்னால் பிரமாண்டமான தீ மிதிப்பு வைபவம் இடம்பெற இருக்கின்றது.

தீ மிதிப்பு நிகழ்வில் பெருந்தொகையான மக்கள் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் ஆலய நிர்வாகத்தினர் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (05)

# திருமுறைப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் எடுக்கும் திருமுறைப் பெருவிழா எதிர்வரும் 01.08.2012 புதன்கிழமை காலை 8.00 மணிக்கு யாழ்ப்பாணம், கந்தர்மடம் அரசடி வீதி அருள்மிகு ஸ்ரீ செல்வநாகபூசணி அம்பாள் தேவஸ்தானத்தில் ஆலய அறங்காவலர்களின் அனுசரணையுடன் மன்றத்தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

காலை 8.00 மணிக்கு ஆலயப் பூசை, 8.30 மணிக்கு அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் பன்னிருதிருமுறைப் பாராயணம், சமயக் குரவர் நால்வரும் திருமுறைச்சுவடிகளுக்கும் சோடசோபசாடு பூசை மன்றம் நடத்தும் இலவசத் தேவாரப் பண்ணிசைப் பயிற்சியில் பங்குபற்றும் மாணவர்களின் தேவாரப் பண்ணிசை, தலைமையுரை, பண்ணிசைப் பரீட்சையில் சித்தி எய்தியோருக்கான சான்றிதழ், பரிசுகளை மன்றத் தலைவர் வழங்கிக் கௌரவிப்பார். செயலாளரின் நன்றியுரை தேவாரப்பாராயணத்துடன் நிறைவுபெற்று மகேஸ்வர பூசை இடம்பெறும். விழாவிற்கான ஒழுங்கமைப்பை சி.கிருஷ்ணமூர்த்தி மேற்கொண்டுள்ளார்.

## மரம் கடத்திய மூவர் கைது

செட்டிகுளம் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக முதிரை மரங்களை வெட்டிக் குற்றிகளாக்கி கடத்தலில் ஈடுபட்டிருந்த மூன்று பேர் வவுனியாப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 23 ஆம் திகதி நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் உழவு இயந்திரம் ஒன்றுடன் 13 முதிரை மரக்குற்றிகளும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. நேற்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (பா)

## சிறுத்தைக் குட்டி மீட்பு

கிளிநொச்சி அம்பலப் பெருமாள் காட்டுப்பகுதியில் சுருக்கில் மாட்டியிருந்த சிறுத்தைக்குட்டி ஒன்றை கிளிநொச்சி பொலிஸார் மீட்டு மீண்டும் காட்டில் விட்டுள்ளனர்.

கடந்த 25 ஆம் திகதி இந்தச் சம்பவம் நடைபெற்றது. நேற்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (பா)

## நல்லூரில் முதியவர் நிலத்தில் விழுந்து காயம்

நல்லூரானைத் தரிசிக்க வந்த முதியவர் கீழே விழுந்ததில் தலையின் பின் பகுதியில் காயம் ஏற்பட்டது. பிரடியில் ஏற்பட்ட காயத்தால் இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. இதனை அவதானித்த கடமையில் இருந்த பொலிஸாரும் முதலுதவிப் படையினரும் உடனடியாக முதியவரை யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக அழைத்துச் சென்றனர். (18)

# தெய்வீக நிகழ்வுகள்

நல்லூர் கந்தசாமி ஆலயத் திருவிழாவினை முன்னிட்டு ஆலயச் சூழலில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில் இன்று 6 ஆம் திருவிழாவினைமுன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கில் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் 7.45 மணிவரை இடம்பெறும் இசைக் கச்சேரியில் எஸ்.சிவஞானராஜா பாடவுள்ளார்.

இதில் வயலின் திருமதி வனஜா ஈஸ்வரசர்மா, மிருதங்கம் பிரம்மஸ்ரீ எஸ்.வரதராஜசர்மா, கெஞ்சிரா ரி.சண்முகசுந்தரம் ஆகியோர் இசைக்கவுள்ளனர். இந்து சமய கலாசாரத் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் நடத்தும் ஆன்மீக சிந்தனையும் சமயச் சொற்பொழிவும் கலை நிகழ்வுகளும் என்ற தொடரில் இன்று சைவப்புலவர் கந்தசக்தியதாசன் “ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே” என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து வெலவில் அறநெறிப் பாடசாலை சங்கானை, திடப்புலம் நரசிங்க வைரவர் அறநெறிப் பாடசாலை திடப்புலம் ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை, கோண்டாவில் ஆகியோரின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (42)





மானிப்பாய் இந்துக்கல்லூரியில் சுவாமிவிபுலானந்தர் நினைவுதினமும் முத்தமிழ் விழாவும் கல்லூரி முதல்வர் எஸ்.சிவநேஸ்வரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பிரதம விருந்தினராகவும், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் சோ.பத்மநாதன சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். விழாவிற்கு விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், போட்டியில் வெற்றிபெற்ற மாணவனுக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம்.

# வாகனவசதிகள் இல்லை; கால்நடைவளர்ப்போர் கவலை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கால்நடை வைத்திய திணைக்களத்திற்கு வாகன வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்படாமையினால் பாரிய சிரமங்களை எதிர் கொண்டு வருவதாக கால்நடை வளர்போர் கவலை தெரிவித்துள்ளனர்.

கால்நடை வைத்தியர்களுக்கான வாகன வசதியின்மையால் குறித்த நேரத்தில் உரிய இடத்திற்கு உதவிகள் மற்றும் கால்நடைகளுக்கான வைத்தியங்கள் மேற்கொள்ளப்படுவதில்லை இதனால் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் கால்நடை வளர்போர் தமது சொந்தப்பணத்தில் ஆட்டோவை வாடகைக்கு அமர்த்தி வைத்தியரை ஏற்றிச்சென்று தமது கால்நடைகளுக்கு பரிகாரம் தேடிவருகின்றனர்.

வைத்திய அதிகாரி தனது சொந்த செலவில் வாகன வசதிகளை பயன்படுத்தி கால்நடை சம்பந்தமான தரவுகளை எடுப்பதற்கு அல்லது அரச, அரச சார்பற்ற நிறுவனங்களினால் பயனாளிகளுக்கு வழங்கப்படும் உதவிகள் மற்றும் பதிவுகளை பெறுவதற்கு ஒவ்வொரு கிராமம் கிராமமாக சென்று உளமார்ந்த சேவையினை செய்வதற்கும் சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

நடமாடும் சேவையினையும் மாதாந்தம் செயற்படுத்துவதில் கஷ்டநிலைமைகள் தொடர்ந்து கொண்டே வருகின்றது.

சீரற்ற மின்சார விநியோகத்தினால் குளிரூட்டிகளில் பழுதடையாமல் பேணப்படும் மருந்துகள் பழுதடைவதாகவும் அறியமுடிகின்றது.

அத்துடன் அரசாங்கத்தின் உதவியுடன் நீர்மாணிக்கப்பட்ட கால்நடை வைத்திய நிலையம், பால் உற்பத்தி நிலையம், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் போன்ற இந்த வருடம் முதல்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டு கால்நடை அமைச்சினால் திறக்கப்பட்டது.

எனினும் அடிப்படை வசதியின்மையால் மந்த கதியில் செயறப்பட்டு வருவதாகவும் கால்நடை வளர்ப்போர் கவலை தெரிவித்துள்ளனர். (116)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று...

(நல்லூர்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 6.45 மணியளவில் எஸ்.சிவஞானராசாவின் பாட்டு இடம்பெறவுள்ளது.

இதில் அணிசேர் கலைஞர்களாக வயலின் திருமதி.வனஜா ஈஸ்வரசர்மா, மிருதங்கம் பிரம்மஸ்ரீ எஸ்.வரதராஜசர்மா, கெஞ்சிரா ரி.சண்முகசுந்தரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் ஆன்மிக சிந்தனையும் சமயச் சொற்பொழிவும் கலை நிகழ்வுகள் நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை 'ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே' என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் கந்த சத்தியதாசன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

இதில் கலைநிகழ்வுகளில் சங்கானை வெல்வில் அறநெறிப் பாடசாலை, திடப்புலம் நரசிங்க வைரவர், கோண்டாவில் ஸ்ரீகணேசா ஆகியன கலந்து கொள்ளவுள்ளன.

நல்லூர் நடராசா பரமேஸ்வரி .மண்டபத்தில் நடைபெற்று வரும் ஆன்மிக நிகழ்வில் இன்று "முருக வழிபாடு" என்னும் தலைப்பில் கலாநிதி மா.வேதநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

## முன்பள்ளி டிப்ளோமா

(வடமராட்சி)

வடமராச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஆறுதல் நிறுவனத்தின் அனுசரனையில் 2012-2013ஆம் ஆண்டுக்கான முன்பள்ளி டிப்ளோமா கற்கை நெறி எதிர்வரும் ஆகஸ்ட் மாத முதல் வாரத்தில் ஆரம்பமாகவுள்ளது. இதற்கான நேர்முகப் பரீட்சைகள் விண்ணப்பங்களை அனுப்பிவைத்துள்ளவர்களுக்கு நடைபெற்றது இதுவரையில் 65 பேர் வரை தோற்றியுள்ளனர். என்றும் இதுவரையில் நேர் முகப்பரீட்சைக்கு தோற்றாதவர்கள் உடனடியாக வடமராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ். தில்லைநாதனிடம் தொடர் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (116)


## சந்திப்பு

(தும்பளை)

கலை இலக்கிய சந்திப்பு ஒன்று இன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத்தலைவர் கலாநிதி கலாமணியின் இல்லத்தில் ஆவரது தலைமையில் நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பின் போது யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் "ஒப்பு இலக்கியமும் உலகத்தரமும்" என்னும் பொருளில் உரையாற்றவுள்ளார். (62)

## நல்லூர் முருகனுக்கு இன்று 6ஆம் திருவிழா



## வாழ்த்தி வழிபடுவோம்!

நல்லூர் அசையா மணியோசை நாள்தோறும்
அல்லகலும் போதிலும் அசைந்துவரச் - சொல் முருகா
வாயில் வர வாழ்த்தி வழிபடவே நல்லூரான்
கோயிலுக்குப் போம் போங்குறை

-நல்லைக்கந்தன் பாமாலை-

## ஆறுமுகன் இனிது இனிது!

ஆறுமுகனுக்கு ஆறாம் நாள் இனிது
அவன் தேன் கலநத அமுதம் இனிது
மழலை இனிது தெய்வத்தின் படைப்பு இனிது
கரும்பு இனிது வளர்தல் காத்தல் இனிது
சக்தி இனிது வேல் அழித்தல் இனிது
நீர் இனிது நீர் அருவி மறைத்தல் இனிது
இசை இனிது நீர் அருவி மறைத்தல் இனிது
இனிதே ஆறுமுகன் அநுபூதியைப் பெறுவோம்.

-கனகராசா நல்லூர்-

## வாழ் வளியும் ஐயா!

வானுறையும் தேவரும் வந்தே
வணங்கிடுவர் நல்லூரிலே
வள்ளிமண வாளனாம் முருகனை
வாழ்வளிக்கும் தேவனவன்
கானக்குறத்திக்கும் கணவனாய்
கடிதினில் வந்து வாய்த்தவன்
மலையரசன் பேரனே மனமுவந்து
வாழ்வளியுமையா ஏழை எமக்கே!

-மகிழ்நன்- (மண்டைதீவு)

முருகனருள் பாடி
நல்லருளைப் பெற்றிடுவோம்

ஆர்.வி.ஜி. மருந்தகம்

ஆங்கில மருந்து வகைகள்; ஊட்டச்சத்துகள்
மற்றும் பால்மா வகைகள்
அனைத்தையும் நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

504, ஆஸ்பத்திரி வீதி.
(O.P.T முன்பாக)
யாழ்ப்பாணம்.
021 222 2129

R.V.G ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.
021 222 6806

## சிரமதானம் மூலம் ஆலயம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுக் கிராமத்தில் மண்டைதீவு அல்லைப்பிட்டி வீதியில் அமைந்துள்ள தில்லேஸவரர் ஆலயத்தைப்புனரமைத்து பூசை வழிபாடுகளை மேற்கொள்ள அக்கிராம மக்கள் நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

கடந்த இரண்டு தசாப்பங்களுக்கு மேலாக நிலவிய யுத்த சூழ்நிலைகளினால் இந்த ஆலயம் சேதமடைந்து அழிவுகளைச்சந்தித்திருந்தது. தற்சமயம் யுத்தம் நிறைவடைந்த சூழலில் அந்தக்கிராமத்தில் உள்ள ஒரே ஒரு சிவன் ஆலயம் இதுவாகையால் அதைப்புனரமைத்து பூசை வழிபாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதன் ஆரம்ப நடவடிக்கை இன்று அந்தக்கிராமத்தில் உள்ள இந்து மக்கள் கூடி அந்த ஆலயத்தின் பகுதிகளில் சிரமதான நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளவுள்ள தாக இவ் ஆலயத்தின் நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இவ் ஆலயம் அமைந்துள்ள மண்டைதீவு அல்லைப்பிட்டி வீதியும் வேலணைப்பிரதேச சபையினருடன் இணைந்து மண்டைதீவு மக்களினால் தற்காலிகமாக செப்பனிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்



அமைச்சர் றிசாட் பதீதினுக்கு ஆதரவாக யாழ் முஸ்லிம்களினால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆர்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது அன்று மதியம் 1 மணிக்கு தொழுகை முடிந்த பின்னர் 100 இற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் இந்த .ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதேவேளை மன்னார் மற்றும் வடபுல முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தடுக்கப் படுவதாகவும் வடபுல முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப் படுவதாகவும் அவர்களது காணிகள் அபகரிக்கப்படுவதாகவும் கோஷமெழுப்பி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஜும்மாத் தொழுகையின் பின்னர் மட்டக்களப்பு ஏறாவூரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது. இதில் ஏறாவூர் பொது அமைப்புக்களின் பிரதி நிதிகளும் ஊர்ப் பொதுமக்களும் பங்குபற்றினர். (02)

## மது போதையில் வீதியில் கும்மாளம்; பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டனர்

(திருநெல்வேலி)

நண்பரின் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு மதுவருந்தி கும்மாளம் போட்ட நான்கு இளைஞர்களை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒரு வாரகாலத்துக்கு சமூகசேவை `செய்யும்படி யாழ்.நீதிவான் மா.கணேசராசா உத்தரவிட்டார்.

இந்நான்கு இளைஞர்களும் 20 மற்றும் 21 வயதை உடையவர்களாவர் கடந்த 23ஆம் திகதி திங்கட்கிழமை திருநெல்வேலி கலாசாலை வீதியில் இவ்விளைஞர்களின் நண்பர் ஒருவருககு பிறந்தநாள் விழா நடைபெற்றது. அக்கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட இந்நால்வரும் வீட்டுக்கு வெளியே வந்து மதுவருந்தி வீதியில் குடித்து கும்மாளம் போட்டுக்கொண்டிருந்த வேளை அவ்வீதியில் வந்து கொண்டிருந்த கோப்பாய் பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டனர். வீதியில மதுவருந்தி போக்குவரத்து செய்த பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக யாழ்.நீதிமன்றில் இவர்கள் மீது பொலிஸாரினால் தனித்தனியாக நான்கு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு கடந்த புதன்கிழமை ஆஜர்படுத்தப்பட்டனர். இவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இவர்கள் நால்வருக்கும் தலா 10ஆயிரம் ரூபா ஆள்பிணையும், சமூகசேவைக்கான உத்தரவையும் நீதிவான் வழங்கினார். (137)

அன்பு என்பது கண்ணுக்குத் தெரியாத நீரூற்று. அதுஎப்போது எப்படி தோன்றுகிறது என்பதை நாம் அறிய முடியாது.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## பேசுவதற்கு என்ன வேண்டும்?

எங்கள் கஷ்டங்கள் தீர வேண்டுமென்றால், சுதந்திரமாக நாம் உலவ, விரும்பிய தொழிலொன்றைப் பெற்றுக் கொள்ள, கல்வி கற்க, மற்றைய சமூகங்களோடு நாமும் சமமானவர்கள் என்றுணர, அரசியலுரிமைகளைப் பெற்றுக்கொள்ள அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று எண்ணுகிறோம். அதற்குரிய தீர்வொன்று வந்துவிட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

முதலில், இந்த நாட்டில் உள்ள ஏனைய சமூகங்களான சிங்கள, முஸ்லிம் மக்களுடன் சேர்ந்து வாழ தமிழர்களாகிய நாம் அதற்குரிய மனத்தயாரிப்புடன் இருக்கிறோமா? அல்லது இப்போதும் எண்பதுகளில் காசி, வண்ணை மேடைகளில் சொல்லியது போல "அவர்கள் வேறு நாங்கள் வேறு" என்ற மனநிலையை மாற்றிக் கொள்ளாமலேதான் உள்ளோமா என்று நம்மைக் கேட்டுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் சிங்கள முஸ்லிம் மக்களுடன் சேர்ந்து வாழும் எண்ணத்தைக் கொண்டிருந்தால்தான் அவர்களுடன் என்ன பேசுவது என்பதைப் புரிந்து கொள்வோம். அவர்களுடன்தான் பேச வேண்டும் என்பதையும் புரிந்து கொள்வோம். மாறாக, அவர்கள் வேறு நாங்கள் வேறு என்ற முப்பதாண்டுகளுக்கு முந்திய மனநிலையுடன் எந்தப் பேச்சும் சரிவரப் போவதில்லை.

அதனால்தான் எமது மக்களின் சார்பாகப் பேச்சு நடத்துவதாகச் சொல்லி அரசாங்கத்துடன் பேசுபவர்கள், போய்ப் போய்த் திரும்பிவந்து, "பேச்சு சரிவராது, அரசு தீர்வைத் தராது, வெளியார் வந்து மிரட்டாமல் எங்கள் பேச்சால் எந்தப் பயனும் விளையாது..." என்பதையேதான் விடாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்கா போய்ப் பேசி அரசைப் பணிய வைக்கிறோம் என்று கிளம்பிப் போய் வெறுங்கையோடு வருகிறார்கள். பிறகு, இந்தியா பன்னிப் பன்னி சொல்லிக் கொண்டிருப்பதுவும், வந்து வந்து சொல்லிப் போவதுவும் எதுவும் காதில் விழாதது போலவே பம்மிவிட்டு, இந்தியா வரும், இன்னுங் கொஞ்சக்காலம் பல்லைக் கடித்துக் கொண்டு இருங்கள் என்கிறார்கள்.

இதற்கிடையில், நிலம் போகிறது, கலாசாரம் அழிகிறது, ஆமி நம் காணிகளைக் களவாடப் போகிறது, அபிவிருத்தி நடக்கவில்லை என்றும் அவ்வப்போது சில பிலாக்கணங்களை எடுத்து வீசிவிட்டு, தங்கள் சொந்த அலுவல்களைக் கவனிப்பதில் மும்முரமாகி விடுகிறார்கள். தடுத்து வைக்கப்பட்டிருப்போர், இன்னும் மீள்குடியேற்றம் நடக்காதோர் தொகையெல்லாம் கணிசமான அளவுக்குக் குறைந்து விட்டதால், அவர்களைக் குறித்த வசனங்களுக்குப் பதில் இப்போது வேறு வீரவசனங்களுடன் தொடர்கிறது "தமிழ்மக்களா கொக்கா" நாடகம்.

இந்த "அகிம்சைவாதிகளுக்கு"ப் பேச்சும் சரிவராது; மக்களிடம் இறங்கிப்போதல், ஒன்றுதிரட்டுதல், ஜனநாயகப் போராட்டங்களில் ஈடுபடுத்துதல்... எதுவும் செய்வதற்கு இதுவரை கண்டுவரும் கதிரைச் சொகுசு விடாது. வரும் அரசாங்கங்களை எல்லாம் வெறும் பிலாக்கணத்தால் வீழ்த்தும் முயற்சியிலேயே, அந்தப் போலி நம்பிக்கையிலேயே மக்கள் தங்கள் கஷ்டங்களையெல்லாம் சகித்தபடி தேர்தலுக்குத் தேர்தல் வாக்குப் போடவைத்துக் கொண்டிருக்கலாம் என்பதே ஒரே ஏமாற்றாக இன்னும் தொடர்கிறது?

இதற்கு மேலும் மௌனம் சாதித்து நம்மை இன்னுமின்னும் கீழ் படிகளுக்குக் கொண்டுசெல்ல படித்தவர்கள், விவரமறிந்தவர்கள் துணைபோய்விடக் கூடாது. யதார்த்தம் என்ன என்பது மக்களுக்கு அறியத்தரப்பட வேண்டும், விவாதிக்கப்படவும் வேண்டும்.

இந்த நாட்டுக்குள் நாம் யார் யாருடன் சேர்ந்து வாழப் போகிறோம் என்பதைச் சிந்திக்க வேண்டும். அவர்கள் எல்லோருடனுமான உரையாடல்கள் திறக்கப்பட வேண்டும்.

- ஆசிரியர்

# பருத்தித்துறை துறைமுகப்பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை

பருத்தித்துறை துறைமுகப் பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டமையால் இடம் பெயர வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளான மக்கள் தற்போது சொந்த வீடுகளில் மீள் குடியேற நடவடிக்கை எடுத்து உதவுமாறு ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவைக் கோரியதற்கிணங்க பாதுகாப்பு அமைச்சு இம்மக்களின் கோரிக்கை பற்றி விரிவான அறிக்கையை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு இராணுவத் தலைமையகத்தை கேட்டுள்ளது.

இதுசம்பந்தமாக பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் பருத்தித்துறை இடம்பெயர்ந்தோர் சங்கத்தலைவர் நடராஜா நமசிவாயத்திற்கு அறிவித்துள்ளார். யுத்த அனர்த்தங்களினால் 1996ஆம் ஆண்டு பருத்தித்துறை துறைமுகப் பிரதேசத்தில் உயர்பாதுகாப்பு வலயம் பிரகடனப் படுத்தப்பட்டமையால் அப்பிரதேசத்தில் வசித்து வந்த மக்கள் இடம்பெயர்ந்து நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் பல்வேறு இன்னல்கள் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் வீடுகள் பாதுகாப்புப் படையினரின் பாவனையிலேயே உள்ளது.

தற்போது நாட்டில் சமாதானம் நிலவுவதால் இடம்பெயர்ந்த மக்கள் அரசாங்கத்தினால் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு அவர்களுக்கு அரசாங்கம் பல்வேறு உதவிகளையும் வழங்கிவருகின்றது. அதேபோல் எங்களையும் எங்கள் சொந்த வீடுகளில் மீளக்குடியேற அனுமதி வழங்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இம்மக்கள் மகஜர் மூலம் கேட்டிருந்தனர்.

இம்மகஜர் சம்பந்தமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதையடுத்தே பாதுகாப்பு அமைச்சு இராணுவத் தலைமையகத்திடம் அறிக்கை கோரியுள்ளது. இராணுவம் இது சம்பந்தமான அறிக்கைகளைத் தயார் செய்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவ ஏற்பாடுகள் தீவிரம்

## 17ஆம் திகதி கொடியேற்றம்

(தொண்டைமானாறு)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் அடுத்த மாதம் 17 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. இதற்கான முன்னேற்பாட்டுக்கான ஆலோசனைக் கூட்டம் கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது சுகாதாரம், பாதுகாப்பு, போக்குவரத்து உள்ளிட்ட விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டது. இதற்கான ஒத்துழைப்புக்களை இம்முறையும் திணைக்களம் அரச சார்பற்ற நிறுவனம், நகரசபை போன்றன வழங்கவுள்ளன.

அத்துடன் இம்முறை ஆலய சூழலில் கச்சான், ஐஸ்கிறீம் உட்பட உணவு கையாளும் நிலையங்கள் விற்பனை செய்யப்படும் உணவுப் பண்டங்களை ஆலயச் சூழலில் வைத்து தயாரிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

திருவிழாக் காலங்களில் பக்தர்களை டெங்கு நோயிலிருந்து பாதுகாக்க ஆலயச் சூழலில் புகையூட்டல் நடவடிக்கைகளில் தீவிரமாக சுகாதாரப் பிரிவினர் கண்காணிப்பில் ஈடுபடவுள்ளதாக இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது,

ஆலயத்துக்கென வரும் பக்தர்களுக்கு குடிநீர் விநியோகம் மலசலகூடம், பராமரிப்பு ஆலய சுற்றுப்புறச் சூழல் சுத்தம் போன்றவற்றை நகர சபை மேற்கொள்ளுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பக்தர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு வல்வெட்டித்துறை பொலிஸார், சென். ஜோன்ஸ் அன்புலன்ஸ் படையணி, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சாரணர், மக்கள் நலன்புரிச் சங்கம் ஆகியன இணைந்து மருத்துவசேவை பாதுகாப்பு என்பவற்றில் ஈடுபடவுள்ளனர்.

பத்தர்களின் போக்குவரத்தில் ஏற்படும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு தனியார் மற்றும் அரச பேருந்துகள் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

அதற்காக பஸ்களைத் தரித்து நிறுத்த காணித் தெரிவு செய்து தரும்படியும் பேருந்து சபைத் தலைவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கையை ஏற்று அதற்கான காணி தொடர்பாக மிக விரைவில் சம்பந்தப்பட்டவர்களுடன் கதைப்பதாகவும் உறுதியளிக்கப்பட்ட இம்முறை உலக நாடுகளில் இருந்தும் பத்தர்கள் அணி திரளவுள்ளதாக எதிர்பார்க்கப்படுவதுடன் இடையூறுகளைத் தவிர்க்க திணைக்கள அதிகாரிகள் முன்வர வேண்டும் என உதவிப் பிரதேச செயலர் கோரிக்கை விடுத்தார்.

இக்கூட்டத்திற்கு திருவிழா உபயகாரர்கள் நகர பிதா அனந்தராஜ், கலாசார உத்தியோகத்தர் எஸ். செல்வசுகுணா, நகரசபை செயலர், சுகாதார அதிகாரிகள், வைத்தியர்கள், பொலிஸார், மருத்துவ சேவை மற்றும் படையணியினர், திணைக்கள அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (116)

# யாழ்.நீதவானுக்கு அறிவித்தல் இல்லை

(திருநெல்வேலி)

உதயன் பத்திரிகை ஆசிரியருக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு மேன் முறையீடு செய்யப்பட்ட காரணத்தினால் யாழ்.நீதிமன்றில் சட்டமா அதிபரின். ஆலோசனையையும், நீதிச் சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலையும் பெறுவதற்காக 03.08.2012 ஆம் திகதிக்கு தவணை இடப்பட்டுள்ளது.

மேன் முறையீட்டு வழக்கில் நீதிபதி ஒருவரை பிரதிவாதியாக சேர்க்க முடியாது எனவும், சட்டமா அதிபரை பிரதிவாதியாக சேர்க்கப்படாதது சட்ட முறையற்ற மேன்முறையீடு எனத் தெரிவித்து சட்டமா அதிபரின் ஆலோசனையை மேன் நீதிமன்றம் கோரியுள்ளது. இவ்வழக்குத் தொடர்பாக யாழ்.நீதவான் மா.கணேசராசாவுக்கு எதுவித அறிவித்தலோ அல்லது அழைப்போ கிடைக்கப்பெறவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

# சமுர்த்தி உதவி ஆணையாளராக மகேஸ்வரன் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளராக கே.மகேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார். யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளராக இருந்த எஸ்.சிவசிறி கரவெட்டிப் பிரதேச செயலராக பதவியுயர்வு பெற்றுச்சென்றுள்ளதனை அடுத்து யாழ்.செயலகத்தில் உதவித்திட்டமிடல் பணிப்பாளராக பதவிவகித்து வந்த கே.மகேஸ்வரன் யாழ் மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர்கள் இருவரும் கடந்த 23ஆம் திகதி தமது பதவிகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை கரவெட்டிப்பிரதேச செயலராக இருந்த இரா.வரதீஸ்வரன் வடமாகாண உள்ளூராட்சி புனர்வாழ்வு புனரமைப்பு கூட்டுறவு கிராம அபிவிருத்தி கைத்தொழில் சமூகசேவை மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு அமைச்சின் செயலாளராக பதவியேற்றுள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா,116)

# மஹோற்சவம்

(அல்வாய்)

அல்வாய் வேவிலந்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான மஹோற்சவம் கடந்த 18 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறுகின்றது.

இன்று 12 ஆம் திருவிழாவாக வசந் தோற்சவமும் நாளை திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் மாலை 7.00 மணிக்கு சப்பரத்திருவிழாவும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு தேர்த் திருவிழாவும் 1ஆம் திகதி புதன்கிழமை காலை 6.00 மணிக்கு சமுத்திரத் தீர்த்தமும் வியாழக் கிழமை பூங்காவனத்திருவிழாவும் இளைஞர் திருவிழாவும் நடைபெறும். (116)

சங்கர சிவன்

சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்துவதிலேயே அரசியலில் வெற்றி தங்கியுள்ளது எனக் கூறுவர். ஒரு முறை தவறவிட்டால் மீண்டும் அது போன்ற சந்தர்ப்பம் கிடைப்பது அரிது. தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் கிடைத்த சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்தத் தவறியதால் மக்கள் இன்று துயரம் சுமக்கின்றனர்.

பண்டா-செல்வா ஒப்பந்தத்தை முதலில் பார்ப்போம். அன்றைய பிரதமர் பண்டாரநாயகவும் தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வீ. செல்வநாயகமும் 1957 ஜுலை மாதத்தில் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய பல நல்ல அம்சங்கள் அதில் இருந்தன. உதாரணத்துக்குச் சிலவற்றைப் பார்ப்போம்.

01. வடக்கு, கிழக்கில் பிராந்திய சபைகளை உருவாக்குதல்

02. வடக்கில் ஒரு பிராந்திய சபையும், கிழக்கில் இரண்டு அல்லது அதற்கு கூடுதலான பிராந்திய சபைகளும் அமைத்தல்.

03. பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் இரண்டு அல்லது அதற்குக் கூடுதலான பிராந்திய சபைகள் மாகாண எல்லைகளுக்கு அப்பாலும் ஒன்றிணைதல்.

04. காணி மற்றும் காணி அபிவிருத்தி, குடியேற்றம், நீர்ப்பாசனம் உட்படப் பிராந்திய சபைகளுக்கான விடயங்கள் சட்டத்தில் உள்ளடக்கப்படுதல்.

05. பிராந்திய சபைகள் வெளிநாட்டுக் கடன்களைப் பெறமுடியும்.

06. மத்திய அரசாங்கம் பிராந்திய சபைகளுக்கு நிதி ஒதுக்கீடு.

07. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழ் நிர்வாக மொழி.

இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரவில்லை. அன்றைய பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஒப்பந்தத்துக்கு எதிராகத் தீவிர இனவாதப் பிரசாரத்தை ஏழு மாகாணங்களிலும் மேற்கொண்டது. அதே காலத்தில் ஒப்பந்தத்தின் பங்காளிக் கட்சியான தமிழரசுக் கட்சி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிறீ எதிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் தூண்டுதலில் புத்த பிக்குமார் ஒப்பந்தத்தை இரத்துச் செய்யக் கோரிப் பிரதமரின் வீட்டுக்கு முன்னால் சத்தியாக்கிரகம் செய்தனர். இந்த நிலையில் பிரதமர் பண்டாரநாயக ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதாக அறிவித்தார். எதிர்ப்புக்குப் பணிந்து பண்டாரநாயக ஒப்பந்தத்தை இரத்துச் செய்தது தவறு என்றும் ஒப்பந்தத்துக்கு எதிரான பிரசாரமும் செயற்பாடுகளும் தென்னிலங்கையில் தீவிரமாக முன்னெடுக்கப்பட்ட அதே காலத்தில் ஒப்பந்தத்தின் பங்காளிக் கட்சியான தமிழரசுக் கட்சி சிறீ எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதால் ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய வேண்டிய இக்கட்டான நிலை பண்டாரநாயகவுக்கு ஏற்பட்டது என்றும் மாறுபட்ட கருத்துகள் இன்று வரை தெரிவிக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் ஒப்பந்தம் ஒருதலைப்பட்சமாக இரத்துச் செய்யப்பட்டமை தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் துரதிஷ்டமானது. எனினும் ஒப்பந்தத்தின் சரத்துக்களை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான இரண்டு சந்தர்ப்பங்கள் பிந்திய காலங்களில் தமிழ்த் தலைமைக்குக் கிடைத்தன.

1965 மார்ச் மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 66 ஆசனங்களையும், சிறீலங்கா சுதந்திரக் கட்சி 41 ஆசனங்களையும் பெற்றன. ஆட்சி அமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மை எந்தக் கட்சிக்கும் கிடைக்கவில்லை. இரண்டு கட்சிகளும் மற்றைய கட்சிகளின் உதவியுடன் ஆட்சி அமைப்பதற்கான முயற்சியில் இறங்கின. தாங்கள் ஆட்சி அமைக்க ஆதரவு வழங்கினால் பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் சரத்துகளை நடைமுறைப்படுத்துவதாகவும், சிம்மாசனப் பிரசங்க உரையில் அதை உள்ளடக்குவதாகவும் சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்கள் தமிழரசுக் கட்சித் தலைமைக்கு அறிவித்தார்கள். தமிழரசுக் கட்சி அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த முன்வரவில்லை. பண்டா-செல்வா ஒப்பந்தத்திலும் பார்க்க மிகவும் குறைவான அதிகாரங்களைக் கொண்ட டட்லி-செல்வா ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளித்தது. இந்த ஒப்பந்தமும் நடைமுறைக்கு வரவில்லை. சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு



# தலைவர்கள் சந்தர்ப்பங்களை நழுவவிட்டதால்

# தமிழ் மக்களுக்கு அவல வாழ்க்கை

**வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பு பற்றி இன்று தமிழ்த் தலைவர்கள் அதிகம் பேசுகின்றார்கள். மாகாண சபை தொடர்ந்து செயற்பட்டிருந்தால் இணைப்பு நிரந்தரமாகும் சாத்தியக்கூறு இருந்தது. பிரேமதாசவும் புலிகளும் செய்த கூட்டுச் சதியினால் மாகாண சபை செயற்பட முடியாமற் போனது. பிற்காலத்தில் அதைச் செயற்படுத்துவதற்கு இன்றைய தமிழ்த் தலைமை எந்த முயற்சியும் எடுக்கவில்லை. பதவியிலிருந்த அரசாங்கம் மாகாண சபையைச் செயற்படுத்த முயற்சி எடுத்த வேளைகளில் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதிலேயே இவர்கள் கவனம் செலுத்தினார்கள்.**

ஆதரவளித்திருந்தால் அந்த அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சி தீர்மான சக்தியாக இருந்திருக்கும். தமிழரசுக் கட்சியின் ஆதரவு இல்லாவிட்டால் அரசாங்கம் கவிழும் நிலை. பண்டா-செல்வா ஒப்பந்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு அருமையான வாய்ப்பு. தமிழரசுக் கட்சி அதைக் கைநழுவ விட்டது.

எழுபதுகளின் முற்பகுதியில் இன்னொரு சந்தர்ப்பம் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்தது. ஐக்கிய முன்னணி அரசாங்கம் சோல்பரி அரசியலமைப்புக்குப் பதிலாக புதிய அரசியலமைப் பொன்றைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில், புதிய அரசியலமைப்பைத் தயாரிக்கும் நடைமுறைக்குத் தமிழரசுக் கட்சி ஒத்துழைப்பு வழங்குமேயானால் பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் பிரதான சரத்துக்களைப் புதிய அரசியலமைப்பில் உள்ளடக்க முடியும் என்ற தகவல் அரசாங்கத்தினால் மு.திருச்செல்வத்துக்கூடாகத் தமிழரசுக் கட்சித் தலைமைக்குத் தெரிவிக்கப்பட்டது. தமிழரசுக் கட்சி இந்தச் சந்தர்ப்பத்தையும் கைநழுவ விட்டது. வடக்கு-கிழக்கு மாகாண சபை செயற்பட முடியாமற் போனமை இன்னொரு இழந்த சந்தர்ப்பம். இனப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வாக மாகாண சபையை ஏற்றுக் கொள்ள முடியாதெனினும் முழுமையான தீர்வை நோக்கிப் படிப்படியாக முன்னேறிச் செல்லும் நடைமுறையில் முக்கியமான அடிப்படை அமைப்பாக மாகாண சபை விளங்கும். மாகாண சபைக்குப் போதுமான அதிகாரங்கள் வழங்கப்படாத போதிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையாவது மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்த முடியும். எல்லாவற்றுக்கும் மேலாக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பு பற்றி இன்று தமிழ்த் தலைவர்கள் அதிகம் பேசுகின்றார்கள். மாகாண சபை தொடர்ந்து செயற்பட்டிருந்தால் இணைப்பு நிரந்தரமாகும் சாத்தியக்கூறு இருந்தது.

பிரேமதாசவும் புலிகளும் செய்த கூட்டுச் சதியினால் மாகாண சபை செயற்பட முடியாமற் போனது. பிற்காலத்தில் அதைச் செயற்படுத்துவதற்கு இன்றைய தமிழ்த் தலைமை எந்த முயற்சியும் எடுக்கவில்லை. பதவியிலிருந்த அரசாங்கம் மாகாண சபையைச் செயற்படுத்த முயற்சி எடுத்த வேளைகளில் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதிலேயே இவர்கள் கவனம் செலுத்தினார்கள்.

அடுத்த பிரதானமான சந்தர்ப்பம் ஜனாதிபதி சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டம் இன்று தமிழ்த் தலைவர்கள் வலியுறுத்திக் கேட்கும் காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் போன்றவை அத்தீர்வுத் திட்டத்தில் உள்ளடங்கியிருந்தன. அந்தத் தீர்வுத் திட்டத்தின் கீழ் அமைந்திருக்கக்கூடிய பிரதேச சபைகளின் எல்லைகளையோ அதிகாரங்களையோ விடயங்களையோ பிரதேச சபையின் சம்மதம் இல்லாமல் எவ்விதத்திலும் மாற்ற முடியாது என்ற வலுவான பாதுகாப்பு ஏற்பாடும் அதில் இருந்தது. நாடு முழுவதிலும் கருத்தரங்குகள் நடத்தி, சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெறுவதற்கான தயாரிப்புடனேயே அன்றைய அரசாங்கம் அத்தீர்வுத் திட்டத்தைப் பாராளுமன்றத்துக்குக் கொண்டு வந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்வுத் திட்டத்தை ஆதரித்து வாக்களிக்கத் தயாராக இருந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரித்து வாக்களித்திருந்தால் மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைத்திருக்கும். இவர்கள் எதிர்த்துப் பேசியதால் வாக்கெடுப்பு நடத்தாமலேயே தீர்வுத் திட்டம் கைவிடப்பட்டது. அந்தத் தீர்வுத் திட்டம் நடைமுறைக்கு வர முடியாமற்போனதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே முழுக்க முழுக்கப் பொறுப்பாளிகள்.

இன்று கூட்டமைப்புத் தலைவர்கள் நில அபகரிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்கின்றார்கள். சிங்களக் குடியேற்றம் இடம்பெறுவதாகக் கூறுகின்றார்கள். பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த இடங்களிலிருந்து வெளியேறி அவல வாழ்க்கை வாழ்பவர்கள் பற்றி அடிக்கடி பேசுகின்றார்கள்.

இவ்வளவு பாதிப்புகளும் இவர்கள் விட்ட தவறுகளின் விளைவுகள். பண்டா-செல்வா ஒப்பந்தம், அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டம் ஆகியவற்றை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்குக் கிடைத்த சந்தர்ப்பங்களைத் தலைவர்கள் சரியான முறையில் பயன்படுத்தியிருந்தால் மேற்கூறிய பாதிப்புகளை அனுபவிக்கும் நிலை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்காது.



# மாகாண சபைத் தேர்தல்களில் உரிய இடம் தரப்படவில்லை

## டி.யூ.குணசேகர

(கொழும்பு)

கிழக்கில் நடத்தப்பட உள்ள தேர்தல், தேசிய நல்லிணக்க முனைப்புக்களை சீர்குலைக்கும் என சிரேஷ்ட அமைச்சர் டியூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

கிழக்கின் கள நிலைமைகளை அறிந்துகொண்டு அரசாங்கம் தீர்மானம் எடுத்திருக்க வேண்டுமென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

2008 ஆம் ஆண்டு கிழக்கில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல்களிலும், இம்முறைத் தேர்தல்களிலும் இடதுசாரி கட்சிகளுக்கு ஆளும் கட்சி சந்தர்ப்பம்வழங்கவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பிரிவினைவாதத்தை தூண்டும் வகையிலான எந்தவொரு நகர்வும் ஆரோககியமானதாகக் கருத முடியாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உள்ளிட்ட அரசியல் கட்சிகள் அனைத்துமே கிழக்கில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமைகளுக்குப் பொறுப்பு சொல்ல வேண்டுமென தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியின் தேர்தல் பிரச்சார உத்திகள் பிரிவினைவாத சக்திகளை வலுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு முரணான வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகக் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

எந்த காரணத்திற்காக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேர்தலில் தனித்து போட்டியிடத் தீர்மானித்தது என்பதனை அரசாங்கம் ஆராயவேண்டுமென தெரிவித்துள்ளார்.கிழக்கு மாகாணசபைத் தேர்தல்களில் விளக்குசின்னத்தில் இடதுசாரி கட்சிகள் சுயாதீனமான போட்டியிட உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இணக்கப்பாடு இன்றி பணிக்குத் திரும்ப முடியாது

(கொழும்பு)



உத்தியோகபூர்வ இணக்கப்பாடு இன்று பணிக்குத் திரும்ப முடியாது என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாகவும் இதனால் 30 ஆம் திகதி பணிக்கு சமூகமளிக்குமாறும் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கோரியிருந்தார்.

எனினும், இந்த வாய்மொழி மூல கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தமது கோரிக்கைகளுக்கு இதுவரையில் அரசாங்கம் உரிய பதிலளிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 20 புலி உறுப்பினர்களுக்கு எதிராக யுத்தக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

புலிகளின் 20 உறுப்பினர்களுக்கு எதிராக யுத்தக்குற்றச் செயல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் குறித்த சிரேஷ்ட புலி உறுப்பினர்களுக்கு எதிராக தண் டனை விதிக்கப்படும் என குறிப்பிடப்படுகிறது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் புலிகளுக்கு எதிராக யுத்தக் குற்றச் செயல் குற்றச்சாட்டுக்கள் சுமததப்படவுள என.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த புலி உறுப்பினர்கள் பாரியளவில் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்ட மா அதிபர் திணைக்களம் குறித்த புலி உறுப்பினர்களுக்கு எதிராக நீதிமன்றில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யவுள்ளது.

குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டமைக்காக குறித்த விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு கடுமையான தண் டனை விதிக்கப்படக்கூடும் எனச் சட்ட வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

# கட்சி உறுப்பினர்களை ஓரங்கட்டக்கூடாது



(கொழும்பு)

பொதுவான எதிரியாக இந்த சர்வாதிகார அரசாங்கத்தைக் கருதவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கருஜய சூரிய, தயாசிறி ஜயசேகர ஆகியோரை பிரதான எதிரியாக் கருதி சிலர் செயற்பட்டுவருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்களில் தயாசிறி, கரு ஆகியோர் மிக முக்கியமான பங்களிப்பை வழங்குவார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.


கட்சியின் எந்தவொரு உறுப்பினரையும் நாம் ஓரங்கட்டக்கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் போது, அது ஆளும் கட்சியையே வலுவடையச் செய்யும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வாதிகார போக்குடைய இந்த அரசாங்கத்தை தோற்கடிக்க வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

'யாரையும் உயர்த்த வேண்டுமென்ற நோக்கம் கிடையாது எனவும், கட்சியை வலுப்படுத்துவதன் மூலமே வெற்றிகளை ஈட்ட முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பிரச்சினைகள் தணிவு முன்னைய மிரட்டல்களுக்கு நடவடிக்கை இல்லை



(கொழும்பு)

வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டபின் பிரச்சினைகள் தணிந்துள்ளதால் மட்டக்களப்பில் மிரட்டல் கடிதங்கள் ஆயுத குழுக்கள் பற்றி செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட மாட்டாது என தேர்தல்கள் திணைக்களம் கூறியுள்ளது.

கட்சிகளின் செயலாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணையாளருக்கும் இடையில் நடந்த கூட்டத்தின் போது மேற்படி முறைப்பாடுகள் குறித்து ஆராயப்பட்டது.

இந்த பிரச்சினைகளை ஆராய்வதற்கு தேர்தல்கள் ஆணையாளர் ஓர் உயர்மட்ட குழுவை அனுப்பியிருந்தார். அக்குழுவினர் வேட்பாளர்கள் மற்றும் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கூட்டமொன்றையும் நேற்றுமுன்தினம் நடத்தினர்.

வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டபின் மிரட்டல் கடிதங்கள் வருவதில்லை என இக்கூட்டத்தில் வேட்பாளர்களும் கட்சிகளின் பிரதிநிதிகளும் கூறியததையடுத்து மீண்டும் மிரட்டல் விடுக்கப்பட்டால் மாத்திரமே நடவடிக்கை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

எனினும் வேட்பாளர்கள் மீண்டும் மிரட்டப்பட்டால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.


# மருத்துவமனைகளுக்கு அம்பியுலன்ஸ் வண்டிகள்

(கொழும்பு)

நாடு முழுவதிலுமுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் நிலவும் அம்பியுலன்ஸ் வாகனங்களின் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக மேலும் 250 அம்பியுலன்ஸ் வாகனங்க ளைக் கொள்வனவு செய்வதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒரு அம்பியுலன்ஸ் வண்டியேனும் இல்லாத வைத்தியசாலைகளுக்கும் மற்றும் தட்டுப்பாடு நிலவும் வைத்தியசாலைக்கும் இந்த வாகனங்கள் கையளிக்கப்படும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

# முன்னேஸ்வரம் மிருக வேள்வி விசாரணை ஒத்திவைப்பு



(கொழும்பு)

சிலாபம் முன்னேஸ்வரம் சிறிபத்திரகாளி அம்மன் கோவில் மிருக வேள்வியைத் தடுக்கக் கோரும் ஆணைகோர் மனு மீதான வாதப்பிரதிவாதங்களை ஆகஸ்ட் 28 ஆம் திகதிக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒத்திவைத்தது.

இந்த மனு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை, மேன்முறையீட்டு நீதிமன்ற பதில் தலைவர் டபிள்யூ. எல்.ஆர். ரஞ்சித் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபின் இவ்வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சிறிபோதிராஜ மன்றம், ஜாதிக சங்க சம்மேளனம், தர்மவிஜய மன்றத் தலைவர் ஒல்கொட் குணசேகர, வண. பண்டிரிப்புவே வினீதா தேரர், மிருக நலன்புரி நம்பிக்கை நிருவனத் தலைவி இராங்கனி டீ சில்வா, அதன் தர்மகர்த்தா விசாக திலகரத்ன, இலங்கை மிருக பாதுகாப்பு சங்க உதவித் தலைவர் லொறைன் மார்கரைட் பார்தோலொமஸ், அதன் செயலாளர் ஷர்மினி தெசிறீ ரட்நாயக்க மற்றும் ஆறு பேர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

பொலிஸ் மாஅதிபர், புத்தளம் பிரதிப் பொலிஸ் மாஅதிபர், சிலாபம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சிலாபம் நகர சபை, அதன் தலைவர், ஸ்ரீபத்திரகாளி அம்மன் கோவில் தர்மகர்த்தாக்களான எம். கனகரத்தினம், காளிமுத்து சிவபாக்கிய சுந்தரம் மற்றும் மகேந்திர சாமி ஆகியோருடன் அகில இலங்கை இந்து மாமன்றம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# ஹெஜிங் உடன்படிக்கை விவகாரம் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தோல்வி

(கொழும்பு)

ஹெஜிங் உடன்படிக்கை தொடர்பாக ஸ்டான்டர்ட் சார்டர்ட் வங்கிக்கு 162 மில்லியன் அமெரிக்க டொலரும் வட்டியும் வழங்கப்பட வேண்டும் என லண்டன் நீதிமன்றமொன்று அளித்த தீர்ப்புக்கு எதிராக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் (சி.பி.சி.) தொடுத்த மேன்முறையீட்டு வழக்கில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தோல்வியுற்றுள்ளது.

எமக்கு எதிராக உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது என சட்டமா அதிபர் பாலித பெர்னாண்டோ, ரோய்ட்டர்ஸ் செய்திச்சேவைக்கு தெரிவித்துள்ளார்.

முதலில் இந்த உத்தரவு என்ன என்பதை வாசிக்க வேண்டும். அதன் பின்னர் (பிரிட்டனின்) பிரபுக்கள் சபையில் மேன்முறையீடு செய்வதற்கான சாத்தியம் குறித்து ஆராய்வோம் என அவர் தெரிவித்தார்.

பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கருத்துத் தெரிவிக்கையில், மேன்முறையீடு செய்வது குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்துடன் நாம் கலந்தாலோசித்து வருகிறோம் என்றார்.

2007 இல் உலக சந்தையில் எரிபொருள் விலை உயர்வடைந்து கொண்டிருந்தபோது வங்கிகளிடம் இழப்பீடு பெறும் வகையில் ஹெஜிங் உடன்படிக்கைசெய்ய இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஆரம்பித்தது. ஆனால், உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்தால், உடன்படிக்கை செய்து கொண்ட வங்கிகளுக்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் பணம் வழங்கும் வகையில் இந்த உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது.

பிரிட்டனை தளமாகக் கொண்ட ஸ்டான்டர்ட் சார்டர்ட் வங்கி, சிட்டி பாங்க், டொச் பாங்க் உட்பட 5 வங்கிகளுடன் இந்த உடன்படிக்கை செய்யப்பட்டது.

2008 ஜுலையில் உலக சந்தையில் ஒரு பீப்பா மசகு எண்ணெய் 147 டொலர் வரை உயர்ந்த



நிலையில் இந்த உடன்படிக்கை மூலம் சி.பி.சி. நன்மை பெற்றது.

ஆனால் அதே வருட பிற்பகுதியில் மசகு எண்ணெய் விலை 40 டொலரைவிட குறைந்ததால் பெருந்தொகை பணத்தை வங்கிகளுக்கு சி.பி.சி செலுத்த வேண்டியிருந்தது.

இந்த உடன்படிக்கையின்படி பணத்தை வழங்க சி.பி.சி மறுத்ததாக குற்றம் சுமத்தி, ஸ்டான்டர்ட் சார்டர்ட் வங்கி வழக்குத் தொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# நெடுந்தீவு அபிவிருத்தி; பணிகளுக்கு காணிகள் ஒதுக்கீடு



(நெடுந்தீவு)

நெடுந்தீவு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் முதற்கட்ட நடவடிக்கையாக ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் (உதயன்) அவர்களால் காணிகள் வழங்கி வைக்கபபட்டன.

கடந்த சனிக்கிழமை மின்சார நிலையம் அமைப்பதற்காக நெடுந்தீவு மத்தியில் அரை ஏக்கர் காணியும், கால்நடை வைத்தியநிலையம் அமைப்பதற்காக அரை ஏக்கர் காணியும், சாறாப்பிட்டி குடிநீர் விநியோகத்தை விஸ்தரிப்பதற்காக 2 ஏக்கர் காணியும், பரிவர்த்தனை கோபுரம் அமைப்பதற்கு வெட்டுக்கேணியிலும், கற்றாளை வளர்ப்பதற்காக சாமிப்பிட்டியில் 2 ஏக்கர் காணியும், மூலிகைத்தோட்டம் அமைப்பதற்காக நெகுவிழி பிரதேசத்தில் 1 ஏக்கர் காணியும், புற்றரை அமைப்பதற்காக சாமிப்பிட்டி பகுதியில் 2 ஏக்கர் காணியும், வழங்கி வைத்தார்.

மேலும் அங்கு நடைபெறும் வேலைத்திட்டங்களை பார்வையிட்டார்.

# ரமழான் சிந்தனை



*றமழான் மிகப்பெரிய பறகத்துடைய மதமாகும் அல்லாஹுதஆலா இம்மாத்தில் அருளை இறக்கி வைக்கின்றான். பாவங்களை மன்னிக்கின்றான் துஆக்களை ஏற்றுக் கொள்கின்றான். மலக்குகளிடம் பெருமை பாராட்டி பேசுகின்றான். இம்மாதத்தின் மகத்துவத்தை அறியாதவன் துர்ப்பாக்கியவானாவான்*

ஹதீஸ்

(105)

# சுந்தரர் குருபூசை தினம்

ஸ்ரீகணேச அறநெறிப்பாடசாலையினர் நடத்திய சுந்தரர் குருபூசை கடந்த 26 ஆம் திகதி மாலை 3 மணிக்கு நீர்வேலி அரச கேசரிப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன் சிறப்புரையாற்றினார். முன்பள்ளிச் சிறார்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

# பரிசளிப்பு விழா

யாழ்.உயரப்புலம் மெதடிஸ் மிசன் தமிழ்க்கலவன் வித்தியாலயத்தின் பரிசில் தினம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் கு.திலீபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக பழைய மாணவர்களான எஸ்.பிறேமானந்தசுந்தர், திருமதி சாந்தா சுகிர்தரஞ்சன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக து.யோதிராசா, சோ.ஜெயராசா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளார்கள். திருமதி கிருபாகரி இளங்கோவன் பரிசில்களை வழங்குவார். (137)

# மருத்துவ சேவை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்குப் பகுதிகளுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையினரினால் வழங்கப்பட்டுவந்த நடமாடும் மருத்துவ சேவை இந்த மாதத்துடன் நிறுத்தப்படவுள்ளதாகவும் மண்டைதீவுக்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை நீடிக்கும் என்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி வைத்தியசாலை அம்பன், முள்ளியான் ஆகிய பகுதிகளில் அரச வைத்திய சேவை ஆரம்பிக்கப்பட்டிருப்பதனை அடுத்தே இந்தச் சேவை நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

எனினும் மண்டைதீவு வைத்தியசாலைப் புனரமைப்பு வேலை கள் ஆரம்பிக்கப்படாத நிலை யில் அங்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை இந்த நடமாடும் சேவை வழங்கப்படவுள்ளதாக அவ் அதிகாரி குறிப்பிட்டார்.

இந்த நடமாடும் சேவைக்குத் தேவையான நிதியுதவி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (பா)

# நல்லூர் திருவிழாவில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் 80 தொண்டர்கள் சேவை

(யாழ்ப்பாணம்)

நல்லைக்கந்தன் திருவிழாவில் நாளாந்தம் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையின் 80 தொண்டர்கள் சேவையில் ஈடுபட்டிருப்பதாக அதன் ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த ஆலயத்தின் விசேட நிகழ்வுகளின் போது மேலும் தொண்டர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் அம்புலன்ஸ் வண்டி ஒன்றும் நல்லூரின் தெற்கு வீதியில் அமைந்துள்ள உற்சவகாலப் பணிமனையில் சேவையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. இதன சேவையைப் பெற 021 321 5555 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் அங்கு செஞ்சிலுவைத் தொண்டர்களின் முதலுதவி சிகிச்சை முகாம் ஒன்றும் செயற்பட்டுவருவதாக அந்த அதிகாரி தெரிவித்தார். (பா)

# கடற்தாவரம் அழிப்பு தந்தையும் மகனும் கைது

யாழ்.தீவுப்பகுதியில் கடற்தொழில் நடவடிக்கைக்கென படகில் சென்று கண்ணாக்குழை வெட்டிய குருநகரைச் சேர்ந்த தந்தையும், மகனும் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை நண்பகல் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் அவர்கள் பயன்படுத்திய படகினையும், வெளியிணைப்பு மோட்டார் இயந்திரத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து யாழ்.பொலிஸார் இவர்கள் மீது யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றையும் பதிவு செய்துள்ளனர்.

இந்த வழக்கை விசாரித்து யாழ்.நீதவான் மா.கணேசராசா குறித்த தந்தையையும், மகனையும் பிணையில் செல்ல நேற்று அனுமதித்துள்ளதாக யாழ்.நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் யாழ்.கடல்நீரேரிப் பகுதியில் கடற்தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்கள் இந்த கண்ணாக்குழைகளை வெட்டி கடலில் போட்டு அதனுள வந்து தங்கியிருக்கும் கணவாய்களை தூண்டில் போட்டுப் பிடிப்பது வழமை இருந்தும் இவ்வாறான நடவடிக்கைகள் மூலமாக கடற்தாவரங்கள் அழிவுக்குள்ளாகிவருகின்றன. இதன் காரணமாக சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களைத் தவிர்க்க முடியாது போகும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (பா)

# பொதுக்கூட்டம்

(வலிகாமம்)

வல்வை நெடியகாட்டுத் திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலய வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆலய முன்றலில் தலைவர் சரவணப்பெருமாள் தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதேவேளை தேர் வெள்ளோட்டத்திலன்று சிறப்பு மலரொன்று வெளியிடப்படவுள்ளது. அதில் பிரசுரிப்பதற்கென 'விநாயகர் வழிபாடு' என்ற தலைப்பில் கட்டுரை மற்றும் கவிதை ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. (116)



**யாழ்.மாநகர சபையின் ஆதனவரிப்பகுதியை ஆசியமன்றத்தின் அனுசரணையுடன் கனினி மயப்படுத்தும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.**

# முரசின் இன்றைய பலன்

(29.07.2012 – ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் ஆடி மாதம் 14 ஆம் திகதி. ஏகாதசி.
மாலை 5.02 வரை. நட்சத்திரம் கேட்டை. மரணயோகம். பின்னிரவு 2.33 வரை.
இராகுகாலம் 4.33 - 6.03 வரை. சுபநேரம் 9.03 - 10.33 வரை.
எமகண்டம் 12.03 - 1.33 வரை. குளிகன் காலம் 3.03 - 4.33 வரை.
ஏகாதசி விரதம் .

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | சந்திராட்டமம் கவனம் தேவை, போட்டியில் பொறாமை, முதலீட்டைத் தவிர்க்கவும், நிதானம். |
| ரிஷபம் | செயலாக்கம், கழுன உழைப்பு, எதிர்பார்த்த இடமாற்றம், செலவுகள் அதிகம். |
| மிதுனம் | சந்திராட்டமம் புது முயற்சி கூடாது, அரச சலுகைகள் நண்பரில் கவனம், வாக்குவாதம். |
| கடகம் | உடல் அரோக்கியம், பணியாளர்களை அனுசரிக்கவும், பொறுப்புக்கூறல், பயணம். |
| சிம்மம் | நானாவித வரவுகள், உறவினர் ஆதரவு, பொருளாதார விருத்தி, குடும்ப ஒற்றுமை. |
| கன்னி | மனத்தெளிவு, தாராள தன வரவு, அதிகாரிகள் இடையூறு, சுபகாரியங்கள். |
| துலாம் | உடல் உபாதை, வெளித்தொடர்பால் அலைச்சல், சுமாரான ஒற்றுமை, தெய்வ வழிபாடு. |
| விருச்சிகம் | மனக்குழப்பம், எதிர்பாராத விரயம், பிரச்சினை களைத் தவிர்க்கவும், வேலைப்பளு. |
| தனுசு | தான தர்மம், உறவினருடன் ஒற்றுமை, பூர்வீக சொத்துக்களால் அனுகூலம், மகிழ்ச்சி. |
| மகரம் | திடீர் உதவி, அவமானம் நேரிடும், சிறு சிறு தடைகள், அதிகாரிகள் அதிருப்தி. |
| கும்பம் | தொழில் விஸ்தரிப்பு, உறவினர் அனுசரணை, குடும்பத்தில் சுபகாரியம், வியாபாரச் சிறப்பு. |
| மீனம் | கழுன உழைப்பு, உறவினரால் பிரச்சினைகள், மருத்துவச் செலவு, அனுசரித்து நடக்கவும். |

# லண்டன் ஒலிம்பிக்கின் ஆரம்ப விழாவின்போது










## பார்வைக் குறைவுடன் உலக சாதனை



(லண்டன்)

ஆண்கள் வில்வித்தை தரவரிசைச் சுற்றில் நடப்பு சம்பியனான கொரிய அணி 2087 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்ததுடன் புதிய உலக சாதனை படைத்து அசத்தியது.

துருக்கியில் கடந்த மே மாதம் நடந்த உலக கோப்பை வில்வித்தை போட்டியில் கொரிய அணி 2069 புள்ளியுடன் படைத்த சாதனையை, லண்டன் ஒலிம்பிக்கில் அந்தஅணியே முறியடித்துள்ளது குறிப்பிடத்தக்கது. அந்த அணியின் இம் டாங் ஹியுன் 699 புள்ளிகளுடன் (72 அம்புகள்) முதலிடம் பிடித்ததுடன், தனது முந்தைய சாதனையையும் (துருக்கி போட்டியில் 696 புள்ளி) முந்தி அசத்தினார். இவர் பார்வை குறைபாடு உடையவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது இடது கண் பார்வை திறன் 20/200 மட்டுமே. அதாவது அந்த கண்ணில் முழுமையாக பார்வை இல்லை என்றே சொல்லலாம். வலது கண்ணிலும் 20/100 பார்வை திறன் மட்டுமே உள்ளது. இவர் 2004 மற்றும் 2008 ஒலிம்பிக் குழு போட்டியில் தங்கம் வென்றுள்ளார்.

தாயகத்திற்காக விளையாடுவதைப் பெரிதாகப் பார்க்கின்றேன். தங்கம் வெல்வதே எனது இலட்சியம். இந்த இலக்கை அடைவதற்கு கடுமையாக உழைக்க வேண்டும். நிச்சயம் நாட்டுக்கு தங்கப் பதக்கத்துடன்தான் திரும்புவேன். தன்னம்பிக்கையுடன் போராடினால் எந்த இலக்கையும் அடைய முடியும் என்பது வரலாறு. அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும் என டாங் ஹியுன் தெரிவித்தார்.

## நகரை அதிர வைத்த மணியோசை



ஒலிம்பிக் போட்டி தொடக்கவிழாவையொட்டி, லண்டனின் பெருமைமிகு அடையாளச் சின்னங்களில் ஒன்றான பிக் பென் கடிகாரம் நேற்று முன்தினம் தொடர்ச்சியாக 3 நிமிடத்துக்கு மணியோசை எழுப்பி நகரையே அதிர வைத்தது. அதே நேரத்தில் நகரம் முழுவதும் உள்ள தேவாலயங்களில் உள்ள மணிகளும் ஒலிக்கப்பட்டன. ஆங்காங்கே வீதியில் திரண்ட மக்களும் மணியோசை எழுப்பி ஒலிம்பிக் போட்டியை வரவேற்றனர். தேம்ஸ் நதியில், 2ஆவது ராணி எலிசபெத் மிதவையில் வைக்கப்பட்டிருந்த மணியும் இதில் கலந்துகொண்டது.

## ஒலிம்பிக் துளிகள்...

### போதையால் வெளியேற்றம்

(வெய்மௌத)

குடிபோதையில் வாகனம் ஓட்டிய தென் கொரிய படகுப் பயிற்சியாளர் லீ ஜீ-சேயே-ால், லண்டனிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டார். வெய்மௌத் மேயர் அளித்த விருந்தில் பங்கேற்று விட்டு குடிபோதையில் வாகனம் ஓட்டி வந்த சேயோல், பொலிஸாரிடம் சிக்கினார். இதையடுத்து அவர் தென் கொரியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டார். இந்த சம்பவத்துக்கு தென் கொரிய படகுப் போட்டி சம்மேளனம் மன்னிப்பு கோரியுள்ளது. சேயோலுக்கு ரூ. 20 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக சம்மேளன செயலர் கிம் ஜூன் தெரிவித்துள்ளார்.

### மாரடைப்பால் மரணம்

(லண்டன்)

ஒலிம்பிக் போட்டிக்காக லண்டன் சென்றிருந்த துருக்கி குத்துச்சண்டை ரெப்ரி கரிப் இர்குயும்கு (73) மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார். சர்வதேச குத்துச் சண்டை நடுவர் அமைப்பில் உறுப்பினராக உள்ள இவர், போட்டியின்போது நடுவர்களுக்கு உதவுவதற்காக லண்டனுக்கு சென்றிருந்தார்.

### தங்கம் வெல்வது கடினம்

கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் போட்டியில் பட்டம் வெல்வதை விடவும் ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வெல்வது மிகவும் கடினமானது என்று முதல் நிலை வீரர் ரோஜர் பெடரர் (சுவிஸ்) கூறியுள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், லண்டன் ஒலிம்பிக் பதக்கம் வெல்ல எனக்கு அதிக வாய்ப்பு இருப்பதாக சொல்கிறார்கள். அதே உறுதியுடன் களமிறங்கி, கடைசி வரை போராடி பதக்கத்தையும் கைப்பற்றுவேன் என நம்புகிறேன். காயம் காரணமாக நடப்பு சம்பியன் ரபேல் நடால் விளையாட முடியாதது துரதிர்ஷ்டவசமானதுஅவர் விரைவில் குணமடைய வாழ்த்துகிறேன். லண்டன் ஒலிம்பிக் போட்டியுடன் ஓய்வு பெறும் திட்டம் ஏதும் இல்லை. 2016 ரியோ ஒலிம்பிக்கிலும் விளையாடுவேன் என நம்புகிறேன் என்றார்.

### கார் விபத்தில் பிராவோ காயம்

மேற்கிந்தியத்தீவு அணியின் சகலதுறை வீரர் வேய்ன் பிராவோ கார் விபத்தில் சிக்கி காயம் அடைந்தார். மத்திய டிரினிடாட், உரியா பட்லர் நெடுஞ்சாலையில் தனது வெள்ளை நிற ஜாகுவார் ஸ்போர்ட்ஸ் காரில் சென்று கொண்டிருந்தபோது, பின்னால் வந்த ஒரு கார் வேகமாக மோதியதால் ஏற்பட்ட இந்த விபத்தில், பிராவோவின் இரண்டு கைகளிலும் காயம் ஏற்பட்டது. அருகில் இருந்த ஒரு மருத்துவமனையில் உடனடியாக அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

## முதல் தங்கம் வென்றது சீனா



(லண்டன்)

ஒலிம்பிக் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று துப்பாக்கி சூடு பெண்கள் 10 மீற்றர் ஏர் ரைபிள் போட்டி நடைபெற்றது. தகுதிச் சுற்றில் போலந்து (399), சீனா (399), ரஷ்யா (398), சீனா (398), ஈரான் (397), அமெரிக்கா (397), புள்ளிகள் (6,7), செக் குடியரசு (397) நாட்டு வீராங்கனைகள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றனர். இறுதிப்போட்டி இலங்கை நேரப்படி மதியம் 3.30 மணிக்கு நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் சீனாவின் யி சில்லிங் 502.9 புள்ளிகள் பெற்று தங்க பதக்கத்தை தட்டிச் சென்றார். இந்த ஒலிம்பிக் போட்டியில் இதுவே முதல் தங்கம் என்பது குறிப்பிடத்தக்கது. சில்லிங்கை தொடர்ந்து போலந்து வீராங்கனை சில்வியா 502.2 புள்ளிகள் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும், சீனா வீராங்கனை யூ டான் 501.5 புள்ளிகள் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.



## சவுதிஅரேபியா மிரட்டல்

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் சவுதி அரேபியா வீரர்-வீராங்கனைகள் பல்வேறு போட்டிகளில் பங்கேற்கிறார்கள். இதில் மகளிர் ஜூடோ போட்டியில் மோதும் சவுதி வீராங்கனைகள் முஸ்லிம் மத வழக்கப்படி பர்தா அணிய அனுமதிக்க வேண்டும் என்று சவுதி அரேபியா கோரிக்கை விடுத்துள்ளது.

இதையடுத்து லண்டனில் நேற்று முன்தினம் சர்வதேச ஜூடோ பெடரேஷன் ஆலோசனை கூட்டம் தலைவர் மரியஸ் வியெர் தலைமையில் நடந்தது. அதில் பர்தா அணிவதால் ஏற்படும் சாதக பாதகங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது.

ஜூடோ வீராங்கனை தனது தலையில் முககவசம் போல் உடை அணிந்து மோதுவது கடினம். மேலும் அது பாதுகாப்பானதும் அல்ல, ஜூடோ போட்டி முறைக்கு எதிரானது என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. ஜூடோ போட்டியில் வீராங்கனைகள் மோதிக் கொள்ளும் போது தலையை மறைக்கும் விதமாக பர்தா அணிந்து இருந்தால் ஆபத்து விளைவிக்கும் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

ஆனால் சவுதி ஆரேபியா பிரதிநிதி கூறுகையில்: எங்கள் நாட்டு வழக்கப்படி தலையில் பர்தா அணிய அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆசிய ஜூடோ பெடரேசன் அமைப்பானது முஸ்லிம் பெண்கள் தலையில் பர்தா அணிய அனுமதித்துள்ளது. எனவே சர்வதேச ஜூடோ பெடரேசனும் அனுமதிக்க வேண்டும். அனுமதி மறுத்தால் ஒலிம்பிக் போட்டியையே புறக்கணிப்போம் என்று சவுதிஅரேபியா மிரட்டல் விடுத்துள்ளது.

## முன்னிலையில் மேற்கிந்தியத்தீவுகள்







(ஆன்டிகுவா)

கிறிஸ் கெய்ல், பவல் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தில் மூலம் நியூசிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி முன்னிலைபெற்றுள்ளது.

நியூசிலாங்து, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் மேற்கிந்தியத்தீவின் ஆன்டிகுவாவில் நடைபெற்று வருகின்றது. முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் மேற்கிந்தியத்தீவுகள் அணி மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, ஆறு விக்கெட்டுக்களை இழந்து 442 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய கிறிஸ் கெயல், பவல் இணை மிகச் சிறப்பாக ஆடி அணியின் ஆட்ட எண்ணிக்கையை உயர்த்தியது. இந்த இணை முதலாவது விக்கெட்டுக்காக 254 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிறிஸ் கெய்ல் 150, பவல் 134 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் வில்லியம்சன், மட்ரீன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். நான்கு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 91 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றது. நியூசிலாந்து முதல் இனிங்ஸ் 351.

### முதல்தர அணி போன்று ஆடவில்லை; அன்டர்சன் குற்றச்சாட்டு

தென்னாபிரிக்காவிற்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் உலகின் முதற்தர அணி போன்று இங்கிலாந்து அணி விளையாடியிருக்கவில்லை என இங்கிலாந்து அணியின் முதன்மை வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் தெரிவித்துள்ளார். அத்தோடு முதற்தர அணியாக இருப்பதன் அழுத்தத்தை உணர்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். உலகின் முதற்தர அணியாக வர விரும்பும் போது ஏனைய அணிகளை எதிர்த்து விளையாடும் மனநிலை காணப்படும் எனத் தெரிவித்த ஜேம்ஸ் அன்டர்சன், தற்போது தாங்கள் முதற்தர அணியாகக் காணப்படும் போது ஏனைய அணிகள் தங்களைத் துரத்தும் நிலை காணப்படுவதாகத் தெரிவித்தார்.



# கிண்ணம் வென்றது எழுவைதீவு பத்திமா

(ஊர்காவற்துறை)


ஊர்காவற்துறை பிரதேசத்திற்குட்பட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் சென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை எழுவைதீவு பத்திமா 'ஏ' அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

ஊர்காவற்துறை பிரதேச சபையின் திறந்த வெளியரங்கு மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் றேஞ்சரஸ் அணியை எதிர்த்து எழுவைதீவு பத்திமா 'ஏ' அணி மோதியது.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய எழுவைதீவு பத்திமா 'ஏ' அணியினர் 3-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

இப்போட்டி நிகழ்வில் ஈ.பி.டி.பியின் ஊர்காவற்துறை அமைப்பாளரும், பிரதேச சபைத் தவிசாளருமான ம.ஜெயக்காந்தன் கலந்து கொண்டு வெற்றியீட்டிய அணிக்கு கிண்ணத்தை வழங்கிக் கௌரவித்தார்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக உதவி அரசாங்க அதிபர் திருமதி அன்ரன் யோகநாயகமும், கௌரவ விருந்தினர்களாக பிரதேச சபையினர் அ.பெ.அல்பேட், கிராம சேவகர் பத்திநாதன் சென்ஜேம்ஸ் சனசமூக நிலையத் தலைவர் அந்தோனி ஐயா பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் இன்று கரப்பந்து பயிற்சி முகாம்

(யாழ்ப்பாணம்)

கரப்பந்தாட்டத்துறையை வளர்க்கும் முகமாகப்பெண்களுக்கான கரப்பந்தாட்டப் பயிற்சி முகாம் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி முகாமிற்கு கிரிடா சக்தியின் யாழ்மாவட்ட நிகழ்ச்சித் திட்டப்பணிப்பாளர் நந்தசேனா கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கவுள்ளார்.

அத்துடன் கரப்பந்தாட்டப் பயிற்றுநர் தயாளபாலனும் இணைந்து பயிற்சிகளை வழங்கவுள்ளார். இப்பயிற்சி முகாமிற்கு பிரதம விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட உதவிப்பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா, தெல்லிப்பளை இளைஞர் சேவை அதிகாரி சபேஷன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். இப்பயிற்சி முகாமில் தெரிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கான கரப்பந்தாட்ட உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (93)


# சென். ஜோன்ஸ் அபார வெற்றி

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிஅணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி ஏழு விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் தொடரின்ஆட்டமொன்று கடந்த 21ஆம் திகதி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 33.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சஜிந்தன் 14, றோஸ்மிலன் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் புகலினிஜன் நான்கு, கருணியன் மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 86 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி 21.3 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கருணியன் ஆட்டமிழக்காது 22 ஓட்டங்களையும், ஜோசப் 25 ஓட்டங்களையும் பெற்றனர். (எஸ்.பி.)

# கரப்பந்தாட்ட அணிக்கு சீருடை



(யாழ்ப்பாணம்)

வடமாகாண கரப்பந்தாட்ட பெண்கள் அணிக்கான சீருடை வழங்கும் வைபவம் கடந்த வியாழக்கிழமை மகாஜனர்க் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வைபவத்திற்கு வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை கலந்துகொண்டு வடமாகாண கரப்பந்தாட்ட பெண்கள் அணிக்கான சீருடையை வழங்கிக் கௌரவித்தார். மகாஜனாக் கல்லூரி அணியின் கரப்பந்தாட்டப் பயிற்றுநர் தயாளபாலனுக்கு சீருடை வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இவ்வைபவத்தில் மகாஜனாக்கல்லூரி அதிபர் வேல்சிவானந்தன், தெல்லிப்பளை பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் வல்லவக்குமரன், தெல்லிப்பளை பிரதேச இளைஞர் சேவைகள் அதிகாரி சபேஷன் மற்றும் கரப்பந்தாட்டப்பயிற்றுநர் தயாளபாலன், வடமாகாண விளையாட்டு அதிகாரிகள், மாணவர்களும் கலந்துகொண்டனர். (93)

# ஜெய்ப்பூர் பயனாளிகளுக்கிடையிலான போட்டி முடிவு

(யாழ்ப்பாணம்)

ஜெய்ப்பூர் நிறுவனத்தின் 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அதன் பயனாளிகளுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளின் முடிவு வெளியிடப்பட்டுள்ளது.

துவிச்சக்கரவண்டி, முச்சக்கரவண்டி, 100 மீற்றர், தடை தாண்டல் ஓட்டம், மெதுவான துவிச்சக்கரவண்டி ஓட்டம், சங்கீதக் கதிரை என பல போட்டி நிகழ்வுகள் நடைபெற்றது.

இதில் முழங்காலுக்கு மேல் கால்களை, முழங்காலுக்கு கீழ் என இரு வகையில் பிரிக்கப்பட்டு நடத்தப்பட்ட இப்போட்டி இருபாலாருக்குமிடையில் இடம்பெற்றது.

வயது அடிப்படையில் நடைபெற்ற இப்போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு

முழங்காலுக்கு மேல் 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள்: முதலாமிடம் எம். பொன்னுத்துரை, இரண்டாமிடம் எஸ். சுப்பிரமணியம்.

முழங்காலுக்கு மேல் 40 வயதுக்கு கீழ்ப்பட்ட ஆண்கள்: முதலாமிடம் ஆர். பிரதீபன், இரண்டாமிடம் வி. தனுசியன், மூன்றாமிடம் ஆர். புவிராஜ்.

முழங்காலுக்கு மேல் 40 வயதுக்கு கீழ்ப்பட்ட பெண்கள்: முத்லாமிடம் பி. ஞானசவுந்தரி, இரண்டாமிடம் ஆர். கம்சா, மூன்றாமிடம் ஆர். மோகனகலா.

முழங்காலுக்குக் கீழ் 40 வயதுக்கு கீழ்ப்பட்ட ஆண்கள்: முதலாமிடம் ஆர். உதயகுமார், இரண்டாமிடம் ரி. அனுராசா, மூன்றாமிடம் கே. ஜெயகுமார்.

முழங்காலுக்குக் கீழ் 40 வயதுக்கு கீழ்ப்பட்ட பெண்கள் : முதலாமிடம் செல்வி ரி. புஸ்பநிதி, இரண்டாமிடம் எஸ். யசிந்தா, மூன்றாமிடம் திருமதி எஸ். ரஞ்சிதமலர்.

முச்சக்கரவண்டி ஓட்டம் ஆண்கள்: முதலாமிடம் எஸ். செல்லத்துரை, இரண்டாமிடம் கே. ராஜேந்திரன், மூன்றாமிடம் எம். அற்புதராஜா.

100 மீற்றர் ஓட்டம்

முழங்காலுக்கு மேல் 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் : முதலாமிடம் எம். பொன்னுத்துரை, இரண்டாமிடம் பி. பரமகுமார், மூன்றாமிடம் எஸ். சுப்பிரமணியம்.

முழங்காலுக்கு மேல் 40 வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆண்கள்: முதலாமிடம் கே. நவநீதன், இரண்டாமிடம் ஆர். பிரதீபன், மூன்றாமிடம் எஸ். கபின்ராஜ்.

முழங்காலுக்குக் கீழ் 40 வயதுக்கு மேற்பட்ட பெண்கள்: முதலாமிடம் ஆர். உதயகுமார், இரண்டாமிடம் எல். ஜெயக்குமார், மூன்றாமிடம் கே. ஜெயக்குமார்.

முழங்காலுக்கு மேல் 40 வயதுக்கு கீழ்ப்பட்ட பெண்கள்: முதலாமிடம் ஆர். மோகனகலா, இரண்டாமிடம் திருமதி பி. ஞானசவுந்தரி, மூன்றாமிடம் ஆர். கம்சா.

முழங்காலுக்குக் கீழ் 40 வயதுக்கு கீழ்ப்பட்ட பெண்கள்: முதலாமிடம் எம். இந்திராகாந்தி, இரண்டாமிடம் எஸ். ரஞ்சிதமலர், மூன்றாமிடம் எஸ். ராஜேஸ்வரி.

தடை தாண்டல் ஓட்டம்

முழங்காலுக்கு மேல் ஆண்கள்: முதலாமிடம் வி. தனுசியன், கே. நவநீதன், இரண்டாமிடம் ஆர். புவிராஜ், மூன்றாமிடம் எஸ். கபின்ராஜ்.

முழங்காலுக்குக் கீழ் ஆண்கள்: முதலாமிடம் ஏ. பிரகாஸ், எல். ஜெயக்குமார், இரண்டாமிடம் கே. ஜெயக்குமார், கே. பிரதீபன், மூன்றாமிடம் ஆர். உதயகுமார், ரி. பிரேமசீலன்.

முழங்காலுக்கு கீழ் பெண்கள் : முதலாமிடம் திருமதி எம். இந்திரகாந்தி, ரி. புஸ்பநிதி, இரண்டாமிடம் திருமதி எஸ். ரஞ்சிதமலர், செல்வி. எஸ். ராஜேஸ்வரி.

மெதுவான துவிச்சக்கரவண்டி ஓட்டம்:

முழங்காலுக்கு மேல் ஆண்கள்: முதலாமிடம் எஸ். கபின்ராஜ்.

முழங்காலுக்கு கீழ் ஆண்கள்: முதலாமிடம் எல். ஜெயக்குமார்.


முழங்காலுக்கு மேல் பெண்கள்: முதலாமிடம் திருமதி. பி. ஞானசவுந்தரி.

முழங்காலுக்கு கீழ் பெண்கள்: முதலாமிடம் திருமதி எம். இந்திராகாந்தி.

சங்கீதக் கதிரை

ஆண்கள்: முதலாமிடம் கே. பிரதீபன், இரண்டாமிடம் ஞானகிரிதாஸ், மூன்றாமிடம் கே. ஜெயக்குமார்.

பெண்கள்: முதலாமிடம் திருமதி எஸ். ரஞ்சிதமலர், இரண்டாமிடம் ஐ. துசியந்தி, மூன்றாமிடம் எஸ். யசிந்தா. (எஸ்.பி.)



**வடமாகாணப் பாடசாலைகளிற்கிடையிலான கராத்தே சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ள மாணவர்களுடன் அவர்களது பிரதம பயிற்சி ஆசிரியர் சென்சே. விஜயராஜ் மற்றும் வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சத்தியபாலன் உட்பட்டோரைக் காணலாம். சென்சே. விஜயராஜ் சென்.ஜோன்ஸ் கல்லூரி, சென் பற்றிக்ஸ் கல்லூரி, கிளி. மகாவித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்வதக் கல்லூரி, கிளி. இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கராத்தே பயிற்றுநராகக் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)**



# சர்ச்சை மூட்டும் பச்சை நிறமே


– ரவி நடராஜன் –

முன்னாள் அமெரிக்க துணை ஜனாதிபதி, அல் கோர், (Al Gore) புவி சூடேற்றம் (global warming) மற்றும் அதனால் உண்டாகும் தீய விளைவுகளைப் பற்றி எல்லோருக்கும் புரியும்படி பவர்பொயிண்ட் காட்சியளிப்பு (Powerpoint presentation) செய்து நோபல் புரிசையும் தட்டிச் சென்று விட்டார். ஒரு புறம் தீய விளைவுகளை விஞ்ஞானிகள் விளக்கோ விளக்கென்று விளக்குகிறார்கள். யாராவது, ஏதாவது, செய்வார்கள் என்று யாரும், எதையும், செய்யாமல் ஒரு 6 வருடம் போயே போய்விட்டது! அட, பிரச்சினையை அழகாக சாட்சியங்களுடன் சொன்ன விஞ்ஞானிகள் ஏன் அதற்கான தீர்வுகளைச் சொல்லவில்லை? அப்படியே அவர்கள் சொன்னாலும் ஏன் யாரும் அதைப் பின்பற்றுவதில்லை? இப்படிப்பட்ட கேள்விகள் நம் மனதில் தோன்றுவது இயற்கைதான். அதிகம் ஒன்றும் மாறாததற்கு பல காரணங்கள் உண்டு. ஒரு புறம் இது புலிக்கு (கொஞ்சம் பழமொழியை ப்ரமோட் செய்துதான் பார்ப்போமே) மணி கட்டும் சமாச்சாரம். அதைவிட முக்கியமாக, எப்படி இந்தப் பிரச்சினையைச் சமாளிபபது என்று யாருக்கும் இன்னும் சரியாகப் பிடிபடவில்லை.

இதனால்தான், பருவநிலை மாற்றக் கருத்தரங்குகள் (climate change conferences) எந்த முடிவும் எடுக்காமல் குழப்பி, ஒரு அரசியல் சாக்கடையாக ஆகிவிட்டது. பல அரசியல்வாதிகள், இந்தப் பிரச்சினையை சரியாகப் புரிந்து கொள்ளாமல் மேலும் குழப்புகிறார்கள். இந்த விஷயத்தில் வேடிக்கை என்னவென்றால், இந்தக் கருத்தரங்குகள், பல்லாயிரம் பக்கங்களைக் கொண்ட வெளியீட்டை அச்சடித்து, மேலும் புவி சூடேற்றத்திற்கு வழி வகுக்கிறார்கள். கனடா போன்ற நாடுகள் முதலில், “கிழித்து விடுவேன் 2020 இற்குள்” என்று ஒரு கருத்தரங்கில் அறிவித்து விட்டு, அடுத்த கருத்தரங்கில், “மற்ற நாடுகள் செய்தால் நாங்களும் செய்ய முயற்சிப்போம்” என்று ஜகா வாங்குவது மேலும் குழப்பமளிக்கிறது.

பச்சை நிறுவனங்கள் (Green organizations) சக்தி பேணுதல் விஷயத்தில் கருத்தாக இருப்பவை. இவ்வகை நிறுவனங்கள், சக்தியை விரயமாக்காமல் இருப்பது, பொருட்களை மறு உபயோகம் செய்வது, அதிக சக்தி, நீர் விரயமாகாமல் உள்ளூர் பொருட்களை விற்பது, இரசாயனம் கலக்காத விவசாயத்தை ஊக்குவிப்பது, போன்ற பல முயற்சிகளில் ஈடுபடுகின்றன. பல பெரிய அங்காடிகள் இன்று ப்ளாஸ்டிக் பைகளைத் துறந்து, துணிப் பைகள் உபயோகிக்க, சின்ன சலுகைகள் தருகின்றன. பல வங்கிகள், செல்போன் நிறுவனங்கள், ஏன் அரசாங்கங்கள் கூட, காகித பட்டியல், மற்றும் பில்களைத் தவிர்த்து, மின்னணு வடிவத்திற்குத் தாவி, காகித விரயத்தைக் குறைக்க முயன்று வருகின்றன.

இப்படி ஒரு புறமிருக்க, நிறுவனங்கள் ஏன் முழு மனதோடு இப்படிப்பட்ட செயல்களில் தீவிரம் காட்டுவதில்லை? காரணம், இம்முயற்சிகளுக்கான செலவும், அதற்காக எந்த அளவிற்கு வாடிக்கையாளர்கள் செலவழிக்க தயாராக இருக்கிறார்கள் என்பதும்தான். உதாரணத்திற்கு, இரசாயன உரமற்ற உள்ளூர் த்தக்காளி மற்ற தக்காளியை விட 4 மடங்கு விலையானால், எத்தனை வாடிக்கையாளர்கள் அதை வாங்குவார்கள்? வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்பு, இரசாயன உரமுடைய தக்காளியும்,



இரசாயனமற்ற தக்காளியும் அதே விலைக்கு விற்க வேண்டும், மிஞ்சிப் போனால், ஒரு 10% அதிகமாக விலை தரத் தயார். அவ்வளவே.

மேற்குலகில், வாங்கு - பயன் - எறி (buy, use, dispose) என்பது கடந்த 60 ஆண்டுகளாக ஒரு பெரிய சாபக் கேடாகி விட்டது. வாரந்தோறும் வீட்டு வாசல்களில், பழைய டிவி, அடுப்பு, துணி துவைக்கும் எந்திரம் மற்றும் நாற்காலிகள், சோபா என்று பலவற்றையும் குப்பையாக வைப்பதைக் காணலாம். இவற்றில் பல பொருட்கள் நன்றாக வேலை செய்யும் பொருட்கள். புதிய மொடல் வேண்டுமென வீசி எறியப்பட்டவை. நுகர்வோர் இந்த மனப்பான்மையை மேற்குலகில் என்று துறப்பார்கள் என்று தெரியவில்லை. இப்பொருட்கள் நொறுக்கப்பட்டு, எரிக்கப்பட்டு சுற்றுப்புற சூழலுக்கு தீங்கு விளைவிப்பது மறுக்க முடியாதது. வட அமெரிக்காவைப் பற்றிய ஒரு ஜோக்: “இங்கு விலை உயர்ந்த கார்கள் தெருவில் நிறுத்தப்படும் குப்பைகளை பத்திரமாக வீட்டிற்குள் பூட்டி வைக்கப்படும்!”

மேற்குலகில் சில சக்தி பேணுதல் தீவிரவாதிகளுக்காக பெரிய கடைகளும் உண்டு. சாதாரண சில்லறை வியாபாரங்களை விட பன்மடங்கு அதிகமான விலையில் பொருட்களை விற்கிறார்கள். இந்த கடைகள் ஓரளவிற்கு நகைச்சுவையாகவும் இருக்கும். ப்ளாஸ்டிக்கை தவிர்ப்பதாக (ப்ளாஸ்டிக் மண்ணோடு கலக்க பல நூறு ஆண்டுகள் ஆகலாம்) சொல்லிக் கொள்ளும் இவர்கள், புல் மட்டுமே உணவாய் கொண்ட மாட்டின் பாலை ப்ளாஸ்டிக் குவளைகளில் விற்பது வேடிக்கை! மேலும், முழு சைவ கோழி மற்றும் இறைச்சி கேள்விப் பட்டிருக்கிறீர்களா? இந்தக் கடைகளில் உண்டு, விற்கப்படும் கோழி, வாழ்ந்த காலத்தில் சைவமாம்!

நகைச்சுவையை தவிர்த்துப் பார்த்தால், இந்த மாதிரி கடைகளில் உள்ளூர் பொருட்களை விற்கிறார்கள். இரசாயன உரமற்ற காய்கறிகளை விற்கிறார்கள். இப்படிப்பட்ட கடைகளில் பொருட்களின் அட்டைகளை படித்தல் ஒரு சுவாரஸியமான அனுபவம். சொக்லேட் வாங்கி அட்டையைப் படித்தால், எப்படி பால் மற்றும் இயற்கையாக வளர்ந்த கொட்டைகளை பயன் படுத்துகிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்பொழுதுதான், மற்ற பல மலிவு சொக்லேட்கள் பாலையே உபயோகிப்பதில்லை என்று நமக்கு தெரிய வருகிறது!


# முதுமை என்பது சாபமா...

“மரண பயம்” என்பார்கள்.

அவயங்கள் ஒவ்வொன்றாகப் பலவீனமடைந்து வரும் முதுமைக் காலத்தில், இந்த வகை அச்சம் ஏற்படாத மனிதரைக் காண்பது அரிது. “மரணமில்லாப் பெருவாழ்வு” என்பது ஞானியருக்கே கிட்டாத பாக்கியம்.

“மரணத்தைக் கொண்டாடுங்கள்” என்பார் ஓஷோ.

பிறப்புக்கும், இறப்புக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்வை அர்த்தமுள்ளதாக்கிக் கொண்டாலே போதும். எந்தவொரு மனிதருக்கும்



மரணம் புதிய அனுபவத்தைத் தரக்கூடும். தற்போதைய வாழ்வியல் சூழலில் பெரும்பாலான குடும்பங்களில், இயற்கை எய்தும் முதியவர்களின் மரணங்கள் மனத்தளவில்கூட, யாருக்கும் பாதிப்பை ஏற்படுத்தாமல் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

வாழ்நாள் முழுவதும். குடும்பத்துக்காகவே உழைக்கும் மனிதர்கள், கடைசிக் காலத்தில் அந்தக் குடும்பத்தாராலேயே புறக்கணிக்கப்படுவது, பொருளியல், அருளியல் சார்ந்த காரணங்களால் முதுமைக்கும், இளமைக்கும் இடையேயான பிளவு அதிகரித்துக் கொண்டே போவது, மூத்த குடிமக்களின் எதிர்காலத்தை வாழ்வுக்கும், சாவுக்கும் இடையேயான போராட்டமாக மாற்றி வருவது கண்கூடு.

“எதுக்கு இன்னும் உயிரை எடுத்துக்கொண்டு இருக்கு?” “போய்த்துலைய வேண்டியது தானே..!”

“கடைசிக் காலத்துல போய்ச்சேராமல், நம்ம உயிரை வாங்குதுகள்..!”

கிராமத்தின் வெளிகளிலோ, நகரத்து நெரிசல்களிலோ, இதுபோன்ற அமில வார்த்தைகளைக் கேட்காத முதியவர்கள் பாக்கியவான்கள்!

இந்த வார்த்தைகளை உதிர்ப்பது, தெருவில் போகிற வழிப்போக்கனோ, அண்டை, அயலாரோ அல்ல. அப்படி அமிலத்தை உமிழ்வது அவர்களது மகன்களாகவோ, மகள்களாகவோ அல்லது தேடித்தேடிப் பிடித்து வந்த மருமகன்கள் மருமகள்களாகவோ இருப்பது தான் வேதனையானது!

மரண்ம் ஒன்று மட்டுமே இதுபோன்ற ஏச்சு, பேச்சுகளில் இருந்து அந்த ஜீவன்களை விடுவிக்கும் நிவாரணியாகிறது என்பது எத்தனை கொடுமை!

அதிலும், தள்ளாத வயதில் நோய்வாய்ப்பட்டு விட்டால் அவ்வளவுதான்! “கால் கை நல்லாயிருக்கும்போதே போய்ச் சேர்ந்திடோணும்..! யாருக்கும் எந்தக் கஷ்டமும் குடுக்கக் கூடாது..!”

இல்லங்களில் தன்னுடைய இருத்தலில் சிரமமான சூழலை எதிர்கொள்ளும், எந்தவொரு முதியவரும் நொந்துபோய் உதிர்க்கும் வார்த்தைகள் இவை. இருக்கும்போது, திட்டிக் கொண்டே இருப்பார்கள்.

மறைந்த பின்னர், வருடம் தவறாமல் படையல் போட்டு கடனைத் தீர்ப்பார்கள். மகன்கள், மருமகள்களின் கொடுஞ் செயல்களால், கடைசிக் காலத்தில் கண்ணீரோடு கண்களை மூடும் ஆத்மாக்கள், அடுத்துவரும் 21 தலைமுறைகளை வாழ்வாங்கு வாழவைத்து விடவா போகிறார்கள்?

ஒவ்வொரு வீதிகளின் முற்றத்திலும் “எங்களை நிம்மதியாக வாழ விடுங்கள்” என ஈன ஸ்வரத்தில் முனகும் குரல்கள் ஒலித்துக் கொண்டு தான் இருக்கின்றன. ஆனால், செவிமடுப்பார்தான் யாரும் இல்லை.

அந்த வகையில், பென்ஷன் உள்ளிட்ட வசதி வாய்ப்புள்ள முதியவர்கள் ஒருவிதத்தில் அதிர்ஷ்டசாலிகள்! அவர்களை வைத்துப் பராமரிக்க முடியாத கட்டத்தில் முதியோர் இல்லங்களில் கொண்டுபோய் சேர்த்து விடுவதால், வீட்டாரின் ஏச்சு பேச்சுகளில் இருந்தாவது தப்பி விடுகின்றனர். ஆனால், அத்தகைய வசதி, வாய்ப்புகள் இல்லாத வறியவர்களின் நிலை தான் பரிதாபகரமானது.

எல்லா மனிதர்களையும், முதுமை ஒருநாள் வந்தடையத்தான் போகிறது. ஆனால், இதை உணராமல் அகம்பாவமாக நடந்துகொள்பவர்களை இருட்டறையில் உள்ள எந்தச் சட்டத்தை வைத்து தண்டிப்பது?

“திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன” என்பார்கள். ஆனால், பல வீடுகளில் வயதான மாமனார், மாமியார்களை நரகத்தில் தள்ளி விடுகின்றன.

விட்டுக் கொடுப்பவர்கள் கெட்டுப் போவதில்லை என்பார்கள். என்ன செய்வது? குடும்பம் என்ற படகைக் கரை சேர்க்க யாருக்கும் பொறுமையில்லையே!



“அடிபட்டு நடக்க முடியாமல்
மற்றொரு எறும்பு கூட்டுக்கு தூக்கி
என்றொரு செய்தியைப் [illegible]க்க
எறும்புகள் பற்றி மேலும் தகவல்
எறும்புகளுக்கான வரலாறு பிரமிக்க
பந்தில் எறும்புகள் இல்லாத இடம்
சிறிய நெருப்பெறும்பு, உருவத்தில்
கட்டெறும்பு, மரத்தில் இருக்கும்
நிற எறும்பு, சிறிய பிள்ளையார் எ
இவைதான் நமக்கு தெரிந்த எறும்
ஆனால், உலகில் 11,931 வகையான எறும்புகள் உள்ளன.
இவற்றில் 5.2 சதவிகித வகைகள்
நாட்டிலும் ஊர்கின்றன. எறும்புகள்
சுமார் 150 மில்லியன் ஆண்டுகளுக்
முன் தோன்றின. அண்டார்டிகா
போன்ற பனிப் பிரதேசங்களைத்
தவிர பூமியின் பல இடங்களில்
எறும்புகள் பரவிக் காணப்படுகின்ற
னும் எறும்பு வகைகள் அதிகமாக
பூமத்திய ரேகைக்கு அரு
மண்டலப் பகுதிகளில்தான். இப்பகு
புலி, ஒட்டகச்சிவிங்கி இன்னும் பல
அனைத்தையும் ஒரு தராசுத் தட்டி
எறும்புகள் அனைத்தையும் வைத்த
தட்டுதான் எடைதாங்காமல் கீழே இ
றியதாக இருந்தாலும் எண்ணிக்கை
எறும்பினங்கள்.
காட்டில் தரைப்பகுதியிலும், மர
விதானங்களிலும் வாழ்கின்றன. பெ
பொருட்களை எறும்புகள் உ[illegible]
களில் மற்ற சிறிய உயிரினங்களை
போன உயிரினங்களையும், விதை
வகைகளையும் சாப்பிட்டு வாழ்கின்
சங்கிலியின் முக்கியமான அங்கம்.
ட்டிகளுக்கு எறும்பு ஒரு முக்கிய
எறும்புகள் கூட்டமாக ஒன்று சே
சமூக வாழ்வு வியக்கத்தக்கது. ஒவ்
ஒன்றாகக் கூடி கூட்டைப் பராமரிப்
முட்டையிடுவது, இனப்பெருக்கம்
செய்வது எதிரிகளிடமிருந்து பாதுகா
பகிர்ந்து கொள்கின்றன. அவை
வேலைக்கார எறும்பு, இனப்பெருக்

# அப்பாவுக்கு என்ன தெரியும்? தந்தையைப் பற்றி மகன்

**5 வயது :** என் தந்தையால் செய்யமுடியாதது எதுவுமில்லை.

**7 வயது :** என் தந்தைக்குப் பல விஷயங்களைப் பற்றி நன்கு தெரியும்.

**10 வயது :** என் தந்தைக்கு எல்லா விஷயங்களைப் பற்றியும் தெரியும்.

**12 வயது :** என் தந்தைக்கு ஒன்றுமே தெரியாது.

**14 வயது :** அவரா அவருக்கு காலம் மாறியது எங்கே புரிகிறது.

**21 வயது :** கிடக்கிறார் அவர். அவரிடம் போய் யோசனை கேட்பதா?

**35 வயது :** ஏதோ கொஞ்சம் தெரியும்.

**40 வயது :** அவர் என்ன நினைக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்வதில் தப்பில்லை.


**45 வயது :** அவரின் யோசனையைக் கேட்டு பின் முடிவு எடுக்கலாம்.


**50 வயது :** என் தந்தையார் இது போன்ற விஷயங்களில் எவ்வளவு சிறப்பாகத் தீர்மானம் எடுப்பார் தெரியுமா?

**55 வயது :** அவர் இல்லாதது உண்மையிலேயே பெரிய கஷ்ரமாக இருக்கிறது. அவரின் ஆலோசனையைக் கேட்க முடியாமல் போனது பெரிய நஷ்டம்

**60 வயது :** அவருடைய அறிவும் அனுபவமும் எங்கே? நான் எங்கே?

இந்தியாவில், கஜுராஹோ என்ற இடத்தில் ஒரு புகழ்பெற்ற கோவில் உள்ளது. அந்தக் கோவிலின் வெளிச்சுவர், சுற்றுச்சுவர்கள் எல்லாவற்றிலும் ஆண், பெண் உடலுறவுக் காட்சிகள் பல்வேறு நிலைகளில் கற்பனைக் கெட்டாத வகையில், அழகிய சிற்பங்களாகச் செதுக்கி வைக்கப்பட்டுள்ளன.





ஆனால் உள்ளே சென்றால், கடவுளுக்குச் சிலை ஒன்றுமில்லை. அமைதியும் மௌனமுமான தியான கூடம் மட்டும்தான் உள்ளது. அங்குள்ள ஞானிகள், சாதகர்களிடம் முதலில் செக்ஸைப் பற்றித் தியானம் செய்யச் சொல்வார்கள். அந்த வெளிச்சுவர்களில் செதுக்கப்பட்டுள்ள உடலுறவுச்சிற்பங்கள் முழுவதிலும் சிந்தனை செய்யச் சொல்வார்கள். அவர்கள் செக்ஸைப் பற்றி முழுமையாக புரிந்து கொண்டு, அவர்கள் மனம் காமத்திலிருந்து விடுதலை பெற்று விட்டது என்று நிச்சயமாகத் தெரிந்து கொண்ட பின்னர்தான் அவர்கள் அந்தக் கோயிலின் உள்ளே சென்று அதனுள் இருக்கும் கடவுளைக் காண முடியும்.

ஒருவன் காமம் என்னவென்று முழுமையாகத் தெரிந்து கொண்டால்தான் அதிலிருந்து விடுபட முடியும். இல்லாது போனால் சமயம் வாய்க்கும்போது அந்த உணர்வு மேலோங்கி, தடுமாறி விடவே செய்வான். வாழ்வும் முழுமை பெறாது என்பதை விளக்கவே இந்தக் கோயிலாம்.

**('புதிய கோணங்களில் -சில சிந்தனைகள்' என்ற நூலில்)**

## தபால் சேதிகள்!



- மலேசியாவில் வனப் பகுதியில் தபால்களைச் சுமக்க யானைகளையே பயன்படுத்துகின்றனர்.
- இந்தியாவில் ஆரம்ப காலங்களில் தபால் பட்டுவாடா செய்பவர் நீண்ட தூரம் செல்லும்போது கையில் சலங்கை கட்டிய ஈட்டிய்ய தூக்கிக் கொண்டு ஓடுவார்கள்.
- பாலைவனப் பகுதியில் தபால்காரர்கள் ஒட்டகத்தில் ஏறி வருவர். நீண்ட தடியின் நுனியில் தபாலை வைத்து அதை உரிய நபரிடம் கொடுப்பார்.
- ஜேர்மனியில் தபால்காரர்கள் விரைவாக நடந்து செல்ல நீண்ட தடிகளைக் கால்களில் கட்டிக்கொண்டு உயர்ந்த மனிதர்களாக நடை போடுவார்கள்.

எறும்பு, எதிரிகளிடமிருந்து கூட்டைக் காக்கும் சிப்பாய் எறும்பு, முட்டை இடும் பெண் எறும்பு அல்லது இராணி, இறக்கையுள்ள ஆண் எறும்பு என இனம் பிரிக்கலாம்.

நாம் வழியில் காணும் எறும்புகள் அனைத்தும் வேலைக்கார எறும்புகள் தான். இவற்றில் சில உருவத்தில் வேறுபட்டு காணப்படும். உருவத்தை வைத்து அவை செய்யும்

# எறும்புகளைப் பற்றி என்ன தெரியும்...?




வேலைகளையும் அறிந்து கொள்ள முடியும். உருவத்தில் மிகச் சிறிய வேலைக்கார எறும்புகள் பெரும்பாலும் கூட்டைவிட்டு வெளியே வருவதில்லை. இராணிக்கு சேவை செய்வது, முட்டைகளைப் பராமரிப்பது இவையே இவற்றின் வேலை. இராணியை காண்பது அரிது. அது கூட்டுக்குள்ளேயே இருக்கும். அதே நேரம் இனப்பெருக்க காலங்களில் இறக்கையுள்ள ஆண் எறும்புகள் கூட்டை விட்டு வெளியில் பறந்து செல்லும் போது பார்த்திருக்கலாம். வேலைக்கார எறும்புகளின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க மண்ணுக்கு அடியில் படிப்படியாக அவை கூட்டை விரிவுபடுத்த தொடங்குகின்றன. முட்டைகளை வைத்து பாதுகாக்க அதிலிருந்து வரும் நுண்புழுக்களையும், கூட்டுப் புழுக்களையும் வைக்க, உணவை சேமித்து வைக்க என தனித்தனி அறைகளை அவை உருவாக்குகின்றன.

சில பேரப்பிள்ளைகளை தாத்தா பாட்டி வளர்த்து ஆளாக்குவது போல, நன்கு முதிர்ந்த எறும்பு கூட்டம் இனபெருக்கம் செய்யும் திறனைக் கொண்ட இறக்கையுள்ள இராணி மற்றும் ஆண் எறும்புகளை வளர்க்கிறது. இவை முழு வளர்ச்சி அடைந்தவுடன் புதிதாக தமெக்கென ஒரு குடும்பத்தை அமைப்பதற்காக வளர்ந்த கூட்டைவிட்டு வெகு தூரம் பறந்து செல்கின்றன. இதற்கு கலவிப் பறப்பு (Nuptial flight) என்று பெயர். அதே வேளையில் ஆண் எறும்பை கவர்வதற்காக இராணி எறும்பு ஒரு வித இன ஈர்ப்புச் சுரப்பை (Pheromone) தனது உடலிலிருந்து வெளியிடுகிறது. இது ஒன்றுக்கும் மேற்பட்ட ஆண் எறும்புகளை கவரும். பழங்கால சுயம்வர கதைகளைப் போல இவை தமக்குள்ளே சண்டையிட்டு, வெற்றி பெறுகிற வலுவான ஆண் எறும்புகள் இராணியுடன் இணை சேர்கின்றன. ஆனால், இதில் ஒரு சோகம் என்னவென்றால் இணை சேர்ந்த பின் ஆண் எறும்புகள் இறந்து போய் விடுவதுதான்.

எறும்பின் முட்டை வெள்ளை நிறத்தில் நீள்வட்ட வடிவத்தில் இருக்கும். வீடுகளில் அம்மியையோ அல்லது பெரிய பாத்திரத்தையோ நகர்த்தும் போது அவற்றின் கீழ் கறுப்பு நிற பிள்ளையார் எறும்பு கூடமைத்திருந்தால் வெள்ளை நிறத்தில் இருக்கும் முட்டைகளை வாயில் கவ்விக் கொண்டு அவை வேறு இடத்திற்கு செல்வதைப் பார்த்திருக்கலாம். முட்டையிலிருந்து இரண்டு நாட்களில் நுண் புழுக்கள் (Larvea) இவற்றிற்கு ஊட்டச்சத்துமிக்க எச்சில் போன்ற திரவத்தை ஊட்டி இராணி வளர்க்கும். இவை கூட்டு புழுவாகி முழு வளர்ச்சியடைந்த வேலைக்கார எறும்பாக பிறக்கும். இதன்பின் இராணிக்கு எந்த வேலையும் வைக்காமல் அவை வெளியே சென்று உணவு தேட ஆரம்பிப்பது, கூட்டை பராமரிப்பது முதலான எல்லா வேலைகளும் பகிர்ந்து செய்யத் தொடங்குகின்றன. இராணியின் ஒரே வேலை முட்டையிட்டு தனது குடும்பத்தை விரிவாக்குவது மட்டுமே.

நாம் சாப்பிட்டுக் கொண்டு இருக்கும்போது ஒரு சில உணவுத் துகள்கள் கீழே சிந்திவிட்டால் சற்று நேரத்தில் அங்கு ஒரு எறும்புக் கூட்டம் வந்து சேர்வதைக் காணலாம். எங்கிருந்து வந்தன இவை? எப்படி கிடைத்தது தகவல்?



உணவு இருப்பதைப் பார்க்கும் ஓர் எறும்பு அத்துகளின் அருகில் வந்து தனது உணர்நீட்சிகளால் (Antenna) அதை தொட்டுப் பார்த்துவிட்டு அங்கிருந்து செல்லும் போது தனது உடலின் பின்பகுதியிலிருந்து ஒரு வித வேதிப் பொருளை தரையில் கோடுபோல் தனது கூடு வரை ஆங்காங்கே இட்டு செல்கிறது. இதை மோப்பம் பிடிக்கும் மற்ற எறும்புகளும் அந்தத் தடத்தை பின்பற்றி உணவு இருக்கும் இடத்தை அடைகின்றன. இவை போடும் உணவுப் பாதை எப்போதும் வளைந்து வளைந்துதான் இருக்கும்.

உழைப்பு, சுறுசுறுப்பு என இரண்டின் சின்னங்களாக உலாவரும் அந்த சின்னஞ்சிறு உயிர்களை சற்றே உற்று நோக்கி நேசிப்போம்!

# கணினி உலா

A.J.Nimalrajan

உலகின் மிகப் பெரிய சமூக வலைத்தளமாக இருந்து வரும் பேஸ்புக்கில் 13 வயதுக்கு உட்பட்டவர்கள் உறுப்பினர்களாக சேர முடியாது. எனினும் 7.5 மில்லியன் அளவிலான 13 வயதிற்குபட்ட சிறுவர்கள் தங்களது வயதினை பொய்யாக உயர்த்தி பேஸ்புக்கில் இணைந்து உள்ளனர். எனவே, இப்போது பேஸ்புக் நிறுவனம் 13 வயதிற்குட்பட்டவர்களையும் தங்களது சமூக வலைத்தளத திற்குள் உறுப்பினர்களாக இணைக்க திட்டமிட்டிருக்கிறது. அதன் மூலம் வரும் காலத்தில் 13 வயதிற்குட்பட்டவர்களும் பேஸ்புக்கில் இணைய முடியும் என்று நம்பலாம். குறிப்பாக 13 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் பெரும்பாலும் தங்களின் பெற்றோரின் கண்காணிப்பில் இருப்பதால் அந்த பெற்றோரோடு இணைந்து அவர்கள் பேஸ்புக்கில் இணைய நிறுவனம் யோசித்து வருகிறது. மேலும்

## சிறுவர்களுக்கான தடையை நீக்குகிறது பேஸ்புக்

பல நாடுகளில் 13 வயதிற்குட்பட்டவர்கள் இப்படிப்பட்ட சமூக வலைத்தளங்களில் இணையக் கூடாது என்று பல சட்டங்களும் உள்ளன. அவற்றையும் பேஸ்புக் பரிசீலித்து வருகிறது.

மேலும் பல தருணங்களில் பெற்றோரே தங்களது குழந்தைகள் இணையதளத்தில் புகுந்து விளையாட வேண்டும் என்று ஊக்கம் அளிக்கின்றனர். அப்படிப்பட்ட சூழலில் அந்த குழந்தைகளை பேஸ்புக்கிலிருந்து தடை செய்வது அவர்களின் வளர்ச்சிக்கு குந்தகமாகலாம் என்பதையும் பேஸ்புக் நிறுவனம் பரிசீலித்து வருகிறது. இந்த திட்டத்தைக் கொண்டு வருவதற்காக பலதரப்பட்ட மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக பேஸ்புக் கூறுகிறது. எது எப்படியோ சிறுவர்களும் பேஸ்புக்கில் நுழைந்தால் பேஸ்புக்கை யாரும் வீழ்த்த முடியாது என்று நம்பலாம். ஆனால அந்த சிறுவர்களும் சரியான நோக்கத்திற்காக பேஸ்புக்கை பயன்படுத்த வேண்டும் என்பது நமது அவா.

## விண்டோஸ் -8

**புதிய** இயங்குதளத்தினை வருகிற ஒக்டோபர் மாதம் வெளியிடுவதாக மைக்ரோசொ.:.ப்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் உலகளவிலான பங்குதாரர் கண்காட்சி கனடாவில் உள்ள ரொறன்ரோவில் நடைபெற்றது. இந்த கண்காட்சியில் மைக்ரோசொ.:.ப்ட் நிறுவனம் தனது புதிய இயங்குதளமான




விண்டோஸ்-8 வருகிற ஒக்டோபர் மாதம் வெளியாகும் என்று அறிவித்திருக்கிறது.

இந்த கண்காட்சி 12ஆம் திகதி வரை நடைபெறும்.

இந்த இயங்குதளம் கொண்ட பிசி கம்ப்யூட்டர்கள் தயாரிக்கும் வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது. கடைசிக்கட்ட வேலைகள் நடந்து வருகின்றன. வாடிக்கையாளர்கள் இந்த புதிய விண்டோஸ்-8 இயங்குதளத்தினை பயன்படுத்தும்போது, மிகச் சிறப்பான பயன்பாட்டினை கொடுக்க வேண்டும் என தீவிர முயற்சி எடுக்கப்படுகிறது..

ஆகஸ்ட் மாதம் இந்த விண்டோஸ் இயங்குதளம் வெளியிடப்படும் திகதி அறிவிக்கப்படும். மைக்ரோசொப்டின் இந்த புதிய விண்டோஸ்-8 இயங்குதளம் 2,233 டொலர் இருக்கும் என்றும், இதை 231 சர்வதேச சந்தைகளில் வெளியிட உள்ளதாகவும் மைக்ரோசொ.:.ப்ட் நிறுவனம் அறிவித்துள்ளது.

## முழுத்திரையில் இணையம்



**நாம்** இணையத்தளத்தில் பிரவுஸ் செய்கையில் மேலும், கீழும் சிஸ்டம் மெனு பார்கள் மற்றும் பிரவுசரின் மெனு பார்கள் அதிகம் இருக்கும். இவைகள் நாம் ஏற்படுத்திக்கொண்ட ப்ளக் இன் புரோகிராம்களுக்கு ஏற்றவாறு இவை அமைந்திருக்கும்.

இவ்வகையான இடைஞ்சல்கள் இல்லாமல் பிரவுசர் (Browser) மட்டும் திரைமுழுவதும் வந்தால் எப்படி இருக்கும் கொண்டுவர முடியும். இதனை இன்டர்நெட் எக்ஸ்புளோரரில் எவ்வாறு கொண்டு வருவது என்பதினை காணலாம். இதனை ஆங்கிலத்தில் Kiosk Mode என அழைக்கின்றனர்.

இவ்வாறு வர முதலில் Start Menutpy உள்ள Run என்பதை கிளிக் செய்யவேண்டும். பின்பு அதில் iexplore -k page என்று டைப் செய்து என்டர்(Enter) தட்ட வேண்டும். இதில் Page என்பது நாம் திறக்க விரும்பும் இணையதள முகவரியினை தரவேண்டும்.

இனையதளம் மட்டுமல்ல நமது கணினியில் சேமித்து வைத்துள்ள இணையதளத்தினையும் இதுபோல் திறக்கலாம். எடுத்துக் காட்டாக iexplore -k c:\mydocuments\arivu-kadal.html என டைப் செய்தால் நாம் சேமித்து வைத்த வெப் பேஜ் முழு திரையில் தோன்றும். இதில் டாஸ்க் பாரும் காட்டப்படாததால். நாம் பிரவுசரை இயக்க கீகளை பயன்படுத்த வேண்டும்.

இதில் இன்டர்நெட் எக்ஸ்புளோரரை மூட Ctrl + W அல்லது Alt +F4 கீகளை அழுத்தலாம். இது போன்று கீ தொகுப்புகளை அழுத்துவதன் மூலம் இதனை இயக்கலாம், இந்த கீ தொகுப்பு http:/support.microsoft.com/kb/154780 என்ற இந்த இணையதளத்திலிருந்து பெறலாம். அந்த முகவரியில் உள்ள கீகள் உங்களுக்காக;


Keyboard Shortcuts for Kiosk Mode

## கணினி - சில எளிய வழிகள்



1. சரியாகத் திரையைப் படிக்கமுடியவில்லையா?

தட்டச்சு பலகையில் இடது பக்கம் உள்ள ஷிப்ட் + ஆல்ற் + பிரிண்ட் ஸ்க்ரீன் [Left Shift+Left Alt+PrtScreen] ஒருசேர அழுத்துங்கள் கீழ் உள்ளது போல் ஒரு பெட்டி வரும். அதில் OK பட்டனை அழுத்தினால் திரையின் Contrast மாறும்.


HighContrast

Pressing the left SHIFT, left ALT, and PRINT SCREEN keys turns on High Contrast. High Contrast improves readability for people with visual impairments by applying a special system color scheme and font size.

To keep High Contrast on, click OK.
To cancel High Contrast, click Cancel.
To deactivate the key combination for High Contrast, click Settings.

OK Cancel Settings

அதில் நமக்கு விருப்பமானதை தேர்வு செய்து கொள்ளலாம் :இது கண் பார்வைக் குறைவு உள்ளவர்களுக்கு உதவும்.

2. கணினியை 5 வினாடிகளில் ஷட் டவுண் செய்ய

இது WIN XP பயன்படுத்துபவர்களுக்கு மட்டும். கணினியை பயன்படுத்திவிட்டு விரைவாக அணைக்க வேண்டும் எனில் டெஸ்க்டொப்பில் உள்ள காலி இடத்தில் மவுஸ் கொண்டு ரைட் கிளிக் செய்திடவும். அதில் வரும் மெனுவில் New/Shortcut என்பதை கிளிக் செய்யவும்.அதில் ஷட்டவுண் (shut-down) என டைப் செய்து பின்பு ஒரு ஸ்பேஸ் விட்டு கீழ்வருவதைப் போல் டைப் செய்யவேண்டும். c:\windows\system3




படத்தில் உள்ளது போல் செய்து Next பட்டனை அழுத்திய உடன், கணினி 05 வினாடிகளில் மூடப்படும் என ஒரு செய்தி வரும். இதனை நேரம் கூடுதலாகவும் வைத்து மாற்றிக்கொள்ளலாம்.

இதன் பின் NEXT என்பதை கிளிக் செய்து பின்னர் வரும் கட்டத்தில் உங்களுக்குப் புரியும் வகையில் ஒரு பெயரைக் கொடுக்கவும். அதன் பின்பு FINISH என்பதை கிளிக் செய்து வெளியேறவும் .

நீங்கள் செய்ததெல்லாம் Shutdown.exe என்ற பைலை உங்களுக்கு ஏற்றபடி இயக்க வழிசெய்ததுதான். இந்த பைல் %systemroot%\system32 என்ற இடத்தில் இருக்கிறது.

03.இன்டர்நெட்டில் லிங்குகள் புதிய டேப்பில் திறக்க

இன்டர்நெட் எக்ஸ்புளோரரில் Tools Menu சென்று Internet option என்னும் பிரிவினை தேர்ந்தெடுக்கவும். கிடைக்கும் விண்டோவில் Advance Tab செல்லவும். இதில் உள்ள பிரவுசிங் செக்கஷனில் Reuse window for launching shorcuts என்று தரப்பட்ட இடத்தில் உள்ள டிக் அடையாளத்தை எடுத்துவிடவும்.

நீங்கள் பயர்பொக்ஸ் பயன்படுத்துபவராக இருந்தால் Tools Option செல்லவும். அதன் பின் “Advanced” என்ற பட்டனைக் கிளிக் செய்க. கிடைக்கும் விண்டோவில் Tabbed Browsing என்ற ஒரு பிரிவு காணப்படும். அதில் நீங்கள் எப்படி விரும்புகிறீர்களோ அதற்கேற்றாற் போல் தேர்ந்தெடுத்து OK கொடுத்து வெளியேறவும்.

இனி லிங்க் கிளிக் செய்தால் புதிய விண்டோவில் மட்டுமே கிடைக்கும் .

04.அவுட்லுக் எக்ஸ்பிரஸில் காணாமல் போன பட்டனை மீண்டும் கொண்டு வருவது எப்படி?

சில நேரங்களில் நாம் அவசரமாக செயல்படும்போது தவறுதலாக சிலவற்றை அழித்து விடுவோம். அவ்வாறாக CreateMail, Reply, Forward, Send/Received, Delete போன்ற பட்டன்களை மறைந்து போகச் செய்து விடுவோம்.

அதனை மீண்டும் அங்கு கொண்டுவர அந்த பட்டன்கள் வழக்கமாக எங்கு அமருமோ அந்த இடத்தில் காலியாக கிரேயாக உள்ள இடத்தில் ரைட் கிளிக் செய்திடுங்கள். கிடைக்கும் மெனுவில் Customize என்பதை தேர்ந்தெடுங்கள். Current Toolbars என்று காட்டப்படும் பெட்டியில் Reset என்னும் பட்டனில் கிளிக் செய்திடவும். செய்த பின்பு பார்த்தால் அனைத்தும் மீண்டும் அதே இருப்பதை காணலாம்.

05.DLL File அழிந்துவிட்டால் எங்கு கிடைக்கும்

பல நேரங்களில் Software புரோகிராம்கள் இயங்காமல் நின்று விடும். அப்போது காரணம் என்னவென்று பார்த்தால் குறிப்பிட்ட டி.எல்.எல் பைல் இல்லை (Could not find ***dll”) என செய்தி வரும் அல்லது கெட்டுவிட்டது என்று செய்தி வரும்.

சரி அந்த் ‘dll ‘file க்கு எங்கே செல்வது. அந்த சொப்ட்வேர் தொகுப்பின் ஒரிஜினல் CD-ஐ எடுத்து தேடினால் குறிப்பிட்ட பைல் எளிதில் கிடைக்காது. இதற்கு இணையம் ஒரு வழியினை தருகிறது. www.dllfiles.com என்ற தளத்திற்கு செல்லுங்கள். அதில் உள்ள தேடும் கட்டத்தில் search boxஇல் உங்களுக்கு தேவையான டி.எல்.எல் பைலின் பெயரினை டைப் செய்யவும். அந்த பைல் சம்பந்தமானவை என்ற செய்தி வரும்.




பின் அதில் உள்ள டவுண் லோட் பிரிவிற்கு சென்று நமக்கு தேவையான பைலினை தரவிறக்கி கொள்ளலாம். இது போன்ற டி.எல் .எல் பைல்கள் எல்லாம் அனைத்து Software தொகுப்புகளும் பயன்படுத்தும் வகையில் பொது வானதாக உள்ளதால் இவை இந்த தளத்தில் கிடைக்கின்றது. இந்த தளம் இது போன்ற பைல்கள் கிடைத்திட மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

# மறைந்து வாழ்ந்ததால் சமூக சேவை

(திருநெல்வேலி)

வழக்கு சம்பந்தமாகக் கடந்த 7வருடங்களாக நீதிமன்றுக்கு சமூகமளிக்காமல் தலை மறைவாகியிருந்த ஒருவர் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவருக்கு 10 ஆயிரம் ரூபா ஆள் பிணையும், ஒரு வார காலத்துக்கு யாழ். சிறுவர் நீதிமன்றில் சமூக சேவை செய்யுமாறும் நீதிவான் மாகணேசராசா உத்தரவு வழங்கினார்.

கோப்பாய்இராச வீதியைச் சேர்ந்த ஒருவர் சாரதிஅனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியதாக 2005ஆம் ஆண்டு கோப்பாய் பொலிசாரினால் பிடிக்கப்பட்டு யாழ். நீதிமன்றில் வழங்குத் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் அவர் நீதிமன்றில் வழக்குக்கு ஆஜராகவில்லை அவருக்கு நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்படடிருந்தது.

கோப்பாய் பொலிசார் அவரைக் கைது செய்தனர். யாழ். நீதிமன்றில் அவர் முற்படுத்தப்பட்ட போது மேற்படி தண்டனை வழங்கப்பட்டது.

இதே சமயம், வீட்டில் மிகவும் சத்தமாக பாட்டுக்கள் போட்டு பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்திய குருநகர் கடற்கரை வீதியை சேர்ந்த ஒருவர் கடந்த 25ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணம் பொலிசாரால் கைது செய்யப்பட் டார். இவர் யாழ். நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டபோது விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டது.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதனையடுத்து இவர் 10ஆயிரம் ரூபாவுக்கான ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டு யாழ். சிறுவர் நீதிமன்றில் ஒருவார காலம் சமூக சேவையில் ஈடுபடுமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

இன்னொரு வழக்கில் வேலணையை சேர்ந்த இருவர் உரும் ிராயில் மதுபோதையில் அநாகரிகமாக நடந்து கொண்டதாக கோப்பாய் பொலிசாரினால் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டனர். இவர்கள் யாழ். நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாவுக்கான ஆள் பிணையும், ஒரு வார காலத்துக்கு கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் சமூக சேவை செய்யுமாறும் நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டது.

(137)

## கண்காணிப்புக்குழுக்கூட்டம்

சுகாதாரத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிற்குமான ஆகஸ்ட் மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 09.30 மணிக்கு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்ட பத்தில் நடைபெறும் எனவும் இதில் சம்பந்தப் பட்டவர்கள் தவறாது சமூகமளிக்குமாறும் அறி விக்கப்பட்டுள்ளது.

# மலரும் மலர்கள் நூல் நிலைய திறப்பு விழா

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை ஜே.்.133 கிராம சேவையாளர் பிரிவுலுள்ள முள்ளிக் கிராமத்தில் யு.என்.டி.பியின் அனுசரணையுடன் மலரும் மலர்கள் நூல் நிலைய திறப்பு விழாவும் விளையாட்டுப்பொருட்கள் கையளிக்கும் நிகழ்வும் முள்ளி ஆதவன் பாலர் பாடசாலையில் நேற்று முன்தினம் நடைபெறறது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் நிரஞ்சலா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்ஜே/133 கிராம சேவையாளர் ஏ.நிசாந்தன் சண்டிலிப்பாய் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் சத்திய வதனி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் உமா பாலன் யு.என்.டி.பி. முள்ளிப் பொறுப்பாளர் சதீஸ் மாதர் சங்க தலைவி செல்வி ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிலையத்தினை சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் சத்தியவதனி நாடாவெட்டி திறந்து வைத்தார்.

நிகழ்வில் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் நிரஞ்சலா உரையாற்றுகையில், யு.என்.டி.பி. நிறுவனம் உங்களுக்கு பல வழிகளிலும் உதவி செய்து வருகின்றது. சிறார்கள் நல்ல பழக்க வழக்கங்களை பழகவேண்டும் மாலை வேளையில் விளையாட்டு உபகரணங்களை பெற்று விளையாடி சிறந்த விளையாட்டு வீரர்களாக திகழவேண்டும் என்றார்

மேலும் உங்கள் கல்வி வளாச்சிக்காக யு.என்.டி.பி. நிறுவனம் ஆண்டு 1-10 வரையுள்ள புத்தகங்களை வழங்கியுள்ளது. நீங்கள் இதனை எடுத்துச் சென்று படித்து முன்னேற வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டனர். (104)

# இரு ஊழியர்கள் பணி நீக்கம்

நல்லூர் பிரதேச சபையின் இரண்டு ஊழியர்கள் தற்காலிக மாகப் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். கொக்குவில் மயானத்தில் மிருகங்கள் மற்றும் கோழிகளின் கழிவுகளை வெட்டிப் புதைப்பதற்குப் பதிலாக அவற்றை வண்டியில் எடுத்துச் சென்ற இவர்கள் அப்படியே மயானத் தின் ஒரு பகுதியில் கொட்டிவிட்டு வந்ததாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து இவர்கள் தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மயானத்திற்கு நேரில் சென்ற சபையினர் இதனைக் கண்ணுற்றுள்ளதாகவும் இதனடிப்படையில் இவ்விருவரும் பணியிலி ருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களைப் போன்ற ஊழியர்களின் துஷ்பிரயோகங்களினால் நல்லூர் பிரதேச சபையின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுவதாகவும், இது தவிர்க்கப்படல் வேண்டும் எனவும் சபையின் தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்துள்ளார். (137)

# கற்பாறைகள் அகற்றும் பணி




சேந்தாங்குளம் கடற்கரைப்பகுதியில் பாறைக் கற்களை அகற்றும் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகிறது. சேந்தாங்குளம் பகுதி மக்கள் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் இப்பகுதியை புனரமைத்து தருமாறு வேண்டியிருந்தனர். இதற்கு அமைய, கௌரவ. டக்ளஸ்தேவானந்தா அவர்களால் மேற்கொள்ளப்பட்ட பெருமுயற்சியின் காரணமாக கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்தினூடாக IOM நிறுவனத்தின் பங்களிப்புடன் சேந்தாங்குளம் பகுதியில் 300 மீற்றர் நீளமான கடற்கரைப் பகுதியில் மீன்பிடி வள்ளங்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் உள்ள பாறைக்கற்களை பெக்கோ இயந்திரம் மூலம் 10 இலட்சம் ரூபா செலவில் அகழ்ந்து எடுக்கும் நடவடிக்கையானது நடைபெற்று வருகின்றது.

வலிவடக்கு ஈழமக்கள்ஜனநாயகக்கட்சியின் அமைப்பாளரும், தெல்லிப்பழை பிரதேசசபை உறுப்பினருமான அன்பு சேந்தாங்குளம் மீனவர் சங்க தலைவர் மரியதாஸ் பயஸ்லோகதாஸ் ஆகியோர் இந் நடவடிக்கையை பார்வையிட்டு வருகின்றனர்.

# பதிவிறக்கப் பெட்டகம்

நமது மக்கள் போலிசாமியார்களிடம் ஏமாறுவதாய் கூறப்படுகிறது. இது ஏமாற்றுதானா என்றே எனக்கு சந்தேகம் உள்ளது. முதலில் பக்தர்களில் மிகச்சில பேர் தான் புகார் அளிக்கிறார்கள் அல்லது ஏமாறப்பட்டதாகவே ஒத்துக் கொள்கிறார்கள். இருதரப்பினர்களும் ஏற்றுக் கொண்ட ஒரு சுரண்டலாகவே நாம் இதை பார்க்க முடியும். நித்தியானந்தா போன்றவர்கள் நமது பல்லாயிரம் ஆண்டு பாரம்பரியத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் அவ்வாறு கருதினால் ஒழிய இதனால் கேடு விளைவதாக நாம் கருதவும் முடியாது. உண்மையில் சட்டை பேண்ட் அணிந்த ஒரு மிகப்பெரிய பழங்குடி சமூகம் நம் சமூகம். நம்மூரில் ஒரு கலைஞனோ சிந்தனையாளனோ இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு எழுத்தாளனோ சட்டென்று இறைநம்பிக்கையாளனாகி விட்டால் [இளையராஜா, ஜெயகாந்தன்] “சோரம் போய் விட்டதாக” விமர்சிக்கிறார்கள். இது தவறானது. இவர்கள் சட்டென்று தம் ஆதி–தமிழ் மனநிலைக்கு திரும்புகிறார்கள் அவ்வளவுதான். நாட்டுப் பூனை ஒருநாள் காட்டுக்கு திரும்பி காட்டுப்பூனையாக ஆவது போல். தெருநாய்கள் சட்டென்று ஒன்று சேர்ந்து கூட்டமாக குழந்தைகளையும் சிறுமிருகங்களையும் வன்மனநிலையுடன் வேட்டையாடுவது போல்.

– ஆர்.அபிலாஷ்

ஒரு எழுத்தாளன் தன் கைப் பழயைப் பிரசுரத்திற்கு அனுப்பும்போது அந்தப் பிரதி எந்த அதிகாரமும் இன்றி பரிசுத்தமாக ஒரு இதழ் ஃ பதிப்பக அலுவலகத்திற்கு வருவதில்லை. எல்லாக் கையெழுத்துப்பழகளுக்கும் அழயில் ஒரு கத்தி எப்போதும் ஒளிந்திருக்கும். நான் ஒரு முதிய எழுத்தாளர் அல்லது முற்போக்குவாதி அல்லது பெண் அல்லது இது என் முதல் படைப்பு அல்லது கணையாழிக் கவிஞன் அல்லது இளம் படைப்பாளி அல்லது புலம்பெயர்ந்து துன்புற்றவன் அல்லது போர்க்களத்தில் வாழ்பவன் அல்லது உனக்கு நான் மாற்றுத் தரப்பு அல்லது ஒடுக்கப்பட்டவன். இந்த அதிகாரங்களோடு ‘பேச்சுவார்த்தை’ நடத்தாமல் பிரசுரத் தேர்வு என்பது சாத்தியமே இல்லை.

அதேபோல எந்த உன்னத எழுத்தாளனாலும் நிறுவனத்தாலும் சமரசமின்றி இயங்க முழயாது. முதலில் தன்னுடைய எழுத்தில் எந்த நுட்பமான எழுத்தாளனும் முழு நிறைவு பெறுவதில்லை. எனவே முதலில் உணர்வுகளுக்கும் வெளிப்பாட்ழற்கும் இடையே ஒரு சமரசம் நிகழ வேண்ழய அவசியம் உருவாகிறது. அடுத்ததாக எந்த ஒரு வெளியீட்டுச் சாதனத்துடனும் எழுத்தாளனுக்கு முழுமையான உடன்பாடு இருக்க முழயாது. ஆக வெளியீட்ழற்காகப் படைப்பை அனுப்பிவைப்பதில், வெளியீட்டுச் சாதனத்தின் தேர்வில் அடுத்த சமரசம் நிகழ்கிறது. சமரசமற்ற இயக்கம் என்பது தர்க்க முரண் கொண்ட ஒரு தொடர்.

அதுபோல் எந்தப் பிரக்ஞைபூர்வமான செயல்பாட்ழலும் அரசியல் கலந்திருக்கும். கலந்திருக்க வேண்டும். ஏனெனில் அரசியல் இல்லாமல் நோக்கம் இல்லை. நோக்கமில்லாமல் தேர்வு இல்லை. இவை இல்லாமல் ஒரு வாசகனோ எழுத்தாளனோ விழிப்புடன் இயங்க முழயாது.


உண்மையில் சுயலாபத்திற்காகவும் சபலத்திற்காகவும் சுய பிம்பத்தைப் பெருக்கிக்கொள்வதற்காகவும் உருண்டுகொண்ழருப்பவர்களின் இயக்கம்தான் குறைந்தபட்ச, பலவீனமான, அரசியல் கொண்டது. ஏனெனில் அவர்களின் அக்கறை பரந்துபட்ட பண்பாட்டைப் பற்றியதாக அல்லாமல் சுயம் பற்றியதாக உள்ளது. அதன் நோக்கம் மிகக் குறுகியது. எனவே இத்தகையவர்களின் இயக்கத்திற்கு அரசியல் அந்தஸ்து இல்லை. இவர்களிடம் தீவிரமான நிலைப்பாடு எதுவும் இல்லை என்பதால் சமரசம் செய்துகொள்வது கூட இவர்களுக்குச் சாத்தியமில்லை. பொறுப்பும் உழைப்பும் இல்லாததால் அதிகாரமும் இவர்களுக்குக் கைகூடுவதில்லை. எனவே ‘அதிகார எதிர்ப்பு’ என்ற போர்வையில் குட்ழ அதிகாரங்களை எதிர்த்தபழ பெரும் அதிகாரங்களுக்குச் சோரம் போவதே இவர்களுடைய செயல்பாடாக இருக்கும். தீவிர நிலைப்பாடு கொண்ட எல்லாப் புள்ளிகளும் இவர்களின் தாக்குதலுக்கு ஆளாகும். சீரழிவு இவர்களுக்கு இன்பத்தையும் குதூகலத்தையும் ஏற்படுத்தும்.

– காலச்சுவடு கண்ணன்

பாரம்பரியமாக வந்த வழியிலிருந்து ஒருவன் சிறித்ளவு விலகிச் சென்றாலும் என்ன செய்வதென்று அவன் குழப்பமடைகிறான். பலரும் கடந்து சென்ற வழியில் செல்பவனுக்கோ எல்லாம் தெளிவாகத் தெரிகிறது.

– ரொஸ்ரயேவ்ஸ்கி

# தேசிய வடிவமைப்பு நிலைய இணையத்தளம் ஆரம்பிப்பு



பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான தேசிய வடிவமைப்பு நிலையத்திற்கான புதிய இணையத்தளத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சம்பிரதாயபூர்வமாகத் தொடக்கி வைத்தார்.

கொழும்பு மொறட்டுவ பகுதியில் அமைந்துள்ள தேசிய வடிவமைப்பு நிலையத்திற்கு நேற்றுமுன்தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அவர்கள் குறித்த இணையத்தளத்தை தொடக்கி வைத்தார்.

தேசிய வடிவமைப்பு நிலையத்தின் செயற்திட்டங்களை விரிவாக்குவது மற்றும் துறை சார்ந்த கல்வியை இணையத்தளத்தினூடாக மேற்கொள்வது போன்ற பயன்பாட்டுக்காக அமைச்சர் அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக இவ் இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேசிய வடிவமைப்பு நிலையத்தின் தலைவர் மார்சல் ஜனதா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மங்கள விளக்கேற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து www.slndc.gov.lk என்ற இணையத்தளம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி உரையாற்றும் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது வழிகாட்டலுக்கு அமைவாக தேசிய வடிவமைப்பு நிலையத்தின் பல்துறைசார்ந்த கல்வி செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் மேற்படி இணையத்தளம் திறந்துவைக்கப்பட்டதாகவும், இதனூடாக மேற்படி நிலையத்தின் செயற்திட்டங்கள் நாடளாவிய ரீதியில் விரிவுபடுத்தப்படுமென்பதுடன், இணையத்தளத்தில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய 03 மொழிகளிலும் செய்திகள் மற்றும் விளக்கக் குறிப்புகள் வெளியிடப்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து நிலையத்தின் பல்வேறு தொழில்துறைகளையும் பார்வையிட்ட அமைச்சர் அவர்கள் துறைசார்ந்த அதிகாரிகளுடனும் கலந்துரையாடினார்.

இதன்போது அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சரின் ஆலோசகர் திருமதி.வி.ஜெகராஜசிங்கம், தேசிய வடிவமைப்பு நிலையத்தின் பணிப்பாளர் சந்திரசிறி, தேசிய வடிவமைப்பு நிலையத் தலைவர் மார்ஷல் ஜனதா, தேசிய அருங்கலைகள் பேரவைத் தலைவர் புத்தி கீர்த்தி சேன, லக்சல பணிப்பாளர் அனில் ஹொஸ்வத்த ஆகியோர் உடனிருந்தனர்.

# பாடசாலை செல்ல முடியாத மாணவர்களுக்கு உதவிகள்

யாழ்.வர்த்தக சங்கங்கங்களின் சம்மேளனமும், நெல்லியடி வர்த்தக சங்கமும் இணைந்து பாடசாலைக்கு செல்ல முடியாத நிலையில் உள்ள மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளன என நெல்லியடி வர்த்தக சங்கத்தலைவர் அகிலதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் எமது செய்தியாளரிடம் மேலும் தெரிவிக்கையில்,

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழும் அல்லது யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தமது கல்வியை தொடரமுடியாத நிலையிலுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களின் தேவையை அறிந்து கல்வி வளர்ச்சிக்காக தேவைகளை சங்கம் வழங்கவுள்ளது.

நெல்லியடி வர்த்தக நிலைய உரிமையாளர்களின் குடும்பத்தியாராவது இறந்தால் மரணச்சடங்குக்காக 25ஆயிரம் வழங்கப்படும.

நெல்லியடி புதிய சந்தை தொடக்கம் நெல்லியடி சந்தி வரைக்கும் வர்த்தக சங்க வர்த்தகர்களின் நிதியுதவியுடன் வீதி மின் விளக்குகள் பொருத்தப்பட்டு சிறப்பாக கண்காணித்து வருகின்றோம். நெல்லியடி நகரமே பகல் போல மின் ஒளி வீசப்பட்டு வருகின்றது. அண்மைக்காலத்தில் இரவோடு இரவாக பல கடைகள் விசமிகளால உடைக்கப்பட்டு களவாடப்பட்டது. இதனால் அவ்வர்த்தகர்களுக்கு நிலையங்களின் வர்த்தகர்களுக்கு் பல இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து இரவில் பலமான தனியார் பாதுகாப்பு ஊழியர்களையும் கடமைக்கு அமர்த்தியுள்ளளோம். நெல்லியடி நகரப்பகுதியில் இருந்த துவிச்சக்கர வண்டிகளை வர்த்தக சங்கம் மீட்டுள்ளது. எனவே உரியவர்கள் கவனயீனமாக விடப்பட்ட துவிச்சக்கர வண்டிகளை உரிய ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(116)

# மண்டலாபிஷேகம்

மண்டைதீவு அருள்மிகு ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயத்தின் மண்டலாபிஷேகமும், சங்காபிஷேகமும் நாளை திங்கட்கிழமை அதிகாலை ஆரம்பித்து நடைபெறவுள்ளதாக ஆலய அறங்காவற் சபையினர் தெரிவித்துள்ளனர்.

24 வருடங்களாக நாட்டில் அசாதாரண சூழ்நிலை இடப்பெயர்வு போன்ற காரணங்களால் சீரளிந்து போன வரலாற்றுக்குமுற்பட்ட இந்த ஆலயம் சீரமைக்கப்பட்டு கடந்த 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து வேப்பம்திடல் கவளியீட்டுக் குழுவினரால் மண்டைதீவு மாரியம்மன் மீது புனையப்பட்ட கவிதைகள், பாடல்கள், கட்டுரைகள், வரலாற்றுத் தகவல்கள், மண்வாசனை தொடர்பான வரலாற்றுக் கண்கொண்ட சமய உண்மைகள் நிறைந்த ஆக்கங்களின் கதம்பமான 'கும்பாபிஷேக மலர்' வெளியீடும் நடைபெறவுள்ளது.

(23)

# அரியாலை நாவலடியில் கடற்தொழில் முன்னேற்றக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பாசிக் நிறுவனத்தினால் ஜே/89, ஜே/90 கிராம அலுவலர் பிரிவில் உள்ள கடற்தொழிலாளர்களின் கடற்தொழில் வள்ளங்கள் வழங்கப்பட்ட கடற்தொழிலாளர்களின் தொழில் முன்னேற்றம் தொடர்பான கூட்டம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை அரியாலை நாவலடி உதய முன்பள்ளியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பாசிக் நிறுவனத்தினால் வள்ளங்கள் ஒரு இலட்சம் ரூபாவில் 50 வீதம் கடன் அடிப்படையில் குறித்த கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கடற்தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது. இதில் கடனை மீளச்செலுத்தாதவரகளின் வள்ளங்கள் திருப்பி வாங்கி வாழ்வாதாரத்தை முன்னேற்றும் குடும்பங்களுக்கு வழங்குவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக கடற்தொழில் சங்கத் தலைவர் மற்றும் ஈ.பி.டி.பி நல்லூர் அமைப்பாளரும் நல்லூர் பிரதேச எதிர்க்கட்சித்தலைவருமான அ.இரவீந்திரதாஸன் ஆகியோர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முன்வைத்ததை அடுத்தே அமைச்சர் இது தொடர்பாக ஆராயுமாறு கூறியதை அடுத்தே இச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் அ.இரவீந்திரதாஸன், நல்லூர் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சுரேந்திரநாதன், உதவிப் பிரதேச செயலர் ம.சுபாசினி ஜே/89 கிராம அலுவலர் ம.ஞானேந்திரன், பாசிக் நிறுவன பிராந்திய முகாமையாளர் யோர்னி அரவிந்த், கடற்தொழில் நீரியல் வள அதிகாரி கடற்தொழில் சங்கத் தலைவர் ம.ஸ்ரீகணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஆதிவைரவர் ஆலயத்திற்கு மணல் அன்பளிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி வல்லை ஆதிகோவிலடி ஆதிவைரவர் ஆலயத்தின் கடடடப்பணிக்கான மணல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. இவ்வாலயத்தின் சுற்று பிரகார வீதிகளை சீர்செய்யும் பொருட்டு மணலை பெற்றுத் தரும்படி இப்பிரதேச ஈ.பி.டி.பி.அமைப்பாளரும் வல்வெட்டித்துறை நகரசபையின் எதிர்க்கட்சி தலைவருமாகிய பொன்.தெய்வேந்திரத்திடம் ஆலய நீர்வாகத்தினர் கோரியிருந்தனர்.

இக்கோரிக்கையினை ஏற்று அமைச்சரின கவனத்துக்கு கொண்டு சென்றதையடுத்தே மணல் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.



20 உழவு இயந்திர சுமை மணலை ஆலயத்தின் வெளிவீதியில் பரவி சீர் செய்யப்பட்டுள்ளதாக ஆலயப் பரிபாலன சபை யினர் தெரிவித்துள்ளனர்.

(116)

# பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

இலங்கை சாரணர் சங்க பருத்தித்துறை மாவட்ட கிளையின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வேலாயுதம் மகா வித்தியர்லயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் வடமாகாண உள்ளூராட்சி அமைப்பின் செயலாளரும், பருத்தித்துறை மாவட்ட கிளைச்சங்க தலைவருமான இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. அத்துடன் புதிய நிர்வாகசபைத் தெரிவும் இடம் பெறவுள்ளது.

(109)

# எதிர்காலத்தின் எஜமானர்களாக வாழ்வை அமைக்க வேண்டும்

## வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர்

(வவுனியா)

சின்னச் சின்ன ஆசைகளாகிய தொலைபேசி உரையாடல், மோட்டார் சைக்கிளில் சுற்றுதல், நண்பர்களுடன் அரட்டையடித்தல், கணினியில் விளையாடுதல் போன்ற ஆசைகளைத்துறந்து உங்கள் கல்வி வாழ்க்கை இலட்சியத்தை நோக்கிப்பயணிக்க வேண்டும் என வவுனியா வடக்கு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி பராசக்தி கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா கனகராயன் குளம் மகா வித்தியாலய க.பொ.த. உயர்தர மாணவர்களின் பிரிவுபசார விழா அண்மையில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

நீங்கள் தற்போது கல்வியில் ஒரு காலகட்டத்தினை தாண்டி அடுத்த காலகட்டத்திற்கு செல்லவுள்ளீர்கள். நாம் கற்கும் போது பல்கலைக்கழகத்திற்குச் செல்வது மட்டும் தான் வாழ்க்கையாக அமைந்தது. ஆனால் தற்போது அந்த நிலை மாறியுள்ளது. பட்டம் பெற்ற பலரைவிட பட்டம் பெறாமல் பலரே வேலைவாய்ப்பில் அதிகம் உள்ளனர். சிலருக்கு பல்கலைக்கழகம் கிடைகும் வாய்ப்பு நழுவப்பட்டால் அதற்காக துவண்டு கிடக்காமல் எமது இலட்சியத்தை நோக்கி நாம் வீறுநடை கெள்ள வேண்டும்.

நாம் போட்டி நிறைந்த இவ்வுலகில் தொழிற்சந்தையில் வாழப்பழகிக் கொள்ள வேண்டும். தங்களுடைய சொந்தக் கால்களில் நிற்க வேண்டும். நாம் எதிர்காலத்தில் எஜமான்கள் யாரிடமும் அடிபணிந்து செயற்படக் கூடாது.

இந்த வலயத்தில் நெடுங்கேணி, ஓமந்தை என இரு கோட்டங்கள் உள்ளது. இதில் நெடுங்கேணியில் உள்ள பல பாடசாலைகள் பல இன்னல்களுக்கு மத்தியிலும் தலைநிமிர்ந்து தம்மை சாதனைகளால் தக்கவைகின்றது. இதில் வவுனியா கனகராயன் குளம் மகா வித்தியாலயமும் ஒன்றாகும்.

கனகராயன் குளம் மகா வித்தியாலயத்திற்கு நீண்ட வரலாறு உள்ளது. நான் கற்ற, கற்பித்த காலங்களில் எல்லாப் பாடசாலையின் பெயரைத் தெரிந்து வைத்திருந்தேன். இப்பாடசாலை மாணவர்களின் பெறுபேற்றிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மற்றும் ஒழுக்கம் நிறைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர் என்றார்.

Grade - 13
இணைந்த கணிதம்
க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்
G.C.E. (A/L) Examination model Paper
# கல்வி முரசு
02 | T | II

ஆசிரியர் :
K.அருளானந்தம்
(Bsc.Hons.Dip-in.Edu)
Hartley College

விடைத் தொடர்ச்சி....

① $f = \frac{u}{T} \Rightarrow fT = u$.


$\lambda f = \frac{fT}{t_0} \Rightarrow t_0 = \frac{T}{\lambda}$

$AB = AC - BC = \frac{1}{2}\left[3+2+\frac{1}{\lambda}\right]fT^2 - \frac{1}{2}\left[3+\frac{1}{\lambda}\right]fT^2$

$= \frac{1}{2}\left[2\lambda\right]fT^2$ — (5)

$BC = \frac{1}{2}\left[3+\frac{1}{\lambda}\right]fT^2 = \frac{1}{2}\left[3\lambda+1\right]fT^2$ — (5)

$\frac{AB}{BC} = \frac{2\lambda}{3\lambda+1}$ — (5)




[25]


② $v = \sqrt{2gh_1}$ — (5)

$v^2 = u^2 + 2fs$.

↑ $0 = e^2(2gh_1) - 2gh_2$ — (10)

$e^2 h_1 = h_2$

$e = \sqrt{h_2/h_1}$ — (10)




[25]

③ $\underline{r} = (50+20t)\underline{i} + (95+10t-5t^2)\underline{j}$

$\frac{d\underline{r}}{dt} = 20\underline{i} + (10-10t)\underline{j}$ — (5)

$t=0$ ல் வேகம் $= 20\underline{i}+10\underline{j}$ — (5)

$t=T$ ல் வேகம் $= 20\underline{i} + (10-10T)\underline{j}$ — (5)

வேகம் செங்குத்து $\Rightarrow (20\underline{i}+10\underline{j})\cdot[20\underline{i}+(10-10T)\underline{j}] = 0$

$\Rightarrow 400 + 10(10-10T) = 0$

$\Rightarrow 500 = 100T$

$\Rightarrow T = 5$ — (10)


[25]

④ $\rightarrow X = 30P - 60P + \frac{45P}{2} + 60P - 25P - \frac{15P}{2} = -30P$ — (5)


↑ $Y = (45P + 50P - 20P - 15P)\cos 30 = 30\sqrt{3}P$ — (5)

$R = \sqrt{900P^2 + 2700P^2} = 60P$. — (5)

OE வழியே




OA, OC, OD, OF வழியே தாக்கும் விசைகளின் விளையுள் விசை = OE வழியே 30P. — (10)





[25]

⑤ சைனின் விதிப்படி $\frac{P}{\sin 2A} = \frac{Q}{\sin 2B} = \frac{R}{\sin 2C}$

$\frac{\sin A}{a} = \frac{\sin B}{b} = \frac{\sin C}{c} = \lambda$

$\frac{P}{2\lambda a\cdot\frac{(b^2+c^2-a^2)}{2bc}} = \frac{Q}{2\lambda b\frac{(a^2+c^2-b^2)}{2ac}} = \frac{R}{2\lambda c\frac{(a^2+b^2-c^2)}{2ab}}$

$P/a^2(b^2+c^2-a^2) = Q/b^2(a^2+c^2-b^2) = R/c^2(a^2+b^2-c^2)$




[25]

.=0 ஆக $(2+\sqrt{3}\cos\theta)ag = (2+\sqrt{3})ag$

$\cos\theta = \frac{2+\sqrt{3}-2}{3} = \frac{1}{\sqrt{3}}$ — (20)


$\cos\theta = 1/\sqrt{3}$ ஆனபுள்ளியில் விட்டுவெளியேறும்

$s = ut + \frac{1}{2}ft^2$ $\quad\cos\theta = 1/\sqrt{3}$ ஆக $V = V_0$ எனின்

$V_0^2 = (2+\sqrt{3})ag - 2ag(1+1/\sqrt{3})$

← $a\sin\theta = V_0\cos\theta\, t \Rightarrow t = \frac{a}{V_0}\tan\theta$ (10) $\quad V_0^2 = \frac{ag}{\sqrt{3}}$ — (10)

↓ $s = -V_0\sin\theta\left(\frac{a}{V_0}\tan\theta\right) + \frac{1}{2}g\frac{a^2}{V_0^2}\tan^2\theta$ (20)




$= -a\frac{\sqrt{2}}{\sqrt{3}}\times\sqrt{2} + \frac{1}{2}g\frac{a^2\sqrt{3}}{(ag)}\times 2$

$= -\frac{2}{\sqrt{3}}a + \sqrt{3}a = \frac{a}{\sqrt{3}}$. ∴ மையம் O ஊடு செல்லும். — (10)

(10)

⑬ $P = mf$

↓ $3mg - T = 3m\ddot{x}$ $\quad$ சமநிலையில் $T_0 = mg$

$3mg - \frac{mgl}{a}\left(\frac{x}{l}\right) = 3m\ddot{x}$ $\quad \lambda\frac{a}{l} = mg$, $\lambda = mgl/a$ (10)

$\ddot{x} = -\frac{gx}{3a} + g$ (30)

$\ddot{x} = -\frac{g}{3a}(x - 3a)$

$x = 3a + A\cos\omega t + B\sin\omega t$, $\omega = \sqrt{\frac{g}{3a}}$

$\dot{x} = -A\omega\sin\omega t + B\omega\cos\omega t$ (20)


$\underline{t=0}$ $x = a$ $\dot{x} = 0$

$0 = B\omega \Rightarrow B = 0$ (20)

$a = 3a + A \Rightarrow A = -2a$ (20)

$x = 3a - 2a\cos\omega t$

$x_{max} = 3a + 2a = \underline{5a}$ (20) $\quad \cos\omega t = -1$, $\omega t = \pi$, $t = \frac{\pi}{\omega} = \pi\sqrt{\frac{3a}{g}}$ (10)




[15]

⑭ விசை P ⇒ $P\underline{i}$ — (10)

விசை 7P, CB வழியே ⇒ $-\frac{7P}{2}\underline{i} - (7P)\frac{\sqrt{3}}{2}\underline{j}$ — (10)


விசை 8P, CD வழியே ⇒ $-4P\underline{i} + 4\sqrt{3}P\underline{j}$ — (10)

விசை 7P, ED வழியே ⇒ $7P\underline{i}$ — (10)

விசை 3P, FE வழியே ⇒ $\frac{3P}{2}\underline{i} + \frac{3\sqrt{3}}{2}P\underline{j}$ — (10)

விளையுள் R = $P\underline{i} - \frac{7P}{2}\underline{i} - 4P\underline{i} + 7P\underline{i} + \frac{3P}{2}\underline{i}$ — (30)

$- \frac{7\sqrt{3}}{2}P\underline{j} + 4\sqrt{3}P\underline{j} + \frac{3\sqrt{3}}{2}P\underline{j} = 2P(\underline{i} + \sqrt{3}\underline{j})$



page(


$\overleftarrow{A} = \lambda a h_1 = 2\lambda\Delta \neq 0$ — (5) $\Delta = \Delta ABC$ பரப்பு

$\overleftarrow{B} = \lambda b h_2 = \lambda 2\Delta \neq 0$ — (5)

$\overleftarrow{C} = \lambda c \cdot h_3 = 2\lambda\Delta \neq 0$ — (5)

$\overleftarrow{A} = \overleftarrow{B} = \overleftarrow{C} \neq 0$ — (5)

இணைச் சுழற்சி — (5)




[25]

(7) $P(A/B) = 0 \Rightarrow P(A\cap B) = 0 \Rightarrow A\cap B = \phi$ — ① — (5)

$P(B/C) = 0 \Rightarrow P(B\cap C) = 0 \Rightarrow B\cap C = \phi$ — ② — (5)

$P(A/C) = P(A) \Rightarrow P(A\cap C) = P(A)\cdot P(C) = 3p^2$ — (5)

$P(A\cup B\cup C) = 3p + 2p + p - 0 - 0 - 3p^2 + P(A\cap B\cap C)$

$\frac{11}{12} = 6p - 3p^2 + P(A\cap B\cap C)$

$P(A\cap B\cap C) = 3p^2 - 6p + \frac{11}{12}$ — (5)

①,② ⇒ $A\cap B\cap C = \phi$.

$P(A\cap B\cap C) = \phi \Rightarrow 3p^2 - 6p + \frac{11}{12} = 0$

$\Rightarrow 36p^2 - 72p + 11 = 0$

$\Rightarrow (6p-11)(6p-1) = 0$

$p = 1/6$ — (5)

[25]

(8) $P[C/A\cap B] = \frac{P(A\cap B\cap C)}{P(A\cap B)} = \frac{x}{3/8} \Rightarrow x = \frac{3}{8}\times\frac{5}{8} = \frac{15}{64}$ — (5)

$P(A\cup B\cup C) = \frac{9}{16} + \frac{19}{32} + \frac{11}{16} - \frac{3}{8} - \frac{5}{16} - \frac{7}{16} + \frac{15}{64}$

$= \frac{36+38+44-24-20-28+15}{64} = \frac{61}{64}$ — (10)

$P(A'\cap B'\cap C') = P(A\cup B\cup C)' = 1 - \frac{61}{64} = \frac{3}{64}$ — (10)

[25]

மாறற்குணகம் = $\frac{\text{நியம விலகல்}}{\text{இடை}} \times 100$

20 $\times 100 \Rightarrow$ நி.விலகல் = 200 ரூ


ஓராயக்குணகம் = $\frac{3(\text{இடை} - \text{இடையம்})}{\text{நி.வி}} = \frac{3(1000-750)}{200} = \frac{3}{20} \# = \frac{15}{4}$

நிறையேற்றிய இடை $= \frac{(60\times 3) + (60\times 2) + (60\times 1)}{6} = \frac{360}{6} = 60$ (15) (10) [25]

நிறையேற்றிய இடை $= \frac{\sum x_2 m_2}{\sum m_2}$

page (5)


$\tan\theta = \frac{5}{12}$, $\sin\theta = \frac{5}{13}$, $\cos\theta = \frac{12}{13}$ — (05)




$V_{B,A} = V_{BE} + V_{EA}$


$= v\theta + \overleftarrow{u}$

$= \overleftarrow{u + v\cos\theta} + \uparrow v\sin\theta$ — (15)




$x = \sqrt{v^2\sin^2\theta + (u+v\cos\theta)^2}$

$= \sqrt{v^2 + u^2 + 2uv\cos\theta}$ (15)




(15)

மீண்டும் $d$ தூரம் வர எடுத்தநேரம் $= \frac{2d\cos\alpha}{x}$ (10)

$= \frac{2d(v\sin\theta)}{x^2}$

$= \frac{24vd}{13v^2 + 13u^2 + 10uv}$ (15)


(75)

தொகுதிக்கு

(b) → $0 = MF + m(F - f_2\cos\alpha) + m(F + f_1\sin\alpha) = 0$ — ① (15)

$mg\sin\alpha = m(f_2 - F\cos\alpha)$ — ② (15)

$mg\cos\alpha = m(f_1 + F\sin\alpha)$ — ③ (15)




சமன்பாடு ஒல் பிரதியிட

$0 = (M+m+m)F - m\cos\alpha(F\cos\alpha + g\sin\alpha) + m\sin\alpha(g\cos\alpha - F\sin\alpha)$ Mg

$(M + m\sin^2\alpha + m\cos^2\alpha)F = 0$.

$F = 0$, $f_1 = g\cos\alpha$, $f_2 = g\sin\alpha$ — (10)

C → A இயக்க $\alpha > \pi/4 \Rightarrow f_2 > f_1$, $CA < CB$.

⇒ m துணிக்கை CA வழியே இயங்கி முதலில் வெளியேறும். — (10)

$s = ut + \frac{1}{2}at^2$

$a\cos\alpha = 0 + \frac{1}{2}g\sin\alpha\, t^2$

$t = \sqrt{\frac{2a}{g}\cot\alpha}$. — (10)

[75]

(12) சக்திச்சமன்பாடு

$C + \frac{1}{2}mu^2 = C + mga(1+\cos\theta) + \frac{1}{2}mv^2$


$v^2 = u^2 - 2ag(1+\cos\theta)$. — (30)

$R + mg\cos\theta = mv^2/a$

$R = m[u^2/a - 2g(1+\cos\theta)] - mg\cos\theta$


$= \frac{m}{a}[u^2 - ag(2+3\cos\theta)]$ — (30)

(10)




(9) (E)

# அரசியலில் குதிக்கிறார் அன்னா ஹசாரே


சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே, மக்கள் விரும்பினால் அரசியலுக்கு வருவேன் என கூறியுள்ளார்.

இந்தியாவில் பிரதமர் மன்மோகன் சிங், ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி மற்றும் மத்திய அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டை சுமத்தியுள்ள அன்னா குழு, டெல்லி ஜந்தர் மந்தரில் உண்ணா விரதப்போராட்டத்தில் களமிறங்கியுள்ளது.

இதில் அன்னா ஹசாரே உண்ணா விரதம் மேற்கொள்ளாவிட்டாலும், இவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக மக்கள் மத்தியில் உரையாற்றிவருகிறார்.

மத்திய அரசில் ஊழல் புரிந்த 15 அமைச்சர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரினோம். ஆனால் போராட்டத்தை கைவிடும் படி கேட்டுக்கொள்கின்றனர்.

இப்போராட்டத்தின் முக்கிய நோக்கம், ஜன லோக்பால் மசோதாவை முன்னோக்கியே அமைந்துள்ளது.

அரசியல் கட்சி தொடங்கும் எண்ணம் எனக்கில்லை. இருப்பினும் மக்கள் விரும்பினால் அரசியலில் களமிறங்குவேன் என தெரிவித்துள்ளார்.

அன்னா ஹசாரேவுக்கு கடந்த ஆண்டு முதல் இந்தியாவில் அதிகமான வரவேற்பு உள்ளது. மக்கள் மத்தியில் புகழ்ந்து பேசப்படும் ஒரு சமுதாய தலைவராக மாறியுள்ளார்.

# நேபாளத்திற்கு சுற்றுலா சென்ற 15 இந்தியர்கள் விபத்தில் பலி


நேபாளத்திற்கு சுற்றுலா சென்ற 15 இந்தியர்கள் விபத்தில் சிக்கி பலி

நேபாளத்தில் உள்ள ஆறு ஒன்றில் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 15 இந்தியர்கள் சம்பவ இடத்திலேயே பலியாயினர்.

இந்தியாவை ஒட்டிய நேபாள நாட்டில் அதிகமான இந்துக்கோயில்கள் உள்ளன. இதன் காரணமாகவும் அந்நாடு பிரதான சுற்றுலாஸ்தலம் என்பதாலும் அதிகமான இந்தியர்கள் அங்கு சென்று வருகின்றனர்.

இந்நிலையில் பால்பா மாவட்டத்தில் இந்தியர்களை ஏற்றிக் கொண்டு ருருதாம் என்ற இடத்தை நோக்கி சென்று கொண்டிருந்த பேருந்து ஆற்றுக்குள் பாய்ந்ததில் 9 பெண்கள், 4 குழந்தைகள், 2 ஆண்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

கடந்த 15ஆம் திகதி அன்று மேற்கு நேபாளத்தில் இதே போல் நிகழ்ந்த விபத்தில் 35 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியச் செய்திகள்

## மாணவர்களை பலியெடுத்த பள்ளிக் கூரை

உத்திர பிரதேச மாநிலத்தில் ப்ள்ளி கூரை ஒன்று இடிந்து மாணவர்கள் மேல் விழுந்ததில் சம்பவ இடத்திலேயே 6 மாணவர்கள் உயிரை விட்டனர்.

உத்திர பிரதேசத்தில் உள்ள பிஜ்னோர் மாவட்டம் ஜாலிபூர் கிராமத்தில் உள்ள மன்ஷா தேவி என்ற ஜூனியர் உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் இந்த கோர விபத்து நிகழ்ந்துள்ளது.

பள்ளி முடிந்து மாணவர்கள் வெளியேறிக் கொண்டிருந்த போது திடீரென பள்ளிக் கூடத்தின் மேற கூரை இடிந்தது.

பல மாணவர்கள் வெளியேறி விட்ட நிலையில் 13 பேர் மட்டும் மேற்கூரை விழுந்த இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர். இதில் 6 மாணவர்கள் பரிதாபமாக உயிரை விட்டனர்.

எஞ்சிய 7 மாணவர்கள் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் இது தொடர்பாக அப்பகுதி பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.


## பிரதமரின் ஹெலிகொப்டரில் கோளாறு

பிரதமர் மன்மோகன் சிங் ஹெலிகொப்டரில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே கிளம்பிய சிறிது நேரத்திலேயே கவுகாத்தி திரும்பியதாகவும் தகவல் வெளியாகின.

ஆனால் அதனைத் தொடர்ந்து, அவர் தற்போது மாற்று ஹெலிகொப்டரின் மூலம் கோக்ராஜ்ஹர் புறப்பட்டுச் சென்றுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக, மோசமான வானிலை காரணமாக பிரதமரின் விமானம் கவுகாத்தி திரும்பியதாக இதற்கு முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# பள்ளிச்சிறுமி பலியானதன் எதிரொலி வாகனங்களை முறைப்படுத்த உத்தரவு



சென்னையில், பள்ளிப் பேருந்து ஒன்றில் இருந்த துவாரம் வழியாக 2ஆம் வகுப்புப் படிக்கும் மாணவி சுருதி விழுந்து உயிரிழந்த நிலையில், பள்ளி வாகனங்களை முறைப்படுத்துவது தொடர்பாக புதிய விதிமுறைகளை உருவாக்குமாறு தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாணவி சுருதி, உயிரிழந்த செய்தி வெளியானதும் தமிழகம் முழுவதும் இது தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில், உயர்நீதிமன்றம் தானாகவே அதை ஒரு வழக்காகக் கருதி விசாரிக்க முடிவெடுத்தது. நேற்று, தலைமை நீதிபதி இக்பால் முன்னிலையில் விசாரணை நடைபெற்றது.

நீதிமன்ற உத்தரவின்படி, பள்ளிக் கல்வித்துறைச் செயலர், போக்குவரத்துத் துறைச் செயலர், மெட்ரிக் பள்ளி இயக்குநர் உள்ளிட்ட அதிகாரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானார்கள். இந்தப் பிரச்சினையில், அரசுத் தரப்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள். குறித்து நீதிமன்றத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

பள்ளித் தாளாளர், ஓட்டுநர் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டதாகக் கூறியபோது, கைது மட்டும் போதாது என்று கூறிய நீதிபதிகள், இதை ஏன் கொலை வழக்காக மாற்றக் கூடாது என்று கேள்வி எழுப்பினார்கள்.

பேருந்தை ஆய்வு செய்யாமல் அனுமதியளித்த போக்குவரத்துத்துறை ஆய்வாளர் பணி நீக்கம் செய்யப்பட்டு, அவர் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், பள்ளியை ஏன் மூடக்கூடாது எனக் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

போக்குவரத்துத்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை மட்டும் போதாது என்றும், குற்ற வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என நீதிபதிகள் அறிவுறுத்தினர்.

மேலும், எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க, பள்ளி வாகனங்களை முறைப்படுத்துவது தொடர்பாக புதிய விதிமுறைகளை அரசு உருவாக்க வேண்டும் என நீதிபதிகள் அரசுக்கு உத்தரவிட்டனர்.

வரைவு விதிமுறைகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும், அதை ஆய்வு செய்து நீதிமன்றம் இறுதி முடிவெடுக்கும் எனவும் நீதிபதிகள் அறிவித்தார்கள்.

# பெண் குழந்தை பிறந்ததால் மனைவியைக் கொன்ற கணவன்


தமிழக மாநிலமான கோவையில் இரண்டாவது முறையும் பெண் குழந்தை பிறந்ததால், குறித்த பெண் தனது கணவரால் கொல்லப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கோவையைச் சேர்ந்தவர் பாண்டியராஜன் சாரதியாகப் பணிபுரிகிறார், இவரது மனைவி நாகதேவி. இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டனர்.

இவர்களுக்கு ஒரு வயதில் குழந்தை ஒன்று உள்ளது. இந்நிலையில், கடந்த 40 நாட்களுக்கு முன் நாகதேவி பெண் குழந்தை ஒன்றை பெற்றெடுத் தார்.

ஆண் குழந்தையை விரும்பிய பாண்டியராஜன், மனைவி பெண் குழந்தையை பெற்றெடுத்ததால் ஆத்திரமடைந்து தொடர்ந்து நாகதேவியை துன்புறுத்தி வந்தார்.

அன்று குடித்து விட்டு வந்த பாண்டியராஜன், மனைவி நாகதேவியை வயிற்றில் மிதித்ததில் அவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் பரிதாபமாக இறந்தார். சம்பவம் குறித்து பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.




## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................

முகவரி : ..................................

பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் ..................................

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்தை - தினமுரசு 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# விவாகரத்து கோரி நடிகை வனிதா மனு

தன் இரண்டாவது கணவர் ஆனந்தராஜிடமிருந்து விவாகரத்து கோரி நேற்று மனுத் தாக்கல் செய்தார் நடிகை வனிதா. அவருடன் ஆனந்தராஜும் வந்து கையெழுத்திட்டார்.

நடிகர் விஜயகுமார், நடிகை மஞ்சுளாவின் மூத்த மகள் வனிதாவுக்கும், நடிகர் ஆகாஷுக்கும் திருமணம் நடந்தது.

இவர்களுக்கு விஜய் ஸ்ரீ ஹரி (வயது 10), ஜோவிகா (வயது 7) என்ற குழந்தைகள் உள்ளனர். இந்த நிலையில் வனிதாவுக்கும், ஆகாஷுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, பரஸ்பர விவாகரத்தும் பெற்று விட்டனர்.

பின்னர் ஆனந்தராஜன் என்பவரை வனிதா 2ஆவதாக திருமணம் செய்துக் கொண்டார். இவர்களுக்கு ஜெய்னிதா(வயது 3) என்ற பெண் குழந்தை உள்ளது.


இந்நிலையில் விஜய் ஸ்ரீ ஹரி யாருடன் வாழவேண்டும் என்பதில் வனிதாவுக்கும், முதல் கணவர் ஆகாஷுக்கும் பெரும் சண்டையே ஏற்பட்டது. பின்னர் பலத்த போராட்டத்துக்கிடையே அந்த பிரச்சினை சுமுகமாக தீர்த்து வைக்கப்பட்டது. மகனுக்காக வனிதா தன் இரண்டாவது கணவரை உதறவும் முடிவு செய்தார்.

எனவே 2ஆவது கணவர் ஆனந்தராஜனுடன், வனிதாவுக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டது. எனவே இருவரும் பரஸ்பரம் விவாகரத்து கேட்டு சென்னை முதன்மை குடும்ப நல நீதிமன்றத்தில் கடந்த ஆண்டு மனு தாக்கல் செய்தனர்.

ஆனால் ஜெய்னிதா யாருடன் வாழவேண்டும் என்பது உள்ளிட்ட சில பிரச்சினையில் அவர்களுக்குள் கருத்து வேறுபாடு இருந்ததால், பரஸ்பரம் விவாகரத்து கோரும் மனு ஏற்கப்படவில்லை. தற்போது 2 பேரும் சமரசமாகிவிட்டதாகத் தெரிகிறது.

நேற்று மாலை சென்னை குடும்பநல நீதிமன்றத்திற்கு 2 பேரும் வந்திருந்தனர். பரஸ்பரம் விவாகரத்து கோரும் மனுவில் 2 பேரும் கையெழுத்திட்டு தாக்கல் செய்தனர். இந்த மனு, அடுத்த மாதம் விசாரணைக்கு வருகிறது.

# புகையிரத கூரை மீதான பயணம்; தடுக்க இந்தோனேசியா திட்டம்



இந்தோனேசியாவில் பயணிகள் புகையிரத கூரை மீது பயணிப்பதை தவிர்ப்பதற்காக, மின்சார ஒயரின் உயரத்தை தாழ்த்தி அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில் புகையிரத கூரை மீது பயணிகள் சர்வசாதாரணமாக பயணிப்பதை வாடிக்கையாக கொண்டுள்ளனர்.

இது ஆபத்தானது என பலமுறை பல்வேறு பிரசாரங்களின் வாயிலாக கூறியும், அச்சமில்லாத பயணிகள் தொடர்ந்து கூரை மீது பயணித்து வருகின்றனர்.

கூரை மீது எண்ணெய் தடவி வைத்தும், இவர்கள் அதன் மீதும் சாகச பயணம் மேற்கொண்டு அதிகாரிகளின் முயற்சியை வீணடித்தனர்.

அடுத்த கட்ட நடவடிக்கையாக புகையிரத பாதையில் மின்சார கேபிள்களின் உயரத்தை தாழ்த்தி அமைக்க திட்டமிட்டுள்ளனர்.

புகையிரத கூரையை ஒட்டி மின்சார கேபிளை அமைப்பதன் மூலம் மின்சார தாக்குதலுக்கு பயந்து, பயணிகள் கூரை மீது ஏறமாட்டார்கள் என இந்தோனேசிய ரயில்வே நிர்வாகம் நம்புகிறது.

ஆனால் பயணிகளோ மின்சார கேபிளின் உயரத்தை குறைப்பதற்கு பதில், ரயில் டிக்கெட்டின் கட்டணத்தை குறைக்க வேண்டும் என கருத்து தெரிவித்துள்ளனர்.

# பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் மீண்டும் பதவி ஏற்றார்



இரட்டை குடியுரிமை தொடர்பான வழக்கில் பதவி நீக்கம் செய்யப்பட்ட பாகிஸ்தான் முன்னாள் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் மீண்டும் அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

பாகிஸ்தான் உள்துறை அமைச்சராக பதவி வகித்து வந்த ரஹ்மான் மாலிக்(வயது 60) கடந்த 2008ஆம் ஆண்டு மேல்சபை உறுப்பினரானார்.

அரசு பதவியை வகிக்கும் ரஹ்மான் மாலிக், இரட்டை குடியுரிமை பெற்றுள்ளார் என்று இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டு, வழக்கு தொடரப்பட்டது.

ரஹ்மான் மாலிக் பிரிட்டன் குடியுரிமையை இரத்து செய்து விட்டதற்கான ஆவணங்களை, நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பல முறை அவகாசம் அளித்தும், இதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாததால், ரஹ்மான் மாலிக்கின் நாடாளுமன்ற மேல்சபை உறுப்பினர் பதவியை நீக்கம் செய்து, நீதிபதிகள் கடந்த மாதம் உத்தரவிட்டனர்.

இதனால் இவர் அமைச்சர் பதவி வகிக்க முடியாமல் போனது. இதையடுத்து பிரதமரின் உள்துறை ஆலோசகராக பொறுப்பு வகித்து வந்தார்.

இந்நிலையில் இவர் மீண்டும் மேல் சபை உறுப்பினராக தெரிவாகியுள்ளார். சிந்து மாகாணத்திலிருந்து, மேல்சபைக்கு தெரிவாகியுள்ளதன் மூலம் நேற்று முன்தினம் இவர் அமைச்சராக மீண்டும் பொறுப்பேற்றார். உள்துறை இலாகாவை இவர் மீண்டும் கவனிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சீனாவில் தொடரும் மழை

## 80 பொதுமக்கள் உயிரிழப்பு





சீனத் தலைநகர் பீஜிங் மற்றும் சிலபகுதிகளில் கடந்த ஒரு வாரமாக பெய்து வரும் பலத்த மழையால், கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு இதனால் அணைகள் நிரம்பி வழிந்ததால், தண்ணீர் திறந்து விடப்பட்டது.

சாலைப் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஆயிரக்கணக்கான வீடுகள் சேதம் அடைந்தன.

இந்த மழை- வெள்ளத்திற்கு பலியான நபர்களின் எண்ணிக்கை 80ஆக அதிகரித்துள்ளது. மேலும் பலர் காணாமல் போயுளளனர். இவர்களைத் தேடும் பணிகள் தீவிரமாக நடக்கிறது.

# பர்தாவை விலக்கச் சொன்ன பொலிஸ் அதிகாரிக்கு அடி,உதை



பிரான்சில் பர்தா அணிந்து வந்த பெண்ணை, முக்காட்டை விலக்குமாறு கூறிய பொலிஸ் அதிகாரியை நால்வர் சேர்ந்து அடித்து உதைத்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பொலிஸ் அதிகாரிகள் சந்தேகத்தின் பேரில் முஸ்லிம் பெணகளின் பர்தாவை விலக்கச் சொன்னால், தங்கள் முகத்தைக் காட்ட வேண்டும் என்ற சட்டம் கடந்த 2010ஆம் ஆண்டு பிரான்சில் இயற்றப்பட்டது.

அதன் படி கடந்த 25ஆம் திகதி மார்செய்ல்ஸ் நகரில் முகத்தைக் காட்ட மறுத்த முஸ்லிம் பெண்ணையும், அவளோடு நின்ற நால்வரையும் அதிகாரிகள் கைது செய்தனர். அதன்பின் தலைமை பொலிஸ் அதிகாரி எச்சரித்து பின்பு இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். விடுதலையான இந்த நால்வரும் திரும்பவும் பொலிஸ் அதிகாரிகளை தாக்கக் கூடும் என்ற அச்சம் இருந்து வருகிறது.

ரமழான் மாதமாக இருப்பதால் அவர்களை எச்சரித்து விட்டுவிட்டாலும் இத்துடன் இந்தப் பிரச்சினை ஓய்ந்து விட்டதாக பொலிஸ் அதிகாரிகள் கருதவில்லை. காவலர் தொழிற்சங்கத்தின் தலைவரான டேவிட் ஒலிவியர் ரெவர்டி கூறுகையில், இந்த நால்வரின் நடவடிக்கையால் நாங்கள் அதிர்ந்து போய் இருக்கிறோம் என்றார்.

உலகச் செய்திகள்

# நேட்டோ படைகளுக்கான போக்குவரத்தை நிறுத்தியது

## பாகிஸ்தான்

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள நேட்டோ படைகளுக்கான வாகனப் போக்குவரத்தை பாகிஸ்தான் தற்காலிகமாக நிறுத்தி உள்ளது.

ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள நேட்டோ படைகளுக்குத் தேவையான எரிபொருட்கள் பாகிஸ்தான் வழியாக கொண்டு செல்லப்படுகின்றன.

கடந்தாண்டு நவம்பர் மாதம் நேட்டோ படைகள் தவறுதலாக தாக்குதல் நடத்தியதில், பாகிஸ்தானிய வீரர்கள் 24 பேர் கொல்லப்பட்டனர். இதற்காக அமெரிக்கா மன்னிப்பு கேட்காத காரணத்தால், ஆப்கானிஸ்தானுக்கான பாதையை பாகிஸ்தான் மூடிவிட்டது.

இதனால் நேட்டோ படைகளுக்கான பொருட்களை விநியோகம்



செய்ய இயலாத நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன், பாகிஸ்தான் வீரர்கள் கொல்லப்பட்டதற்கு மன்னிப்புக் கேட்டார்.

அதன் பின் நேட்டோ படைகளுக்கான எரிபொருள் வாகனங்கள் செல்ல, பாகிஸ்தான் அனுமதியளித்தது.

இந்நிலையில் நேட்டோ வாகனப் போக்குவரத்துக்கு அனுமதியளித்தால், அந்த வாகனங்களை குண்டு வைத்து தகர்ப்போம் என தலிபான்கள் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

# அரசு அனுமதி பெற்ற துப்பாக்கியே பன்னிரண்டுபேரின் உயிரைப் பறித்தது

அமெரிக்காவின் செஞ்சூரி 16 திரையரங்கில் தாக்குதல் நடத்த ஜேம்ஸ் ஹோம்ஸ் பயன்படுத்திய துப்பாக்கி, அரசால் அனுமதிக்கப்பட்ட ஒன்று என்ற புதிய தகவல் தற்போது வெளியாகி உள்ளது.

திரையரங்கில் துப்பாக்கிச் சூடு நடத்திய ஜேம்ஸ் ஹோம்ஸ் (வயது 24) மூன்று ரக துப்பாக்கிகளுக்கும் உரிமம் வாங்கி வைத்திருந்தது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவை AR-15 ரை.'.பிள், ரெமிங்டன் 870 ஹாட்கன் மற்றும் 40 - கேலிபர் கிளாக் கைத்துப்பாக்கி போன்றவையாகும்.

இவை தவிர துப்பாக்கிக் குண்டுகளை ஆயிரக்கணக்கில் வாங்கி வைத்துள்ளான். இவையனைத்தும் முறையான உரிமம் மற்றும் அனுமதி தனித்தன்மை வாய்ந்ததோ, சிறப்பு வாய்ந்ததோ கிடையாது. இத்தகவலை கனடா துப்பாக்கிச் சுடுதல் கழகத்தின் நிர்வாக இயக்குநர் டோனி பெர்னாடோ தெரிவித்தார்.

மேலும் அவர், அமெரிக்காவை விட கனடாவில் இந்த துப்பாக்கிகளை வாங்குவதற்கான கெடுபிடிகள் அதிகம். அவற்றை ஓரிடத்தில் வைப்பதற்கும், வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கும் கூட நெறிமுறைகள் உண்டு.

உரிமங்களை வழங்குவதற்கு கனடா ஆயுதங்களின் பாதுகாப்புக் கல்வி பயின்று தேர்வு ஒன்று எழுதி, காவல்துறை பல சோதனைகளைச் செய்து பின்பு தான் ஒருவர் துப்பாக்கியைப் பெற முடியும். சிலர் தேர்வு எழுதாமல் தலைமை அதிகாரியின் ஒப்புதல் மூலமாகவும் பெறுவதுண்டு.

உலகில் அதிகமாகத் தயாரிக்கப்படும் துப்பாக்கி ரெமிங்டனின் தயாரிப்புகள் தாம். இவை மில்லியன் கணக்கில் கனடாவில் புழங்குகின்றன என்றார்.

நீளமான துப்பாக்கியைப் பதிவு செய்யும் முறை ஏப்ரல் மாதம் முதல் ஒழிக்கப்பட்டு விட்டது. இருந்தாலும் துப்பாக்கி வைத்திருப்பவர் RCMPயின் தகவல் தளத்தில் பதிவு செய்ய வேண்டியது கட்டாயமாகும்.



# விதையின் வளர்ச்சியில் அவதானிப்புகள் கண்டிப்பாக இருக்க வேண்டும்



ஒரு விதையின் வளர்ச்சியை அதன் போக்கில் வளர விட்டோமெனில் அது தாறுமாறாக வளர்ந்து அண்டை வீட்டாரின் வசைச் சொற்களுக்கு ஆளாகி, மரத்தையே வெட்டும் நிலை ஏற்படும், அது தவிர்க்கப்பட வேண்டுமாயின் விதையின் வளர்ச்சியில் அவதானிப்புகள் கண்டிப்பாக இருக்க வேண்டும் என ஈ.பி.டி.பியின் வடமராட்சி அமைப்பாளரும், பருத்தித்துறை பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அல்வாய் வடக்கு, மகாத்மா முன்பள்ளி விளையாட்டுப் போட்டி கடந்த 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மகாத்மா சனசமூக நிலைய மைதானத்தில் தலைவர் செ.ரஜனிகாந் தலைமையில் இடம்பெற்றது. இவ் விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எக்காலத்திலும் மனிதனுக்கு வலிமை அளிக்கக் கூடிய கருவி கல்வி, இப்பிரதேச மாணவர்கள் கல்வியில் சிறந்தவர்களாகவும், அறிவு பூர்வமான நற்பிரஜைகளாகவும் உருவாக்க, பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தை தினமும் கண்டிப்பாக அவதானிக்க வேண்டும். இப்பகுதியில் அவ்வாய் சிறிலங்கா பாடசாலையும், அம்பாள் வித்தியாலயமும் உள்ளன. ஆயினும், மாணவர்கள் வரவுகள் குறைவாக உள்ளதாக அறியப்படுகிறது. அரசாங்கம் மாணவர்களுக்கு இலவச சீருடை, இலவசப் புத்தகங்கள், அமர்ந்து கற்பதற்கான தளபாடங்கள், மதிய உணவு, பால், முட்டை எனப் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்த போதும் பெற்றோர்களின் பங்களிப்பு குறைவானதாகவே உள்ளது. பாடசாலைகளுக்கு மாணவர்களின் வரவு குறைவாக இருக்கின்றமை, பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர்களது கவனம் எத்தகைய நிலையில் உள்ளது என்பதை அளவிடக் கூடியதாக இருக்கின்றது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளை அவரவர் போக்கில் விட்டுவிடுவார்களாயின் அவர்களது எதிர்காலம், குறித்த இலக்கை எட்டமுடியாமல் போய்விடும். எனவே பிள்ளைகளின் வளர்ச்சியில் அவதானிப்புகள் கண்டிப்பாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிராம அலுவலர் சோ. கிருஸ்ணராஜா, கௌரவ விருந்தினர்களாக ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் ரி.சதீஸன், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பரமேஸ்வரி யோகராசா, சிறப்பு விருந்தினர்களாக சீமா ஆலடி இணைச் செயலாளர் க.சின்னராசா, ஆசிரியை பா.மதனரூபி, முன்னாள் மகாத்மா சனசமூக நிலையத் தலைவர் த.யோகநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மன்னார்....

உடன்படிக்கைக்கு அமைய வெளியிட்டுள்ளது. 30 ஆண்டுகளுக்கு பின்னர் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான அகழ்வாராய்ச்சி பணிகளாக இது உள்ளது.

ராஜஸ்தானில் 100 மில்லியன் பீப்பாய்களுக்கு அதிகமான எரிபொருள் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் இது ஒரு மைற்கல்லாகும். எமது உற்பத்தி அதிகரிப்பு காரணமாக எரிபொருள் இறக்குமதிக்கு செலவாகும் நிதியிலிருந்து 9 பில்லியன் அமெரிக்க டொலர்களை குறைத்துக்கொள்ள முடிந்துள்ளது. அத்துடன் திறைசேரிக்கு 3 பில்லியன் அமெரிக்க டொலர்களையும் நாம் ஈட்டிக்கொடுத்துள்ளோம் என கெய்ன் இந்திய நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ராகுல் தீர் தெரிவித்துள்ளார்.

10 இடங்களில் கெய்ன் அகழ்வாராய்ச்சிகளில் ஈடுபடுகின்றது. இவை அனைத்தும் மூன்று பகுதிகளை உள்ளடக்கிய வகையில் உள்ளது. ராஜஸ்தானில் ஒரு பகுதியிலும், இந்தியாவின் மேற்கு கரையில் மூன்று இடங்களிலும், கிழக்கு கடற்பரப்பில் ஆறு இடங்களிலும் பணிகள் இடம்பெறுகின்றன. இலங்கையின் ஆழ்கடலில் மேற்கொள்ளப்படும் அகழ்வாராய்ச்சிகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கெய்ன் இந்தியாவை தாய் நிறுவனமாக கொண்டுள்ள கெய்ன் லங்கா நிறுவனம் கடந்தாண்டு மன்னார் கடற்பரப்பில் SL 2007 -01-001 பகுதியில் முதற்கட்ட எண்ணெய் அகழ்வுப் பணிகளை வெற்றிகரமாக நிறைவுசெய்தது. 1,753 சதுரகிலோமீற்றர் பரப்பளவில் 3D தரவுகள் மூலம் அதிர்வுகள் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு முதற்கட்டமாக மூன்று கிணறுகள் துளையிடப்பட்டன. இவற்றின் முடிவுகளின் அடிப்படையில் CLPL Dorado-91H/1z மற்றும் CLPL-Barracuda-1G/1 ஆகிய இரண்டு கிணறுகளிலிருந்து எரிவாயு கண்டெடுக்கப்பட்டது.

## கிழக்குத்...

சபையின் முன்னாள் உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட தலைமை வேட்பாளருமான அரசரட்ணம் சசிதரனின் இல்லத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது, தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள், கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு அறிமுக்கப்படுத்தி வைக்கப்பட்டனர். கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொள்ளவுள்ள பிரசார நடவடிக்கைகள் தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கொழும்பு மாநகர சபை மேயர் எ.ஜே.எம்.முஸம்மில் மற்றும் மேல்மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் றஹ்மான் உட்பட மாகாண சபை உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் உயர் மட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## பிடியாணை...

அவர் இதனைத் தெரிவித்தார். இந்தக் காலப் பகுதியில் மேற்படி பகுதிகளில் சட்டவிரோத மது பாவனை சம்பந்தமாக ஐந்து வழக்குகளும், கஞ்சா சம்பந்தமாக நான்கு வழக்குகளும் நீதிமன்றில் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, குடிபோதையில் வாகனம் செலுத்தியமை தொடர்பாக 10 வழக்குகளும், சூழலிற்கு பங்கம் விளைவித்தமை தொடர்பாக 18 வழக்குகளும், மாடு வெட்டியது சம்பந்தமாக ஐந்து வழக்குகளும், பொது இடங்களில் மது போதையில் இடையூறு விளைவித்தமை தொடர்பாக 40 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். (பா)

## நல்லூரில்...

தொடர்புடைய ஹயேர்ஸ் வாகனமும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டமை தெரிந்ததே.

இதனையடுத்து நல்லூர் திருவிழாக் காலங்களில் பாதுகாப்பில் ஈடுபடும் பொலிஸாரின் எண்ணிக்கையும் 600 இல் இருந்து 750 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பிட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வரும் விசேட திருவிழாக்காலங்களில் மக்கள் தொகைக்கேற்ப பாதுகாப்புப் பொலிஸாரின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் திட்டமிட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் இந்தச் சம்பவத்திற்குப் பின்னர் இவ்வாறான சம்பவம் எதுவும் நல்லூர் திருவிழாவின் போது பதிவு செய்யப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த சம்பவத்தின் போது புத்தளம், மட்டக்களப்பு, சிலாபம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் ஹயேர்ஸ் வாகனத்தின் உரிமையாளரும், சாரதியும் அடங்குவததாகவும் தெரியவருகிறது. இவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும், திருட்டு போன நகைகளின் பெறுமதி சுமார் எட்டு இலட்சம் எனவும் தெரியவருகிறது. (பா)

## மூல்லையில்...

கைத்தொழில் அபிவிருத்திசபை முகாமையாளர் ஜஸ்மின் மன்னப்பெரும, யாழ்.கைத் தொழில் அபிவிருத்திச்சபைப் பணிப்பாளர் கெங்காதரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## இந்திய அணி வெற்றி



இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

நேற்றைய போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 286 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 49.4 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 288 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. ஐந்து ஒருநாள் போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரில் இந்திய அணி இரண்டிற்கு ஒன்று என்ற நிலையில் முன்னிலையில் உள்ளது.

## அரசின்...

இளைஞர்கள் சிலர் நாட்டைவிட்டு தப்பிச் செல்வதற்கு மேற்படி வேட்பாளர் உதவியிருக்கலாம் எனவும் அதை மனிதக் கடத்தல் என தான் வர்ணிக்க விரும்பவில்லை எனவும் சம்பந்தன் தெரிவித்தார்.

தம்மை கொடுங்கோலாட்சிக்குள்ளாக்கும் ஒரு நாட்டிலிருந்து மக்கள் தப்பிச் செல்கின்றனர். இந்நபர், அரசியல் ரீதியாக எம்மை ஆதரிக்கும் ஒரு குடும்பத்திலிருந்து வந்தவர். ஆனால் இவர் கடந்த தேர்தலில் பிரதியமைச்சர் சுசந்த புஞ்சிநிலமேவை ஆதரித்தவர். கைது செய்யப்பட்டிருந்த சுமார் 30 இளைஞர்களை, பாதுகாப்பு அதிகாரிகளுடன் தொடர்புகொண்டதன் மூலம் விடுவிக்க இவரால் முடிந்தது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் கூறினார்.

ஆனால், இவர் சட்டவிரோத படகுகள் மூலமாக ஆட்கடத்தல் நடவடிக்கைகள் பலவற்றை ஒருங்கிணைத்து நடத்தியுள்ளார். இவரின் ஏற்பாட்டில் ஆட்கடத்தலில் ஈடுபட்ட படகு ஒன்று நடுக்கடலில் விபத்துக்குள்ளாகியது. அதில் சென்றவர்கள் தமது உடமைகளைக் கைவிட்டு வேறு சிறிய படகுகளில் அப்பகுதியில் இருந்து தப்பிச் சென்றுவிட்டனர் விபத்துக்குள்ளாகிய படகை கடற்படையினர் மீட்டெடுத்து அதனைச் சோதனையிட்ட போது தடுப்பு முகாம்களில் வழங்கப்பட்ட அடையாள அட்டைகள் மற்றும் புனர்வாழ்வு மையங்களில் வழங்கப்பட்ட சில ஆவணங்களும் அங்கிருந்து மீட்டெடுக்கப்பட்டது.

## நீண்டகாலக்...

பிரதேச மக்களினால் குறிப்பாக மயானத்தைப் பயன்படுத்தும் இந்து மக்களினால் இவ்விடயமானது பலமுறை பிரதேச சபை நிர்வாகத்திற்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. உள்ளூராட்சிசபை தேர்தல் காலத்தில் மக்களின் அடிப்படைத் தேவை குறித்து எதுவும் கூறாது தமிழ்த் தேசியம் மட்டுமே பேசி மக்களின் இரத்தத்தைச் சூடேற்றி வாக்கு வேட்டை நட்த்திய த.தே. கூட்டமைப்பினர் தேர்தலில் வென்றபின்னர் மக்களுக்கு எவ்வித சேவையும் செய்யாது காலத்தைக் கடத்தி வருவது தெரிந்ததே.

அந்த வரிசையில் மூளாய் பித்தனை இந்து மயானமும் சேர்ந்து கொண்டது. அந்த மண்டபக்கூரையை முன்னர் அமைத்துக் கொடுத்தவர் அதே ஊரைச் சேர்ந்த முருகேசு கதிர்காமத்தம்பி ஆவார். அவர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பதவியில் இருப்பவர். யுத்தத்தினாலும் கடந்த கால இயற்கை அனர்த்தங்களினாலும் சேதமடைந்த மேற்படி கூரை தொடர்பாக ஒரு வருடத்திற்கு மேலாக வலி. மேற்கு பிரதேச சபையிடம் பல முறை அவர் முறையிட்டும் எதுவித நடவடிக்கையும் பிரதேசசபை நிர்வாகத்தால் மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் ஈ.பி.டி.பியின் சித்தங்கேணி அலுவலகத்தை தொடர்புகொண்டு ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் அமைப்பாளரும் வலிகாமம் பிரதேச சபை எதிர்கட்சித் தலைவருமாகிய சிவகுரு பாலகிருஷ்ணன் (ஜீவன்) இடம் கதிர்காமத்தம்பி வேண்டுகோள் விடுத்தார். அவர் வேண்டிக் கொண்டதற்கு இணங்க நேற்றுக்காலை மயான மண்டபத்திற்கு ஈ.பி.டி.பி உறுப்பினர்களுடன் சென்ற ஜீவன் கட்சித் தொண்டர்களுடன் சேர்ந்து கூரை ஓடுகளை செப்பனிட்டார்.

## ஆட்கடத்தல்களைத்...

அந்நாட்டு வான் கண்காணிப்பு தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி இலங்கைக் கடற்படையினர் ரோந்துப் பணிகளை மேற்கொள்வர் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புகலிடக் கோரிக்கையாளர்களை கட்டுப்படுத்த வேண்டுமாயின் இரு நாடுகளுக்கும் இடையில் உயர் மட்ட ஒத்துழைப்பு காணப்பட வேண்டுமென கடற்படைப் புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் நிசாந்த உலுகுதென்ன தெரிவித்துள்ளார். குறிப்பாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களம், எல்லைப் பாதுகாப்பு, கரையோரப் பாதுகாப்புப் பிரிவு போன்ற பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு காணப்படு வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். ஒருவரை நாடு கடத்துவதன் மூலம் மட்டும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது எனவும், அதிகளவான புகலிடக் கோரிக்கையார்களை திருப்பி அனுப்புவதன் மூலம் புகலிடக் கோரிக்கையாளர் படகுகளை தடுக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பாகிஸ்தான்...

அமைச்சு நேற்றுத் தெரிவித்துள்ளது.

அதேவேளை, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸின் அழைப்பின் பேரில் ஓகஸ்ட் 1 முதல் 3 ஆம் திகதிவரை பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஹினா ரப்பானிகார் இலங்கைக்கு விஜயம் செய்வார் என வெளிவிவகார அமைச்சு முன்னர் அறிவித் திருந்தமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை சம்பூரில் அணுமின் நிலையமொன்றை அமைப்பதற்கு பாகிஸ்தானின் உதவியை இலங்கை பெறவுள்ளதாக இந்திய ஊடகங்கள் பொய்யான செய்திகளை வெளியிடுவதாக மின்சக்தி வலுசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

சீனாவின் செல்வாக்கிற்குள் இலங்கையை வைத்திருப்பதற்காக இத்திட்டத்தை பாகிஸ்தான் வடிவமைத் துள்ளதாக இந்தியா டுடே இணையத்தளத்தில் ஜூலை 24 ஆம் திகதி குறிப்பிடப்பட்டிருந்தது. இது குறித்து அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறுகையில், இத்தீவில் எங்குமே அணுமின் நிலைய மொன்றை அமைப்பதற்கு நாம் தீர்மானிக்கவில்லை. அவ்வாறான திட்டத்திற்காக எந்த வெளிநாட்டுடனும் நாம் கலந்துரையாடவில்லை. இந்தியா டுடே யில் வெளியான செய்தி முற்றிலும் பொய்யானது என்றார்.


# உணவுப் பாதுகாப்பு தீவிர கண்காணிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் கோதுமை மா மற்றும் உணவிற்காகப் பயன்படுத்தும் மா வகைகளினை பங்கிடுதல், விற்பனைக்கு காட்சிப்படுத்தல், பொதி செய்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை செய்தல் தொடர்பில் கடுமை யான சட்டத்தைக் கடைப்பிடிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பொதுமக்களின் நலனுக்கு ஒவ்வாத வகையில் கோதுமை மாவினை கையாள்வதாக நாடு முழுவதிலும் இருந்து தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளில் அதிகளவான மக்கள் விஷமான உணவை உட்கொண்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டதாக வைத்தியசாலை தரப்புக்கள் தெரிவித்துள்ளன. இந்நிலை தொடர்பில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, உணவு பாதுகாப்பு செயற் குழுவுடன் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியுள்ளார். இந்த கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி எதிர்வரும் நவம்பர் மாதம் தொடக்கம் இந்தப் பரிசீலனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

# யாழ். நகரில் விபத்து வழக்குப் பதிந்தார்களா?



(யாழ்ப்பாணம்)

முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளை மோதிய பொலிஸ் வாகனத்தினால் மோட்டார் சைக்கிள் ஆட்டோவுடன் மோதுண்டதில் மூன்று வாகனங்களும் சிறு சேதத்திற்க்கு உள்ளாகின.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தின் முன்னால் இந்த விபத்து நேற்று நண்பகல் 12.45 மணியளவில் இடம்பெற்றது. யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்குச் சொந்தமான ஜீப் வண்டியே விபத்தில் சம்பந்தப்பட்டது.

குறிப்பிட்ட பொலிஸார் வாகனம் ஒன்று விபத்தில் அகப்பட்டால் மேற்க்கொள்ள வேண்டிய பொலிஸ் நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளாது அந்த இடத்தில் இருந்து சென்று விட்டதாகச் சம்பவத்தைப் பார்த்துக் கொண்டு இருந்த பொதுமக்கள் தெரிவித்தனர்.

# விஸ்வரூபம் எடுக்கிறது போதை வர்த்தகம்



பிரபுக்கள் என்ற போர்வையில் சர்வதேச போதைப் பொருள கடத்தல்காரர்கள் நாட்டுக்குள் பிரவேசிக்க முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கட்டுநாயக்க விமான நிலையத்தின் கிறீன் செனல் வழியாக நாட்டுக்குள் பிரவேசிக்கும் நபர்கள் பரிசோதனை செய்யப்படுவதில்லை. இந்த வழியாகப் பிரபுகள் மற்றும் முக்கியஸ்தர்கள் நாட்டுக்குள் பிரவேசிக்கின்றனர்.

இந்த வழியைப் பயன்படுத்தி போதைப் பொருள் கடத்தல்காரர்கள் நாட்டுக்குள் போதைப் பொருட்களை கடத்த முயற்சித்துள்ளனர். எதிர்வரும் காலங்களில் கிறீன் செனல் வழியாக பிரபுக்களைப் போன்று நாட்டுக்குள் பிரவேசிக்கும் போதைப் பொருள் வர்த்தகர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பிரபுக்களைப் போன்று ஏற்கனவே நாட்டுக்குள் போதைப் பொருட்கள் கடத்தப்பட்டுள்ளனவா என்பது பற்றி விசாரணை நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

## வெடிபொருட்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் முல்லைத்தீவு மாவட்டம் இரணைமடுப் பகுதியில் ஒரு தொகுதி வெடிபொருட்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டிருப்பதாகப் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

மோட்டார்க் குண்டுகள், கைக்குண்டுகள் மற்றும் வெடி பொருட்கள் இவற்றில் அடங்குவதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன. மேலும் கடந்த 20 ஆம் திகதியே இந்த வெடி பொருட்கள் மீட்கப்பட்டிருப்பதாகவும் மேலும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன. (பா)


# அமைச்சர் றிசாத்திற்கு எதிராக சட்டத்தரணிகள் சங்கம்



அமைச்சர் றிசாத் பதியுதீன் விவகாரத்தில் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் பகிரங்கமாகத் தலையிடுவது குறித்து நேற்று ஒன்றுகூடி முடிவெடுக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது. முன்னதாக மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் சிலரும் காலியைச் சேர்ந்த சட்டத்தரணிகளும் அமைச்சர் றிசாத் பதியுதீனிற்கு எதிராக வழக்குகளை தாக்கல் செய்திருந்தனர்.

எனினும் நேற்று இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் ஒன்றுகூடி சங்கத்தின் சார்பில் வழக்குகளை நேரடியாகத் தாக்கல் செய்வது தொடர்பான இறுதி முடிவுகளை எடுத்ததாகத் தெரியவருகின்றது. இதனிடையே நேற்று முன்தினம் மதிய வேளைத் தொழுகையின் பின்னர் கண்டணப் போராட்டம் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் சில இடங்களில் இடம் பெற்றன.

# முற்றிலும் இலங்கை நிதியில் தெதுறு ஓயா நீர்த்தேக்கத் திட்டம்



வாரியபொல மினுவன்கெட பிரதேசத்தில் அமைக்கப் பட்டுவரும் தெதுறு ஓயா நீர்த்தேக்க அபிவிருத்தித் திட்டம் முழுக்க முழுக்க இலங்கையின் நிதியில் அமைக்கப்பட்டு வருகின்றது. இலங்கையின் ஆறாவது பெரிய நதியான தெதுறு ஓயாவின் குறுக்காக அணைகட்டி நீர்த்தேக்கம் உருவாக்கும் திட்டத்துக்கு 6200 மில்லியன் ரூபா செலவிடப் படுகின்றது.

முற்றிலும் இலங்கை நிதியைப் பயன்படுத்தி உள்ளூர் பொறியியலாளர்களைக் கொண்டே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் 50 ஆயிரம் மக்களுக்கு குடிநீர் வசதியும் புதிதாக 1600 ஹெக்டேயர் வயல்களுக்கு நீர்ப்பாசனமும் கிடைக்கும் இப்பிரதேசத்தில் உள்ள 9505 ஏக்கர் பயிர்ச் செய்கை நிலங்களுக்கும் நீர்ப்பாசன வசதி வழங்கப்படும். மேலும் இத்திட்டத்தின் கீழ் 1.5 மெகா வெட் மின்சார உற்பத்தியும் மேற்கொள்ளப்படும். இப்பிரதேசத்தில் உள்ள 300 சிறிய குளங்களுக்கு நீர் வழங்கப்படும். இவ்வருட இறுதியில் இத்தேக்கத்துக்கு நீர் நிரப்பும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கபட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# சம்பூர் அனல் மின் நிலையம் இந்தியாவுடன் மட்டுமே ஒப்பந்தம்

(கொழும்பு)

சம்பூர் அனல் மின் நிலையம் தொடர்பில் இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட எந்தவொரு நாட்டுடனும் ஒப்பந்தம் செய்யவில்லை என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளதாக இந்திய ஊடகத் தகவல்கள தெரிவிக்கின்றன. இந்திய உதவியுடன் அமைக்கப்படும் சம்பூர் அனல் மின் நிலையத்திற்கு இலங்கை ஒரே நேரத்தில் பாகிஸ்தானின் உதவியையும் பெறுவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இந்தக் குற்றச்சாட்டுக்களை மறுத்த அமைச்சர் அவ்வாறாக இலங்கை எந்தவொரு நாட்டுடனும் ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை எனத் தெரிவித்தார்.


# அரச நிறுவனங்களில் டெங்கு நுளம்புக் குடம்பிகள்

பம்பலப்பிட்டியில் மேற்கொளளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது நான்கு அரச நிறுவனங்களில் டெங்கு நுளம்புக் குடம்பிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. பிரதேசத்திலுள்ள 30 இற்கும் அதிகமான அரச நிறுவனங்களில் நேற்று சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் குறிப்பிடுகின்றது. பொலிஸாரின் உதவியுடன் இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பம்பலப்பிட்டி பிரதேசப் பிரபல மகளிர் பாடசாலையொன்றிலும் நுளம்புக் குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மேலும் தெரிவிக்கின்றது.

இதேவேளை டெங்கு நுளம்பு பரவும வ்கையில் சூழலை அசுத்தமாக வைத்திருந்த பண்டாரவளையைச் சேர்ந்த 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பண்டாரவளை மாநகரசபை சுகாதாரப் பிரிவு தெரிவிக்கின்றது. கைது செய்யப்பட்ட நபர்களில் அரச உத்தியோகத்தர்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# நல்லூருக்கு சீரான மின்சாரம்



நல்லூர் கந்தசுவாமி கோவில வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு அடியார்களின் நன்மை கருதி சீரான மின் விநியோகத்தை மேற்கொள்வதற்கு பாரம் பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கு அமைவாகவும் யாழ் மாநகரப் பகுதிக்குள் சீரான மின் விநியோகத்தை வழங்குவதற்கு கொழும்பில் இருந்து 250 KVA (மின்பிறப்பாக்கி) தருவிக்கப்பட்டுள்ளது. அதனை வைமன் வீதியில் உள்ள மின்மாற்றியுடன் இணைத்து தடையின்றி இன்று முதல் மின் விநியோகத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை மாநகர மக்களிற்கு மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூலை 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.